
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

செப்டம்பர் - 2002
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00



பாபாவும்
பக்த கேடிகளும்



தாயின் கண்பட்ட தஞ்சையிலே எலிக்கறி
நாயுடன் பந்தி - நெசவுக்கு கஞ்சித்தொட்டி
வாய் திறந்தார் மாணவர்கள் - மதுரையிலே ரத்தவெறி
போ என்றால் போய்விடுமா - போராடு

# இது பேயாட்சி!

படிப்பகம்

www.padippakam.com




## அவாளின் ராச்சியமா?

''மடங்கள், மர்மங்கள், 'ஆ'தீனங்கள் - திகில் ரிப்போர்ட்'' என்று திருவாவடுதுறை மர்மத்தை எழுதியிருக் கிறார்களே என்று குமுதம் (5.8.2002) இதழைத் திருப்பினால் அதையெல்லாம் அள்ளி விழுங்கும் மர்மம் ஒன்று உள்ளே இருந்தது.

சப்-ஜூனியர் சங்கராச்சாரி குளித்து விட்டுச் செபம் செய்ய 'சிந்து நதி'க்குப் போன செய்தியை பாலகுமாரனின் பேனா 'ஓவியமாக'த் தீட்டியிருக்கிறது. எல்லையில் இராணுவத்தினரின் வச முள்ள இடம் என்பதால் அவர்கள் சரி என்றால்தான் போகமுடியும். ''அரசு சரி என்று சொல்ல என்ன தடை!'' என்று அடுத்தவரியில் பாலகுமாரன் எழுது கிறார். 'இவாள் கேட்டால் மத்திய அரசில் அவாள் மறுக்கவா போகிறாள்?''- என்ற திமிர் தெரிகிறதா?

நதி தீரத்துக்குச் செல்லும் முன்னால் இராணுவ டாக்டர்கள் பரிசோதனை; மேற்பார்வை. இந்த அளவு ஒரு சாதாரண சிப்பாய்க்குக் கிடைக்காது. இராணுவத் தினர் சப்-ஜூனியரைப் பேசக் கூப்பிட் டார்கள் - 'வாழ்க்கை இங்கு கடினமானது தான்' என்று மெல்ல சிரித்தபடி விவரித் தார்கள் இராணுவத்தினர். உடனே, ராஜகு ருவுக்கு அவர்களைச் சாந்தப்படுத்திச் சொர்க்கம் வழங்கும் கடமை நினைவுக்கு வந்துவிட்டது. ''நீங்கள் சொல்வது வேலையில்லை; நீங்கள் சம்பளத்துக்கு வேலை செய்யவில்லை; தபஸ் செய்கி றீர்கள்'' என்று இந்துமதப் போதை மருந்து கொடுத்து வலியை நீக்கப் பார்த்தார்.

''தென்திசையிலிருக்கும் பக்த கோடிகள் ஆகஸ்ட் - செப்டம்பர் மாதத்தில் சிந்துநதி சென்று 'ஸ்நானம்' முடித்துப் புது அனுபவம் பெறலாம். எப்படிப் போவது என்பதை அரசையே விளம்பரமாகச் செய்யச் சொல்கிறேன்'' என்று காஞ்சிபுரம் திரும்பிய ராஜகுரு பேசினாராம். அரசே எனக்கு நெருக்க மானதுதான் என்கிற தோரணை.

சப்-ஜூனியர் - ராஜகுருவின் சிந்து நதி விஜயம் சர்வ அலங்காரத்துடன் வெளிவருகிறது; அதே இதழில் திருவா வடுதுறை மடம் நாறடிக்கப்படுகிறது. பார்ப்பன - பனியா தர்மம் குமுதத்தில் எப்படி அச்சாக வருகிறது பார்த்தீர்களா?

***

## ஆசியப் பாடகனின் லட்சியத் தாகம்

பாப் பாடகர் (இங்கிலாந்து) டி.ஜே. ஜான் பண்டிட் பிரிட்டிஷ் அரச குடும்பத் தின் 'ராஜ மரியாதை' மிக்க 'பிரிட்டிஷ் சாம்ராச்சிய உறுப்பினர்' (எம்.பி.இ) என்ற பட்டத்தைப் புறக்கணித்தார். அந்தப் பட்டம் அவரது இசைத்துறைச் சேவைக் காக அளிக்கப்பட்டது.

இசைத்துறைச் சேவை என்று அரச குடும்பம் கருதுவதுவேறு; ஜான் கருது வது வேறு. இவர் இனவெறி எதிர்ப்பு இயக்கத்தில் முன்னணியில் நிற்கிறார்; பிரிட்டனில் ஓர் இனவெறிச் சம்பவத் துக்குப் பின் வெள்ளையன் ஒருவன் கொல்லப்பட்ட போது, சத்பால்ராம் என்பவர் கைது செய்யப்பட்டார். அதற் கெதிராக இயக்கம் நடத்தி நீண்ட நாட்க ளுக்குப் பிறகு அவரை விடுவித்தார். இது போலக் குடியுரிமைப் போராட்டங்களில் தொடர்ந்து போராடி வருகிறார் ஜான்; 'போராட்ட இசைக் குழு' ஒன்றை நடத்தி வருகிறார்; ஆசிய, கறுப்பினப் பாட கர்கள், இசைத்துறையினருக்கான உத விகள் செய்ய பிரிட்டன் சமூகத்திலிருந்து நிதி வசூலிக்கும் 'சமூக இசை'க் குழுக் களை ஜான் அமைத்திருக்கிறார்.

ஜானின் தந்தை இந்தியர்; தாய் அயர் லாந்து. இரண்டு நாடுகளுமே பிரிட் டனின் காலனிய ஒடுக்குமுறையைக் கண்டவை. அதனால்தான், அரச குடும்பத் தின் பட்டத்தைப் புறக்கணித்ததற்கான காரணத்தை அவர் அறிவித்தபோது, இது போன்ற பட்டங்கள் தனது முன்னோர்கள் மீது பிரிட்டிஷ் சாம்ராச்சியம் ஆதிக்கம் செலுத்திய காலனிய காலத்தை நினை வுக்குக் கொண்டு வருகின்றன என்றார். புதிய வகை வடிவத்தில் அமெரிக்கா தலைமை ஏற்கும் ஏகாதிபத்திய உலக ஆதிக்கம் நடக்கின்ற இன்றைய கட்டத்தில் இப்பிரச்சினை கூடுதல் முக்கி யத்துவம் உள்ளது என்றார் ஜான்.

'பிரிட்டிஷ் சாம்ராச்சியக் கட்டளை'யை (ஓ.பி.இ) ஏற்க மறுத்த ஆங்கிலேய எழுத்தாளர் டோரிஸ் லெஸ்ஸிங், வியத்நாமில் அமெரிக்கா போர் தொடுத்ததையும், ஆப்பிரிக்கா மீதான சுரண்டலையும் பிரிட்டன் ஆதரித்த போது அவற்றை எதிர்த்து எம்.பி.இ. பட்டத்தைத் திருப்பிக் கொடுத்து தன் எதிர்ப்பைக் காட்டிய 'பீட்டில்ஸ்' பாட கரான ஜான் லெனான் வரிசையில் ஜான் பண்டிட் சேர்ந்திருக்கிறார்.

தான் முன்னேறியவுடன் தன் துறையின் எதிர்காலம் பற்றியோ, தன் சக கலைஞர்களின் வறுமை பற்றியோ எந்தக் கவலையும் கொள்ளாமல் நாத பிரும்மங் களாக, இசைஞானியாக, உலகமயக் கைக்கூலிகளாக வலம் வரும் தமிழக இசைக்கலைஞர்கள் மற்றும் உலகக் கலை ஞர்களை நாம் பார்க்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் ஜான் பண்டிட் நாம் பின்பற்ற வேண்டிய இசை முன்னோடி!

***

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்....



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக்
கழக மாத இதழ்

• போர்: 20
• குரல்: 4
• செப்டம்பர் - 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டுச் சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொ.பேசி எண்: 044-3718706

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# பேயாட்சியில் பிணம் தின்னும் கழுகுகளுக்குக் கொண்டாட்டம்!

பத்தாண்டுகளுக்கு முன்பு, தர்மபுரி மாவட்டம் வாச்சாத்தி கிராமத்தில் நடந்த அந்தச் சம்பவம் மீதான வழக்கு கிருஷ்ணகிரி குற்றவியல் அமர்வு நீதிமன்றத்தில் இப்போது விசாரணைக்கு வந்திருக்கிறது. அந்தச் சம்பவத்தை கொடூரம், குரூரம், வக்கிரம், அக்கிரமம், அட்டூழியம் - இப்படி எந்தச் சொல்லாலும் சித்தரிக்க முடியாது. எதிரிநாட்டுக் கிராமத்தை ஆக்கிரமித்திருக்கும் பாசிச பயங்கரவாதப் படை கூட இத்த கைய கொடுஞ் செயலைப் புரியத் துணியுமா என்பது சந்தேகமே.

வாச்சாத்தி கிராம மலைவாழ் மக்கள் சந்தனமரக் கடத்தலில் ஈடுபட்டிருப்பதாகக் காட்டிலாகா அதிகாரிகளுக்கு ஒரு புகார் வந்ததாகக் கூறிக்கொண்டு 1992-ஆம் ஆண்டு ஜூன் 21, 22-ந் தேதிகளில் 155 காட்டிலாகா ஊழியர்கள், 108 போலீசார், 6 வருவாய்த்துறை அதிகாரிகள் படையெடுத்தனர். முதல்நாள் 15 டன் சந்தன மரங் களைக் கைப்பற்றியதாக கூறிக் கொண்டு 89 பெண்களையும், 15 ஆண்களையும் இழுத்துப் போயினர்; இரண்டாம் நாள் 62 டன் சந்தன மரங்களைத் தோண்டி எடுத்த தாகக் கூறிக் கொண்டு 97 பெண்களையும், 84 ஆண்களையும் இழுத்துக் கொண்டு போயினர். அந்தக் கிராமமே சந்தன மரக் கடத்தலில் ஈடுபட்டு வந்ததாகவும், காட்டி லாகா - போலீசு நடவடிக்கையால் 77 டன் சந்தனமரங்கள் கைப்பற்றப்பட்டு, 185 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கப்பட்டது. ஆனால் நடந்தது என்ன?

வாச்சாத்தி கிராமத்தில் காட்டிலாகா - போலீசு கூட்டுப்படை புகுந்து பயங்கரவாத கொடூரங்கள் - அட்டூழியங்கள் புரிந்ததாகவும், மலைவாழ் இனப் பெண்கள் 18 பேர் கும்பல் பாலியல் வன்முறைக்குப் பலியாகி இருப்பதாகவும் சில மாதங்கள் கழித்து செய்தி கசிந்தது. அப்போது தமிழ்நாட்டில் கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்த ஜெய லலிதா - தேவாரம் கும்பல் அந்தக் குற்றச்சாட்டுகளை அடியோடு மறுத்தது. நாடாளு மன்றத்தில் பிரச்சினை எழுப்பப்பட்டு, சி.பி.(எம்) கட்சி வழக்குத் தொடுத்து மன்றா டிய பிறகு சி.பி.ஐ. விசாரணை நடந்து, குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்ட பின் 269 அரசாங்க ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மீது வழக்குப் பதிவானது.

அதன்பிறகு இந்த வழக்கில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகக் காட்டிலாகா - போலீசுத் துறையினர் தமக்கேயுரிய கிரிமினல் அனுபவத்தோடு செயல்பட்டனர். இந்த வழக்கை அவர்கள் சார்பாக நடத்துவதற்காக லட்சம் லட்சமாகத் தமது துறை யினர் மூலம் நிதி வசூலித்தனர். சேலம் சிறைக்குள் அடையாள அணிவகுப்பு நடந்த போது, சம்பந்தப்பட்ட காட்டிலாகா - போலீசு குற்றவாளிகள் அதற்குப் பலமுறை வராமல் ஒத்தி வைத்தனர். ஒவ்வொரு முறையும் ஏழை வாச்சாத்தி கிராமத்தினர், வேலையை விட்டு விட்டு வந்து போக முடியாமல் திண்டாடினர். அடையாள அணி வகுப்பின் போது, சேலம் சிறையிலுள்ள தண்டனைக் குற்றவாளிகளைத் திரட்டி வந்து நிறுத்தி ஆள்மாறாட்டம் செய்தனர். அடையாளங்காட்ட வந்த வாச்சாத்தி கிராமத் தினர் தாக்குதல் -மிரட்டலுக்கு ஆளாகினர். வழக்கு விசாரணைக்கு வரவிடாமல் பத்தாண்டுகள் இழுத்தடித்தனர்.

இவ்வளவையும் மீறி, ஒரு வழியாக கடந்த பிப்ரவரியில் விசாரணை ஆரம்பித்து இதுவரை வாச்சாத்தி கிராம மக்கள் 38 பேர் சாட்சியமளித்துள்ளனர். ஜெயலலிதா அரசு கொடுத்த பலபொய் வழக்குகளிலும், ஜெயா கும்பலின் மீதான கிரிமினல் வழக் குகளிலும் அதற்குத் தலைவலியாக இருந்த சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அசோக்குமார் தண்டனை இடமாற்றலாகக் கிருஷ்ணகிரிக்குத் தூக்கியடிக்கப் பட்டார். அவர் முன்புதான் வாச்சாத்தி வழக்கு விசாரணை நடக்கிறது. இந்த செப்டம்பர் முதல்வாரம், வாச்சாத்தியில் பாதிக்கப்பட்ட 18 மலைவாழ் பெண்களில் 11 பேர் சாட்சியமளித்துள்ளனர். இதைப் படிக்கும் போது, மனித உணர்வுமிக்க எவ ராயினும், நெஞ்சம் குமுறும், ஆத்திரம் பொங்கும் அளவு இருக்கிறது.

''எங்கள் கிராமத்தில் காட்டிலாகாவினர் - போலீசார் சோதனை நடப்பது எங்க ளுக்குத் தெரியாது. அவர்கள் எங்கள் மயிரைப் பிடித்து, வீட்டுக்கு வெளியே இழுத்து வந்தனர். ஒரு ஆலமரத்துக்கு அருகே கிராம மக்களைத் திரட்டியிருந்த இடத்திற்கு அப்படியே கொண்டு வந்தனர்.

''எங்களைப் பார்த்து ரொம்ப அசிங்கமாக ஏசினார்கள். நிறையக் கூடியிருந்த காட்டிலாகா அதிகாரிகள் எங்களில் 18 பேரைப் பொறுக்கி எடுத்தார்கள். எல்லோரும் 15-20 வயதினர். எங்களை ஒரு லாரியில் ஏற்றி ஏரிக்குக் கொண்டு சென்றார்கள். 30 அதிகாரிகள் கும்பலாக இருந்தார்கள். 18 பெண்களையும் புதர் மறைவுக்கு இழுத்துப்

படிப்பகம்

www.padippakam.com

போய்க் கற்பழித்தார்கள். ஒருத்தன் வாயைப் பொத்திக் கொள்ள, மற்றவன் உதவியோடு மூன்றாமவன் கற்பழித்தான். இப்படியே மாறி மாறிச் செய்தனர்.''

அவர்களில் ஒருத்தி பள்ளி மாணவி, ஒருத்திக்குச் சிற்றம்மை தாக்கியிருந்தது. எவ்வளவோ முறையிட்டுக் கெஞ்சிக் கேட்டபோதும் விடவில்லை. கற்பழித்த பிறகு அது போதாது என்று அடித்து உதைக்கப்பட்டனர். மயங்கிக் கிடந்த அப்பெண்களை அரூர் காட்டிலாகா அலுவலகத்துக்கு இழுத்து வந்து ஒரு சிறு அறையில் அடைத்தனர். அங்கே கொண்டு வரப்பட்ட ''கிராமக் கவுண்டர்'' என்றழைக்கப்படும் பெருமாளை அரை நிர்வாணமாக்கி, துடைப்பத்தால் அடிக்கும்படி அப்பெண்கள் துன்புறுத்தப்பட்டனர். பிரம்படி தாள மாட்டாமல் தமது தந்தையாக மதிக்கும் பெருமாளை துடைப்பத்தால் அடித்தனர், அப்பெண்கள்.

அடுத்தநாள் ஊசிப் போன கஞ்சி கொடுத்தனர். மதியம், காட்டிலாகா அதிகாரிகள் கறியும் சோறுமாக விருந்து சாப்பிட்டுக் கொண்டே அப்பெண்கள் மீது எலும்புகளை வீசினர். விருந்து முடிந்த பின் எஞ்சிய எச்சில் சோற்றில் மண்ணைக் கலந்து கொடுத்துத் தின்னும்படி செய்தனர். அவர்கள் விருந்துக்கு அதே கிராம ஆடு - கோழிகளைத்தான் பிடித்து வந்ததாகவேறு எக்காளத்துடன் கூறினர். மாலையில் அவர்களின் கை ரேகைகளை வாங்கிக் கொண்டனர். பத்தாம் வகுப்புப் படித்திருந்த ஒரு பெண் கையொப்பமிடுவதற்கு வலியுறுத்தியதற்காக மீண்டும் அடிக்கப்பட்டாள். அரூர் வழக்கு மன்றத்திற்குக் கொண்டு சென்ற போது அங்கே வாய் திறந்து ஏதாவது பேசினால் குடும்பத்தோடு பத்தாண்டுகள் உள்ளே தள்ளி விடுவதாக எச்சரித்து மிரட்டினர்.

அரூர் வழக்கு மன்றத்தில் ஒரு தலையாட்டி ''நீதிபதி'' அவர்களைச் சிறையில்அடைக்கும்படி உத்தரவிட்டார். சேலம் சிறைக்கு அவர்களைக் கூட்டிச் சென்ற போதும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு இலக்காகினர். ஒரு வழியாகப் பிணையில் விடப்பட்டு ஊர் திரும்பிய போது கிராமமே சூறையாடப்பட்டிருப்பதைக் கண்டனர். கொஞ்ச நஞ்சம் உடைமைகளும் கொள்ளை போயிருந்தன. நீர் இறைப்பு இயந்திரங்களைக் கிணற்றுக்குள் தள்ளியும், குடிநீர்க் கிணறுகளில் ''பெட்ரோல்'' ஊற்றியும் பாழ்படுத்தியிருந்தனர்.

பத்தாண்டுகளுக்கு முன்பு தங்கைளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை வழக்கு மன்றத்தில் விவரிக்கும் போதே அப்பெண்கள் கதறி அழுதனர். அப்போது இளம் பெண்களாக இருந்தவர்களை அந்தப் பாலியல் வன்முறைக்குப் பிறகு, மணம் செய்து கொள்ள யாரும் முன்வர மறுக்கின்றனர். இந்த விசாரணை நடந்த நாளிலேயே உணவு இடைவேளையின் போது, காட்டிலாகா அதிகாரிகள் மிரட்டியதாக அப்பெண்கள் புகார் கூறினர். நடுவர் அசோக் குமார் கோபமடைந்து எச்சரித்திருக்கிறார். வழக்கு விசாரணையின் போதும், போலிக் காரணங்களைக் கூறி தொடர்ந்து குற்றவாளிகள் வழக்கு மன்றத்துக்கு வருவதில்லை; வந்தவர்களும் அடையாளம் காட்டப்படுவதைத் தடுப்பதற்காக மாறி மாறி உட்கார்ந்து குழப்பம் விளைவித்தனர். காட்டிலாகா ஊழியர்கள்தாம் மன்றத்துக்குள் வந்தார்கள், போலீசுக்காரர்கள் வெளியிலேயே நின்று ஏமாற்ற முயன்றனர். இதற்கெல்லாம் நடுவர் கடும் எச்சரிக்கையும் கண்டனமும் தெரிவித்தார்.

பத்தாண்டுகளாகியும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. வாச்சாத்தி கிராம மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. அந்தச் சம்பவம் நடந்தபோது ஆட்சியிலிருந்து, குற்றத்தை மறைப்பதில் முனைப்புக் காட்டிய ஜெயலலிதாதான் மீண்டும் ஆட்சிக்கு வந்திருக்கிறார். அன்றைய ஜெயலலிதா ஆட்சியில் இப்படி ஒன்றா, இரண்டா; அண்ணாமலை நகர் பத்மினி, அத்தியூர் விஜயா, சின்னாம்பதி, வாச்சாத்தி என்று கும்பல் பாலியல் வன்முறைகள் பலவும் நடந்தன. அப்போது, நட்டஈடு பெறுவதற்காக பெண்கள் பொய்ப் புகார் கூறுவதாக வாய் கூசாது பேசிய அதே ஜெயலலிதா ஆட்சிதான் இப்போதும் நடக்கிறது. இப்போதும் இப்படிப்பட்ட சம்பவங்கள் தொடர்கின்றன. வாணியம்பாடி காவல் நிலையத்துக்கு இழுத்து வரப்பட்ட மலைவாழ் இனப் பெண்கள் சமீபத்தில் கும்பல் பாலியல் வன்முறைக்குப் பலியாகியுள்ளனர். வீரப்பனைப் பிடிக்கும் சாக்கில் மேற்கு மலைத்தொடர் கிராமங்களில் அதிரடிப் படை அதே தேவாரத்தின் தலைமையில் பெண் வேட்டை நர வேட்டைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

> **அந்தச் சம்பவத்தை கொடூரம், குரூரம், வக்கிரம், அக்கிரமம், அட்டூழியம் - இப்படி எந்தச் சொல்லாலும் சித்தரிக்க முடியாது. எதிரி நாட்டுக் கிராமத்தை ஆக்கிரமித்திருக்கும் பாசிச பயங்கரவாதப் படை கூட இத்தகைய கொடுஞ் செயலைப் புரியத் துணியுமா என்பது சந்தேகமே.**

தமிழகத்தின் எல்லாப் பிரிவு மக்கள் மீதும் பயங்கர அடக்குமுறை, உரிமை பறிப்பு, பகற்கொள்ளை, பொருளாதார ரீதியிலான தாக்குதல்கள் என்று பேயாட்சி நடத்துகிறது ஜெயலலிதா கும்பல். இதைத் தாங்கிக் கொள்ளாமல் சிறு முணுமுணுப்புக் காட்டும் மக்கள் மீது ஏவிவிட்டுப் பாய்ந்து குதறுவதற்காகவே அக்கும்பலால் தீனிபோட்டு வளர்க்கப்படும் மிருகமாக உள்ளது போலீசு. சின்னாம்பதி, வாச்சாத்தி, வாணியம்பாடி என்று கும்பல் பாலியல் வன்முறையோடு, கொட்டடிச் சித்திரவதை - கொலை - கற்பழிப்பு மட்டுமின்றி, வழிப்பறி, கொள்ளை, திருட்டு - மோசடிகளில் நேரடியாகப் போலீசாரே ஈடுபடும் செய்திகள் நாளும் வருகின்றன. இருந்த போதும் பல நாட்கள் தொடர்ந்து போலீசாரிடம் குறை கேட்பு, 8000 மனுக்கள் பெறுவது, 5000 மனுக்கள் மீது உடனடி நடவடிக்கைகள், வாரிசுரிமை, ஊதிய உயர்வு, விருதுகள், விழாக்கள் என்று ஜெயலலிதா கும்பல் பாசமழை பொழிகிறது.

''கடினமான வேலைச் சுமை, நன்றி எதிர்பார்க்காத தியாக உழைப்பு செலுத்தும் போலீசுக்கு மற்றவர்கள் உரிய மரியாதை செய்வதில்லை'' என்று திரும்பத் திரும்ப உருகிக் கரைகிறார் ஜெயலலிதா. தனது செல்லப் பிராணியிடம் இவ்வளவு கரிசனை காட்டும் எஜமானரை எங்கேயும் காண முடியாது. நிதி நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாகக் கூறும் ஜெயலலிதா அரசு, போலீசுக்குப் பல ஆயிரக்கணக்கில் ஆளெடுப்பதோடு, ஏராளமான சலுகைகள் வழங்குவதோடு அதை அதிநவீனப்படுத்த பல கோடி ரூபாய் செலவழித்து சகல வசதிகளையும் பெருக்கி வருகிறது. எதற்கு? தனக்கு வாக்களிக்கும் மக்களை மட்டுமல்ல, பிற அரசு ஊழியர்களையோ, அரசுச் சிவில் அதிகாரிகளையோ நம்பி ஜெயலலிதா ஆட்சி நடப்பதில்லை. கட்சிக் கிரிமினல்களையும், போலீசையும், போலீசு அதிகாரிகளையும் நம்பி - சார்ந்து மட்டுமே ஒரு பயங்கரவாத ஆட்சி நடக்கிறது. எனவேதான், வாச்சாத்தி - வாணியம்பாடிச் சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அலைகிறார்கள். ●



படிப்பகம்

www.padippakam.com

# வாசகர் கடிதம்

✱ மார்க்சியம் என்று கூறிக் கொள்ளும் போலிகள் அடிக்கடி இனம்புரியாத உணர்ச்சி, எங்கோ தவறு நிகழ்ந்துள்ளது போன்ற வார்த்தைகளை விஞ்ஞானமற்ற முறையில் பேசி மக்களையும், அணிகளையும் முட்டாள்களாக்கும் போது, அதற்கு மாறாக மார்க்சியம் என்பது ஒரு அறிவியல் என்பதை நிரூபிக்கும் வண்ணம், குஜராத்தின் இன்றைய நிலையை விளக்க கடந்தகால வரலாற்றை அரசியல், பொருளாதார, பண்பாட்டு அடிப்படையை அலசி ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டிருப்பது சிறப்பானது.

**— குருசாமி,**
**உசிலம்பட்டி.**

✱ தனியார்மயமாகும் கல்வி - புதிய மனுதர்மம் என்ற கட்டுரையைப் படித்ததன் வாயிலாக இனி... என் போன்ற தற்காலிக விரிவுரையாளராகப் பணியாற்றும் ஆசிரியர்களின் வாழ்க்கையை நினைத்தால் நிகழ்காலத்திலேயே கானல் நீர்தான். எங்களுக்கு முன்பாகவே கல்லூரிகளில் பணிபுரிந்து வரும் பேராசிரியப் பெருமக்களுக்கும் எங்கள் நிலைதான் வரப்போகின்றது என்பதை நினைத்தால், மனதிற்கு கொஞ்சம் மகிழ்ச்சிதான். ஏனெனில் அவர்கள் வாங்கிய சம்பளத்தில் "அவாள்" வாழ்க்கை வாழ்ந்தவர்களாயிற்றே! இனியாவது இந்த நிலைக்குக் காரணம் யார் என்பதைக் கண்டுபிடித்து போராடுவார்களா?

**— வே. கணேசமூர்த்தி,**
**பரமக்குடி.**

✱ 'ஆன்மீகப் பெருச்சாளிகள்' கட்டுரையானது மடங்கள், ஆதீனங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய வேண்டிய நமது கடமையை நினைவூட்டியது. தோழர். மருதையன் அவர்களின் கட்டுரை குஜராத்தில் தோன்றிய காந்தியம் இந்துத்துவத்தின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவியது என்பதை வெளிக்காட்டியது. நிச்சயமாக அதை ஒரு வெளியீடாகக் கொண்டு வருவீர்கள் என நம்புகிறோம்.

**— சக்தி,**
**திருநெல்வேலி**

✱ உங்கள் ஒலிப்பேழைகள், பத்திரிக்கைகள் மூலம் உங்களுடைய கருத்துக்கள் அனைத்தையும் கேட்க வேண்டும் என்ற அடக்க முடியாத ஆவல் மேலோங்குகிறது. எங்களுடைய சிந்தனையில் வராத புதுவிதமான சித்தாந்தங்களைக் கொண்டதாக உங்கள் இயக்கம் இருக்கிறது. இது போன்றதொரு அமைப்பு இருக்கும் வரையில் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் சிறுபான்மை




யினர் பாதுகாப்பாக வாழலாம் என்ற நம்பிக்கை தழைத்தோங்குகிறது. உங்கள் இயக்கமும் அதைச் சார்ந்த பணிகளும் தொய்வின்றி நல்ல முறையில் வளர்ந்தோங்க, அகில உலகத்தின் இறைவன் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறோம்.

**— A.M. லுக்மானுல் ஹக்கீம் மற்றும் மாணவர்கள்,**
**கோயம்புத்தூர்.**

✱ ஆகஸ்டு இதழில் திருவாவடுதுறை ஆதீனம் 23-வது குரு மகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிய பரமாச்சாரிய சுவாமிகள் பற்றி வெளியிட்டுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

23-வது குரு மகாசன்னிதானம் அவர்கள் 1949-இல் நெல்லை மாவட்டம் விக்கிரமசிங்கபுரத்தில் பிறந்தார். எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்று, பின்னர் கூட்டுறவுப் பயிற்சியில் தேர்ச்சி பெற்று மதுரா கோட்ஸ் கூட்டுறவுப் பண்டகசாலையில் கிளார்க்காக 10 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்தார். இளமைப் பருவம் முதல் துறவின்பால் கொண்ட பற்றுதல் காரணமாக ராஜினாமா செய்துவிட்டு திருவாவடுதுறை ஆதீனத்தில் துறவறம் மேற்கொண்டார்கள். இதனால் கிடைக்கப்பெற்ற கிராஜ்விட்டி, பிராவிடன்ட் பண்டு பணத்தின் ஒரு பகுதியை தனது பெற்றோர்களுக்கும், மற்றொரு பகுதியைக் குரு காணிக்கையாகவும் சமர்ப்பித்தார்கள். 1983 முதல் 23-வது குரு மகா சன்னிதானமாக அருளாட்சி செலுத்தி ஆதீன நிர்வாகத்தினை நல்ல முறையில் நடத்தியும் வருகிறார்கள்.

**— மேலாளர்,**
**திருவாவடுதுறை ஆதீனம்,**
**திருவாவடுதுறை**

***(குறிப்பு: நமது கட்டுரையில் மதுரா கோட்சில் வேலை செய்த இந்த ஆதீனம் ஊழல் மோசடியினால்தான் துறவு மேற்கொண்டார் என்று எழுதியிருந்தோம். ஆதீனத்தின் மேலாளர் இந்த விசயத்தை மட்டும்தான் மறுத்துள்ளார் என்பதை வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம் - ஆசிரியர் குழு)***

✱ நண்பரின் நண்பருக்கு பு.க. கொடுத்து வந்தேன். வழக்கம் போல இந்த மாதமும் கொடுத்தேன். 'வேண்டாம்' என்றார்.

'ஏன்?' என்றதற்கு, "பு.க. படித்த பிறகு எங்கு போனாலும் தப்புத்தான் முதலில் கண்ணில் படுது. கோபம் எகிறிடுது. டென்சனாகுது. 'இசை' புத்தகம் படிச்சதுக்குப் பிறகு, ஒழுங்கா ஒரு பாட்டுக் கூட கேட்க முடியல! வெட்கத்தை விட்டுச் சொன்னாக்க முன்ன மாதிரி பொண்ணுகள சைட் அடிக்கக்கூட முடியலிங்க" என்றார்.

இதே மனநிலை எனக்குத் தொடக்கத்தில் இருந்தது. பு.க. பலரை உலுக்குகிறது; சண்டை பிடிக்கிறது; தூக்கம் இழக்க வைக்கிறது.

இதற்கிடையில் மருதையன் 'அழகி' கொண்டு நடுத்தர மக்களின் சட்டையைப் பிடித்து உலுக்கிய உலுப்பில் பலருக்குச் சட்டை கிழிந்து திருதிருவென விழிக்கிறார்கள். மேலும்.... முகிலனின் வரவு அருமை. சில காலங்களுக்குப் பிறகு ஒரு நல்ல அறிமுகம்.

'தனியார்மயமாகும் கல்வி', சிவகுமார் அவர்கள் எழுதுகிற கட்டுரையை பக்கங்களை அதிகப்படுத்தி, விரைவில் முடிப்பது, சமகாலப் போராட்டச் சூழலுக்குப் பெரும் உதவியாய் இருக்கும்.

**— சாக்ரடீஸ்,**
**மதுரை.**

## அறிவிப்பு:

*அன்பார்ந்த வாசகர்களே,*
*குஜராத்: இந்துத்துவத்தின்* **சோதனைச் சாலை** *என்ற*
**தொடர் கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.**

*- ஆசிரியர் குழு*



படிப்பகம்

www.padippakam.com



# பேயாட்சி

ஒரு வழிப்பறிக் கும்பலிடம் சிக்கித் தவிக்கிறது தமிழகம். காதில், மூக்கில் கிடந்ததையெல்லாம் கழற்றிக் கொடுத்து விட்டு, ''கழுத்துத் தாலியை மட்டுமாவது விட்டுவிடு'' என்று கெஞ்சும் பெண்ணைப் போல ஜெயலலிதா அரசிடம் மன்றாடுகிறார்கள் தமிழக மக்கள்.

ஏழை விவசாயிகள், நெசவாளர்கள் முதல் மாணவர்கள், வழக்கறிஞர்கள் வரை எல்லோருடைய தொண்டைக் குழியிலும் கத்தியை வைத்து அழுத்துகிறது ஜெ. அரசு. எதிரி நாட்டை முற்றுகையிட்டுத் தாக்குதல் தொடுப்பது போல, தமிழக மக்கள் மீது ஒரு பலமுனைத் தாக்குதலைத் தொடுத்து வருகிறது இந்த அரசு.

### எட்டே மாதங்களில் எல்லோர் மீதும் தாக்குதல்!

சென்ற டிசம்பர் மாதம் பேருந்துக் கட்டணம் பன்மடங்கு உயர்த்தப்பட்டது; அரசு மருத்துவமனையில் நுழையக் கட்டணம், நோயாளியைப் பார்க்கக் கட்டணம், ரேசன் அரிசி விலையேற்றம் எல்லாம் ஒரே நாளில் அதிரடியாக அறிவிக்கப்பட்டன; ஏழைகளுக்கு இலவச வேட்டி சேலைத் திட்டம் ரத்து செய்யப்பட்டது; தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டது; விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை நிறுத்த மீட்டர் பொருத்தப்படுகிறது; பால் விலை உயர்ந்தது.

அரசுக் கல்லூரிகளை சுய்நிதிக் கல்லூரிகளாக மாற்றும் சதித்திட்டத்திற்கு முதல் படியாக அவை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுகின்றன; அரசுப் பள்ளி கல்லூரிகளில் இனிப் புதிதாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் காண்டிராக்ட் முறையில் எடுக்கப்படவிருக்கிறார்கள்; ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் குறைக்கப்படுகிறார்கள்; அரசு ஊழியர்களுக்குப் பஞ்சப்படி மறுக்கப்படுகிறது, கட்டாய ஓய்வு திணிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டணம் உயர்த்தப்படுகிறது; வழக்கறிஞர்களது வேலை வாய்ப்பையும், சாதாரண மக்களின் நீதி பெறும் உரிமையையும் பறிக்கின்ற சிவில் சட்டத்திருத்தம் அமல்படுத்தப்படுகிறது. கட்டிட வரன்முறைச் சட்டம் என்ற பெயரில் நகராட்சிகள் நடுத்தர வர்க்கத்தைச் சூறையாடுகின்றன; மாவட்ட ஆட்சியரிடம் மனுக் கொடுக்க வேண்டுமானால் அதற்கு 25 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இவையனைத்தும் கடந்த 8 மாதங்களில் தமிழக மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள். இந்தத் தாக்குதல்களுக்கெதிராக எல்லாத் தரப்பினரும் போராடுகிறார்கள். விவசாயிகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள், நெசவாளர்கள், வியாபாரிகள், வழக்கறிஞர்கள்... என ஒவ்வொருவரும் தத்தம் உரிமைக்காகத் தனித்தனியே போராடுகிறார்கள்.

### இருப்பதையும் பிடுங்காதே வழிப்பறி செய்யாதே!

எனினும் இவர்கள் எல்லோருடைய போராட்டத்திலும் ஒரு பொதுத் தன்மை இருக்கிறது. இவர்கள் யாரும் புதிதாக எந்தவொரு சலுகையோ உரிமையோ அரசிடம் கேட்கவில்லை. ''இருக்கிற உரிமையையும் பறித்து விடாதே'' ''பிழைக்கின்ற பிழைப்பிலும் மண் அள்ளிப் போட்டுவிடாதே'' என்றுதான் அரசிடம் மன்றாடுகிறார்கள், போராடுகிறார்கள்.

''ரேசனில் நல்ல அரிசி போடாவிட்டாலும் பரவாயில்லை - புழுத்த அரிசியையும் நிறுத்திவிடாதே'', ''புதிதாகப் பள்ளி கல்லூரி திறக்காவிட்டாலும் பரவாயில்லை - இருக்கிற ஆசிரியர்களைக் குறைத்து கட்டணத்தையும் உயர்த்திவிடாதே'', ''மருத்துவமனையில் மருந்தே இல்லாவிட்டாலும் பரவாயில்லை - உள்ளே நுழைவதற்கே காசு கேட்காதே'', ''விவசாயிக்குக் கடன் தராவிட்டாலும் பரவாயில்லை - நெல் கொள்முதலை நிறுத்திவிடாதே'', ''நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை - கட்டணத்தை அநியாயமாக உயர்த்திவிடாதே'' - இப்படித்தானிருக்கின்றன மக்களின் கோரிக்கைகள்.

விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள், இளைஞர்கள்... எனத் தமிழகத்தின் பெரும்பான்மை மக்களின் எதிர்காலம் சூனியமாகிக் கொண்டிருக்கிறது. என்ன செய்யப் போகிறோம், எப்படி வாழப் போகிறோம் என்ற கேள்விகளுக்கு விடை தெரியாமல் திகைத்து நிற்கிறார்கள் மக்கள்.

### விவசாயிக்கு எலிக்கறி முதலாளிகளுக்கு விளைநிலம்!

தமிழகத்துக்கே சோறு போட்ட தஞ்சை மாவட்டத்தில் இன்று பட்டினிச் சாவு. எலிக்கறியையும் அல்லிக் கிழங்கையும் தின்று பசியாறுகிறார்கள் தஞ்சை மாவட்டத்தின் கூலி விவசாயிகள். சிறிய நடுத்தர விவசாயிகளோ செய்வதறியாமல் தடுமாறுகிறார்கள்.

காவிரியில் தண்ணீர் வந்துவிட்டால் இவர்களுடைய கஷ்டம் தீர்ந்துவிடப் போவதில்லை. ஏற்கெனவே நெல் கொள்முதலை நிறுத்திவிட்டது ஜெ. அரசு. விற்க முடியாத நெல்லை விளைவித்தால் கடன்தானே அதிகமாகும் என்று கலங்கி நிற்கிறார்கள் தஞ்சை விவசாயிகள்.

விளைந்த பொருளுக்கு நியாயமான விலை கிடைக்காமல் கடனாளியாகிப் போன மற்ற மாவட்டத்து விவசாயிகளோ, ''கொஞ்சம் மழை பெய்தால் கடனாவது வாங்கலாம்'' என்று ஏங்குகிறார்கள். கிணறு தோண்டித் திவாலாகிப் போன ஒரு விவசாயியின் குடும்பமே மின்சாரக் கம்பியை உடலில் சுற்றித் தற்கொலை செய்து கொண்டிருக்கிறது. கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வருகிறது.

பட்ட கடனை அடைக்க வழி தெரியாமல், வாழவும் வழி புரியாமல் விவசாயிகள் நிலத்தோடு சாகிறார்கள்; கந்து வட்டிக் காரனுக்கு நிலத்தை எழுதிக்



அட்டை ஓவியம்: முகிலன்
வடிவமைப்பு: ஸ்பார்ட்டகஸ்



படிப்பகம்

www.padippakam.com

கொடுக்கிறார்கள்; அல்லது பிழைக்க வழி தேடி ஊரை விட்டு ஓடுகிறார்கள். நிலமில்லாத கூலி விவசாயிகளோ வேலையில்லாமல் ஊரை விட்டு ஓடுகிறார்கள்.

தமிழகத்தின் விளை நிலங்களெல்லாம் தரிசாக மாறிக் கொண்டிருக்கின்றன. கொள்முதல் கிடையாது, நியாய விலை கிடையாது, கூட்டுறவுக் கடன் கிடையாது, உர மானியம் கிடையாது, கடன் தள்ளுபடி கிடையாது, வறட்சி நிவாரணம் கிடையாது, இலவச மின்சாரமும் கிடையாது என்று விவசாயியை விரட்டியடிக்கும் ஜெ. அரசு பன்னாட்டு நிறுவனங்களையும், பெரும் தரகு முதலாளிகளையும் பாக்கு வைத்து அழைக்கிறது. தரிசு நிலங்களை 30 ஆண்டு குத்தகைக்கு முதலாளிகளுக்கு வழங்குகிறது.

இனி பெரு முதலாளிகள் அரசாங்கப் புறம்போக்கை அபகரித்துக் கொள்வார்கள்; விவசாயிகளுடைய விளைநிலத்தையும் விழுங்கிக் கொள்வார்கள். விவசாயம் முதலாளிகள் கைக்கு மாறிவிட்டால் தமிழகத்தின் கோடிக்கணக்கான விவசாயிகள் தேவையற்றவர்களாகி விடுவார்கள்.

**கஞ்சித் தொட்டி நெசவாளிக்கு ஜவுளித் தொழிலோ அந்நியனுக்கு!**

நெசவாளர்களோ ஏற்கெனவே தேவையற்றவர்களாக்கப்பட்டு விட்டார்கள். கடினமாக உழைத்து மானத்தோடு வாழ்ந்த நெசவாளர்கள் கஞ்சித் தொட்டியின் முன்னே கூனிக் குறுகிக் கையேந்தி நிற்கிறார்கள். மானத்துக்கு அஞ்சிய சிலர் ஊர் விட்டு ஊர் சென்று பிச்சையெடுக்கிறார்கள். பெற்ற பிள்ளையை விற்கிறார்கள். அல்லது தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

தமிழகத்தில் உள்ள கைத்தறிகள் 6 லட்சம். இந்தியாவின் கைத்தறி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கைத் தமிழகம் தான் வழங்குகிறது. இன்று 2 லட்சம் கைத்தறிகள் செயலிழந்து விட்டன. மற்றவை உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றன.

கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்கள் குறைக்கப்பட்டு விட்டன; நெசவுக்கு நூல் இல்லை; கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை நெசவு செய்யும் விசைத்தறிகளுடன் போட்டி போட முடியவில்லை; கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. செய்த வேலைக்கு நெசவாளர்களுக்குக் கூலி வரவில்லை. இந்நிலையில் இலவச வேட்டி சேலைக் கொள்முதலையும் நிறுத்தியதன் மூலம் மேலும் 25,000 நெசவாளர் குடும்பங்



களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளியிருக்கிறது ஜெ. அரசு. திக்கற்றவர்களாய்க் கேட்பாரில்லாத அநாதைகளாய் மெல்ல மெல்ல உயிர் ஒடுங்கிச் செத்துக் கொண்டிருக்கிறார்கள் பல லட்சம் கைத்தறி நெசவாளர்கள்.

கைத்தறிகளிடம் பிடுங்கித் தின்கின்றன விசைத்தறிகள்; விசைத்தறிகளை முடமாக்குகின்றன ஜவுளி மில்கள்; மில்களையோ பன்னாட்டு நிறுவனங்கள் விழுங்குகின்றன. கோவை மில்கள் நெய்து கொடுக்கும் துணிகளின் மீது பான்டலூன், கலர் பிளஸ், ரீட் அண்டு டெய்லர் என அந்நியத் துணிக் கம்பெனிகள் தங்கள் முத்திரையைப் போட்டு இந்தியச் சந்தையை ஆக்கிரமிக்கின்றன. ''பஞ்சும், நூலும், நெசவு செய்த ரகங்களும் நம்முடையவை; துணியின் பெயரும், பெயரை வைத்துச் சுருட்டும் லாபமும் அந்நியனுக்கு'' என்று ஜவுளித் தொழிலே சீரழிந்து கொண்டிருக்கிறது.

■■■■■■

**தமிழகத்தில் உள்ள கைத்தறிகள் 6 லட்சம். இந்தியாவின் கைத்தறி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கைத் தமிழகம் தான் வழங்குகிறது. இன்று 2 லட்சம் கைத்தறிகள் செயலிழந்து விட்டன. மற்றவை உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றன.**

■■■■■■

**வேலை வாய்ப்பு குறைகிறது வேலைச் சுமையோ கூடுகிறது!**

சிறு தொழில்கள் அழிகின்றன. பெரிய தொழிற்சாலைகளிலோ ஆட்குறைப்பு. எல்லாத் தொழில்களிலும் வேலைச் சுமை கூடுகிறது; ஒரு நாளைக்கு 12 மணி நேர வேலை என்பது எல்லா இடங்களிலும் எழுதப்படாத சட்டமாகி வருகிறது. வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க எல்லாத் தொழில்களிலும் கூலி குறைகிறது.

கால் டாக்சிகளும், ஷேர் ஆட்டோக்களும் எல்லா நகரங்களிலும் பெருகி வருகின்றன. விரல் விட்டு எண்ணக்கூடிய சில ஓட்டுப் பொறுக்கிகளின் பினாமிகளும், ஊழல் அதிகாரிகளும் பல்லாயிரக்கணக்கான ஆட்டோ தொழிலாளர்களின் வருமானத்தைச் சூறையாடுகிறார்கள். வேலையற்றவர்களாக ஆக்கப்படும் உழைக்கும் மக்களின் எண்ணிக்கை எல்லாத் துறைகளிலும் நாள்தோறும் பெருகுகிறது.

**மீண்டும் குலக்கல்வித் திட்டம்!**

புறக்கணிக்கப்படும் விவசாயிகள், அழிந்து கொண்டிருக்கும் நெசவாளர்கள், வேலையில்லாமல் பரிதவிக்கும் நகர்ப்புறத் தொழிலாளர்கள் போன்ற ஏழை மக்களின் பிள்ளைகளையும் விட்டு வைக்கவில்லை இந்த அரசு. அரசாங்கக் கல்லூரிகளையும் பள்ளிகளையுமே நம்பியிருக்கும் அந்த மாணவர்களின் கல்வியைப் பறிக்கும் சதித்திட்டம் ''பல்கலைக் கழகங்களுடன் கல்லூரிகளை இணைக்கும் சட்டம்'' என்ற பெயரில் நிறைவேற்றப்பட்டு விட்டது.

இனி கல்விக்கு அரசு நிதி ஒதுக்காது. அரசுக் கல்லூரிகள் இனி சுயநிதிக் கல்லூரிகளாய் மாறும்; பல்கலைக்கழகங்களோ அவற்றை வைத்து லாபம் ஈட்டும் கம்பெனிகளாகும். அரசுக் கல்லூரிகளில் படிக்கும் சுமார் ஒரு லட்சம் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்கள் இனி ஆண்டுதோறும் பல ஆயிரம் கல்விக் கட்டணம் செலுத்த வேண்டும். இல்லையேல் படிப்பை நிறுத்த வேண்டும். அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளுக்கும் இனி அரசு உதவி நிறுத்தப்படும்; அவையும் இனி சுயநிதிக் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்து விடும். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளையும் ஜெயலலிதா விட்டு வைக்கவில்லை. அவையும் தனியாருக்குக் குத்தகைக்கு


படிப்பகம்

www.padippakam.com

விடப்பட இருக்கின்றன.

தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்கள் குறைக்கப்படுகிறார்கள். 18,000 கிராமப் புறத் தொடக்கப் பள்ளிகளில் ஐந்து ஆசிரியர்களை இரண்டாகக் குறைத்துவிட்டது ஜெ. அரசு. 1500 பள்ளிகளில் ஒரே ஆசிரியர்தான். நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிகளில் ஆசிரியரே கிடையாது; பல பள்ளிகளில் கூரை கிடையாது; கரும்பலகை கிடையாது. தொடக்கக் கல்வி அளிக்கும் கடமையை முற்றிலுமாகக் கை கழுவி விடுவதற்கும், தொடக்கப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரையிலான அரசுப் பள்ளிகளின் நிர்வாகத்தையே உள்ளூர்ப் பிரமுகர்களிடம் (சமூக விரோதிகளிடம்) ஒப்படைத்து விடுவதற்கும் திட்டமிடுகிறது ஜெ. அரசு.

தொடக்கக் கல்வி முதல் கல்லூரிக் கல்வி வரையில் உழைக்கும் வர்க்கத்திற்குக் கல்வியை மறுக்கும் ஜெயலலிதாவின் திட்டம் ராஜாஜியின் குலக் கல்வித் திட்டத்தைக் காட்டிலும் கொடூரமானது. இனி, கார் வைத்திருக்கும் வர்க்கம்தான் கல்லூரிக் கல்வியை நினைத்துப் பார்க்க முடியும். ஆரம்பக் கல்வியோ அடியோடு அழிந்துவிடும்.

**ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், வழக்கறிஞர்கள் யாரும் தப்பவில்லை!**

நர்சரிப் பள்ளிகள் முதல் சுயநிதிக் கல்லூரிகள் வரையிலான தனியார் நிறுவனங்களின் ஆசிரியர்களைப் போலவே இனி அரசுப் பள்ளி ஆசிரியர்களும் கொத்தடிமைகளாக நடத்தப்படுவார்கள். ஆசிரியர்களையும் பேராசிரியர்களையும் இனி காண்டிராக்ட் முறையில் நியமிக்க இருப்பதாக வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார் கல்வி அமைச்சர்.

ஆசிரியர்கள் மட்டுமல்ல, அரசு ஊழியர்களின் சலுகைகளும் உரிமைகளும் கூடப் பறிக்கப்படுகின்றன. பஞ்சப்படி நிறுத்தப்பட்டிருக்கிறது; புதிய ஆளெடுப்பு இல்லை; இருப்பவர்களையும் குறைக்க விருப்ப ஓய்வுத் திட்டம் திணிக்கப்படுகிறது. நான்காண்டுகளாகப் பணிபுரிந்த 10,000 சாலைப் பணியாளர்களும் மக்கள் நலப் பணியாளர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். போக்குவரத்து உள்ளிட்ட அரசுத் துறைகள் தனியார்மயமாக்கப் படுகின்றன. இந்த அநீதிகளை எதிர்த்துப் போராடும் உரிமையையும் பறிக்க வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் காட்டி மிரட்டுகிறது ஜெ. அரசு.

தமிழக அரசு என்று தன்னை அழைத்துக் கொள்ளும் இந்த வழிப்பறிக் கொள்ளைக் கும்பலின் பார்வைக்கு நீதித் துறையும் தப்பவில்லை. நீதியை விலை கொடுத்து வாங்கியே பழகிய இந்தக் கும்பல், நீதிமன்றக் கட்டணங்களையும் 100 மடங்கு வரை உயர்த்தியது; ஏழை மக்களுக்குச் சட்டபூர்வமான நிவாரணத்தை மறுத்து அவர்களைக் கட்டைப் பஞ்சாயத்துக்குத் துரத்திவிடும் சிவில் சட்டத் திருத்தத்தை மைய அரசு கொண்டு வந்தவுடனே அதையும் தமிழக அரசுதான் உடனே அமல்படுத்தியிருக்கிறது. இதை எதிர்த்து இரண்டு மாதமாக வேலை நிறுத்தம் செய்து வரும் வழக்கறிஞர்கள் மீது அரசு கிரிமினல் வழக்கு தொடுத்துள்ளது.

**முதல் மாநிலம்!**

இதுதான் இன்றைய தமிழகம். இதுதான் ஜெயலலிதா இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றி வரும் லட்சணம். அரசுக் கல்லூரிகளைச் சுயநிதிக் கல்லூரிகளாய் மாற்றும் சட்டம், அரசு நிலங்களைத் தரகு முதலாளிகளுக்குத் தாரைவார்க்கும் திட்டம் ஆகியவற்றில் தமிழகத்திற்குத்தான் முதலிடம். பொடோ சட்டத்தை அதிகமாக ஏவியதும், நீதிமன்றங்களைக் கட்டைப் பஞ்சாயத்தாக்கும் சிவில் சட்டத்திருத்தத்தை உடனே அமல்படுத்தியதும், வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தை முதலில் கொண்டு வந்ததும் தமிழகம்தான். எலிக்கறி, கஞ்சித்தொட்டி, பட்டினிச் சாவு அனைத்திலும் தமிழகத்திற்குத்தான் முதலிடம்.

■ ■ ■ ■

**இது போலீசு ஆட்சி. ரேசன் அரிசிக்குப் போராடினால் தாசில்தார் வருவதில்லை; டி.எஸ்.பி வருகிறார். குடிநீர் கேட்டுப் போராடினால் தண்ணீர் லாரி வருவதில்லை; வெள்ளை லாரி வருகிறது. அரசுக் கல்லூரி மாணவர்கள் போராடினால் அதிகாரிகள் வருவதில்லை; அதிரடிப்படை வருகிறது. கஞ்சித் தொட்டி வைப்பதுகூட அரசுக்கெதிரான கலகமாகிவிட்டது; அங்கே கையேந்தி நிற்கும் ஏழைகளோ கலகத்தில் பங்கேற்ற குற்றவாளிகள்!**

■ ■ ■ ■

''அரசாங்கமே இப்படிச் செய்தால் எப்படித்தான் வாழமுடியும்?'' என்று குமுறுகிறார்கள் பாமர மக்கள். வேலைதர வக்கில்லாத இந்த அரசு, விவசாயிகளும், நெசவாளர்களும், தொழிலாளர்கள் தமது சொந்த முயற்சியில் கை ஊன்றிக் கரணம் போட்டுக் கஞ்சி குடித்தால் அந்தக் கஞ்சிக் கலயத்தையும் தட்டிக் கவிழ்க்கிறது. அவர்களது தொழிலை நாசமாக்கத் திட்டம் தீட்டுகிறது. மக்களை எல்லாப் புறமும் சுற்றி வளைத்துத் தாக்குகிறது. எந்த விதத்திலும் வாழ முடியாமல் வாழ்வின் விளிம்புக்கே துரத்துகிறது.

வேலையில்லை, சோறில்லை, குடிக்கத் தண்ணீரில்லை, கல்வி இல்லை, மருத்துவமில்லை. 'இல்லை' என்பதை உரக்கச் சொல்வதற்குக்கூட உரிமை இல்லை. அணுவணுவாய்ச் செத்துக் கொண்டிருக்கிறார்கள் தமிழ் மக்கள். நாட்டை ஆளும் பச்சைத்துணி போர்த்திய பூதமோ ''பட்டினிச்சாவா... எந்த ஊரில்?'' என்று எகத்தாளம் செய்கிறது.

**உலக வங்கியின் கங்காணிகள்!**

உழைக்கும் மக்களின் கண்ணீரும் கதறலும் ஜெயலலிதாவின் காதிலோ வாஜ்பாயியின் காதிலோ விழுவதில்லை. உலக வங்கியின் ஆணைகளுக்கு மட்டுமே அவர்கள் காது கொடுக்கிறார்கள். விவசாயத்தையும் கைத்தறியையும் ஒழிப்பது முதல் ரேசன் கடைகளை மூடுவது வரை எல்லாமே உலக வங்கியின் ஆணைகள். கல்விக் கட்டண உயர்வு முதல் பேருந்துக் கட்டண உயர்வு வரை அனைத்துமே உலக வர்த்தகக் கழகத்தின் நிபந்தனைகள். வேலை நிறுத்தத் தடைச் சட்டம் முதல் ஆள்தூக்கி பொடா சட்டம் வரை அனைத்துமே அமெரிக்க அரசின் அடியொற்றிப் போடப்படும் கருப்புச் சட்டங்கள்.

உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சியை, உலக வங்கியின் அதிகாரத்தை எந்த ஓட்டுக் கட்சியும் எதிர்ப்பதில்லை. அனைவரும் உலக வங்கியின் அடிமைகள், உலக வர்த்தகக் கழகத்தின் கங்காணிகள். எனவேதான் மத்தியில் ஆளுங்கட்சிகளாகவும் மாநிலத்தில் எதிர்க்கட்சிகளாகவும் உள்ள தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க. போன்ற கட்சிகளும் காங்கிரசும் ஜெயலலிதாவை எதிர்க்கிறார்கள்; ஆனால் ஜெயலலிதா அரசின் குறிப்பான சட்ட திட்டங்களை எதிர்க்காமல் மழுப்புகிறார்கள்.

கஞ்சித் தொட்டி வைத்து நெசவாளர்களுக்காகக் கண்ணீர் விடுகிறது தி.மு.க. ஆனால் ''கைத்தறிக்குரிய ரகங்களை


படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்கு'' என்று மட்டும் கோர மறுக்கிறது. ஏனென்றால் கைத்தறியை அழிக்கும் தாராளமயக் கொள்கையின் நாயகன் அமைச்சர் மாறன்.

''அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்காதே - கல்வி மானியத்தைக் குறைக்காதே'' என்று இவர்கள் போராடவில்லை. ''மாணவர் களை அழைத்துப் பேசுங்கள்'' என்று மழுப்புகிறார்கள். ஏனென்றால் இந்தப் புதிய மனு தர்மத்தை வகுத்துத் தந்த மத்திய அரசில் அவர்களும் அமைச்சர்கள்.

பொடா சட்டத்தில் தன்னைச் சிறை வைத்த ஜெயாவைச் சாடும் வை.கோ., பொடாவை இன்னமும் ஆதரிக்கிறார்; ஏனென்றால் பாரதீய ஜனதாவின் பாசிசக் கொடுங்கோன்மையில் ம.தி.மு.க -விற்கும் ஒரு நாற்காலி இருக்கிறது.

**பங்களா நாய் பாசிசப் பேய்!**

எல்லா ஓட்டுக் கட்சிகளும் உலக வங்கியின் எடுபிடிகள்தானென்றாலும், அதன் ஆணைகளை அமல்படுத்தும் வெறித்தனத்தில் அனைவரையும் விஞ்சு கிறார் ஜெயலலிதா. கஞ்சித் தொட்டியின் முன் கூனிக்குறுகிக் கையேந்தி நிற்கும் உழைப்பாளிகளை முட்டை பிரியாணி தின்பதற்கு அழைக்கும் வக்கிரம் ஜெயல லிதாவுக்கே உரியது; ''சட்டத்தை ஒத்துக் கொள்கிறீர்களா, 3000 பேருக்கும் சீட்டைக் கிழிக்கவா?'' என்று கல்லூரி ஆசிரியர்களை மிரட்டும் திமிர் ஜெயலலி தாவுக்கு மட்டுமே உரியது.

இந்தத் திமிர் ஒரு கைக்கூலிக்கே உரிய திமிர். பன்னாட்டு முதலாளிக ளுக்குப் பண்ணையாள் வேலை பார்க்கும் எடுபிடிக்கே உரிய ஆணவம்; இது பங்களா நாய்களுக்கே உரிய வெறித் தனம். உலக வங்கியின் கொள்கைகளில் ததும்புகின்ற உழைக்கும் மக்களுக்கெதி ரான துவேசம்தான் ஜெயலலிதாவின் வாய்க் கொழுப்பில் வடிகிறது.

**நாம் தேவையற்றவர்களாம்!**

உலகச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்யத் தேவையானவர்கள் மட்டும் உயிர் வாழ்ந்தால் போதும் என்கிறது உலகமய மாக்கக் கொள்கை; எனவே நமது விவசா யிகளும் நெசவாளர்களும் தொழிலாளி களும் அரசுக் கல்லூரி மாணவர்களும் உலகச் சந்தைக்குத் தேவையற்றவர்கள். பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பகட்டான நுகர்பொருட்களை வாங்க முடிந்த பணக்காரர்களை மட்டும் பராமரித்தால் போதும் என்கிறது உலக வங்கி; எனவேதான் புறக்கணிக்கப்படுகி



**கஞ்சித் தொட்டியின் முன் கூனிக் குறுகிக் கையேந்தி நிற்கும் உழைப்பாளிகளை முட்டை பிரியாணி தின்பதற்கு அழைக்கும் வக்கிரம் ஜெய்லலிதாவிற்கே உரியது.**

றார்கள் ஏழை மக்கள்.

''தனக்குத் தேவைப்படாதவர்கள் செத்து ஒழியட்டும்'' என்பதுதான் உலக முதலாளித்துவத்தின் கொள்கை; இந்த அரசின் கொள்கையும் அதுவேதான். அத னால்தான் ''உணவுக் கிடங்குகளில் குவிந்திருக்கும் தானியம் எலி தின்று அழிந்தாலும் அழியட்டும், அதை எலிக் கறி தின்னும் மக்களுக்குத் தர மாட்டோம்'' என்று திமிர்த்தனம் செய்கி றது அரசு.

அரசியல் சட்டம், ஜனநாயக உரிமை என்ற காகித உரிமைகளையெல்லாம் கசக்கி எறிந்துவிட்டு, அரசின் கறுப்புச் சட்டங்களை எதிர்ப்பவர்களையெல்லாம் தன்னுடைய தனிப்பட்ட எதிரிகளாகவே கருதி வன்மத்துடன் ஒடுக்குகிறது பாசிச ஜெயலலிதா கும்பல்.

**போலீசு ஆட்சி!**

நெல்லும் கைத்தறித் துணியும் கொள்முதல் செய்ய ஜெ. அரசிடம் காசில்லை; ஆனால் போலீசுக்குத் துப்பாக்கியும் தடிக்கம்பும் நவீன வாக னங்களும் வாங்கக் காசிருக்கிறது. ரேசன் அரிசிக்கு மானியம் தரக் காசில்லை; போலீசு மானியத்திற்கு மட்டும் காசிருக் கிறது. விவசாயிகளிடமும், நெசவாளர்க ளிடமும், வியாபாரிகளிடமும் பேச நேர மில்லை; போலீசின் குறை கேட்க 15 நாட்கள். அரசு வேலைகள் அனைத்திலும் ஆட்குறைப்பு; போலீசுக்கு ஆளெடுப்பு!

இது போலீசு ஆட்சி. ரேசன் அரி சிக்குப் போராடினால் தாசில்தார் வருவ தில்லை; டி.எஸ்.பி வருகிறார். குடிநீர் கேட்டுப் போராடினால் தண்ணீர் லாரி வருவதில்லை; வெள்ளை லாரி வருகி றது. அரசுக் கல்லூரி மாணவர்கள் போரா டினால் அதிகாரிகள் வருவதில்லை; அதி ரடிப்படை வருகிறது. கஞ்சித் தொட்டி வைப்பதுகூட அரசுக்கெதிரான கலகமாகி விட்டது; அங்கே கையேந்தி நிற்கும் ஏழைகளோ கலகத்தில் பங்கேற்ற குற்ற வாளிகள்! பட்டினியைச் சகித்துக் கொண்டு சத்தம் போடாமல் செத்துப் போகிறவன்தான் இங்கே சட்டத்திற்குக் கட்டுப்பட்ட குடிமகன்.



படிப்பகம்

www.padippakam.com

**சகித்துக் கொள்வதா?**

சகித்துக் கொள்ளப் போகிறோமா? இத்தகைய சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் கட்டுப்பட்ட பிணமாக வாழப் போகிறோமா, அல்லது தன்மானமுள்ள மனிதனாகப் போராடிச் சாதிக்கப் போகிறோமா?

சாதிக்க முடியும். ''நாம் மட்டும் போராடி அரசைப் பணிய வைக்க முடியுமா'' என்று தயங்குவதில் பொருளில்லை. ரேசன் விலை உயர்வுக்கெதிராகத் தமிழகமெங்கும் போராடினார்கள் பெண்கள்; பின்வாங்கியது ஜெ. அரசு. ''குடும்பத் தலைவர் வந்தால்தான் கூப்பனரிசி'' என்றதும் மீண்டும் ஆங்காங்கே போராடினார்கள் மக்கள்; பின்வாங்கியிருக்கிறது அரசு. வழக்கறிஞர்களின் போராட்டம் நீதிமன்றக் கட்டண உயர்வை ரத்து செய்திருக்கிறது. ஆசிரியர்கள் தோற்றிருக்கலாம்; மாணவர்கள் களத்தில் நிற்கிறார்கள்.

நாம் மட்டும் போராடினால் நடக்குமா என்ற கேள்விக்கே இடமில்லை. நாடே போராடுகிறது. விவசாயிகள், நெசவாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள் அனைவரும் களத்தில் நிற்கிறார்கள். ஆங்காங்கே போராட்டங்கள். அன்றாடம் போலீசு அடக்குமுறை.



**எதிரிகள் ஓரணி**
**நாம் மட்டும் வேறணியா?**

நம்முடைய கோரிக்கைகள் வேறுபட்டவைதான்; ஆனால் அவற்றை மறுக்கின்ற மறுகாலனியாக்கக் கொள்கை ஒன்று. நாம் பறி கொடுத்த உரிமைகள் வேறாக இருந்தாலும், அவற்றைப் பறித்துக் கொண்ட அரசு ஒன்றுதான். நமது போராட்ட வடிவங்கள் வேறு; அவற்றை நசுக்குகின்ற போலீசு ஒன்று. எதிரிகள் ஓரணியில் நிற்கும் போது நாம் வெவ்வேறு அணிகளாய்ப் பிரிந்திருப்பதில் என்ன பொருள்?

நம்முடைய தொழில், நம்முடைய வாழ்க்கை, நம்முடைய உரிமை ஆகிய அனைத்தையும் பறிப்பது உலக வங்கிதான் என்று தெரிந்த பிறகும், அந்த உலக வங்கியின் கைக்கூலிதான் இந்த ஜெ. அரசு என்று புரிந்த பிறகும், ''என்னுடைய வேலை - என்னுடைய தொழில்'' என்று மட்டும் கோரிக்கை வைப்பதில் என்ன பொருள்?

■ ■ ■ ■

**நம்முடைய தொழில், நம்முடைய வாழ்க்கை, நம்முடைய உரிமை ஆகிய அனைத்தையும் பறிப்பது உலக வங்கிதான் என்று தெரிந்த பிறகும், அந்த உலக வங்கியின் கைக்கூலிதான் இந்த ஜெ. அரசு என்று புரிந்த பிறகும், ''என்னுடைய வேலை — என்னுடைய தொழில்'' என்று மட்டும் கோரிக்கை வைப்பதில் என்ன பொருள்?**

■ ■ ■ ■

பெரும்பான்மை உழைக்கும் மக்களாகிய நம்முடைய நலன்தான் இந்த நாட்டின் நலன்; விவசாயிகள் தொழிலாளர்களின் முன்னேற்றம்தான் இந்த நாட்டின் முன்னேற்றம். பெரும்பான்மை உழைக்கும் மக்களின் கண்ணீரையும் கதறலையும் கண்டு கொள்ளாமல் உலகவங்கியின் உத்தரவுக்கு மட்டுமே செவி சாய்க்கும் இந்த அரசு உலக வங்கியின் அடியாள் அரசு.

**வயிற்றுப் பிரச்சினை மட்டுமல்ல**
**மானப் பிரச்சினை!**

கல்வி இல்லை, மருத்துவம் இல்லை, வேலை இல்லை, சோறு இல்லை, தண்ணீரில்லை என்பதெல்லாம் நம் உயிர்ப் பிரச்சினை மட்டுமல்ல மானப் பிரச்சினை.

தமிழகத்துக்கே சோறு போட்ட தஞ்சை விவசாயியின் பிள்ளை பட்டினியால் சுருண்டு விழுந்து சாகிறான் என்றால் அது வெறும் சோற்றுப் பிரச்சினையா? மானம் காக்கும் துணி கொடுத்த நெசவாளர்கள், மானமிழந்து பிச்சையெடுக்கிறார்கள் என்றால் அது வெறும் வயிற்றுப் பிரச்சினையா? கல்விக்காகப் போராடும் மாணவர்களைக் கல்லூரிக்குள்ளேயே புகுந்து தாக்குகிறார்கள் காக்கிச் சட்டை ரவுடிகள் என்றால் அது வெறும் போலீசு அத்துமீறலா?

எல்லா மாவட்டங்களும் வறட்சியால் தவிக்கும் போது, தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக அறிவித்து வறட்சி நிவாரணம் தரமுடியாதென்பது வெறும் நிதிப் பிரச்சினையா?

பாசன நீருக்கும் குடிநீருக்கும் மக்கள் பரிதவிக்கும் போது, நிலத்தையும் நிலத்தடி நீரையும் பன்னாட்டு நிறுவனங்களுக்குப் பட்டா போட்டுக் கொடுப்பது வெறும் பொருளாதாரக் கொள்கைப் பிரச்சினையா?

இது மானப் பிரச்சினை; நம் அனைவரின் தன்மானப் பிரச்சினை; நமது நாட்டின் இறையாண்மை குறித்த பிரச்சினை. உலக வங்கியின் ஆணைகள் தான் இந்த நாட்டின் சட்டம் என்றால் அத்தகைய சட்டத்திற்கு நாம் ஏன் கட்டுப்பட வேண்டும்?

''வேலை கொடு இல்லையேல் சோறு போடு!'' என்று முழங்குவோம். வேலையும் உணவும் நம் வாழ்வுரிமை. பட்டினியால் துடித்துச் சாவதைவிட போலீசு அடித்துச் சாவது கவுரவமானது. அரை வயிற்றுக் கஞ்சிக்குக் கையேந்தி நிற்பதைவிடச் சிறைவாசம் மேலானது.

தஞ்சையில் வாழ்விழந்த விவசாயக் கூலிகள் மட்டும் 15 லட்சம்; அரசுக் கல்லூரி மாணவர்கள் ஒரு லட்சம்; ஆரம்பப் பள்ளிகளில் கல்வியிழந்த சிறுவர்கள் சில லட்சம்; வேலையிழந்த நெசவாளர்கள் பல லட்சம்; தொழிலாளர்களும் விவசாயிகளும் பல கோடி.

எத்தனைப் பேரைக் கைது செய்யும் இந்த அரசு? எத்தனைச் சிறைகள் நிரம்பும்? எத்தனை நாள் நீடிக்கும் இந்தக் கொடுங்கோல் ஆட்சி?

ஒவ்வொரு பள்ளியும், கல்லூரியும், நீதிமன்றமும், ரேசன் கடையும் போராட்டக் களமாகட்டும்! தமிழகத்தின் கிராமங்களும் நகரங்களும் கிளர்ந்தெழட்டும்!

கோட்டையும் கொடியும் ஜெயலலிதாவிடம் இருக்கட்டும்; போலீசு அதற்குக் காவலாய் நிற்கட்டும். தமிழகம் மக்கள் வசம் கைமாறட்டும்! ●



படிப்பகம்

www.padippakam.com

## "அழகி" விவாதம்:

# அழகியைக் கிண்டலடிப்பது ஓர் உள்நோக்கம்தான்....!

**தோழமைமிகு ஆசிரியர் அவர்களுக்கு,**

'அழகி' திரைப்பட விமரிசனம் 'புதிய கலாச்சாரம்' ஜூன் 2002 இதழில் கண்டேன்.

பொதுவாக 'கலை', 'விமரிசனம்' பற்றிய தத்துவ விளக்கங்கள் மிகச் சரியான பார்வை. ஆனால் இந்தக் கட்டுரை இந்தத் திரைப்படத்திற்கு அப்படியே பொருத்தம்தானா என்பதே இக்கடிதத்தின் காரணம்.

விடலைப் பருவத்தில் இயல்பாகத் தோன்றிய இனக் கவர்ச்சியையும், காதலையும் குழப்பிக் கொண்டு பதறித் துடிக்கிறார், கட்டுரையாளர். நகரத்தின் சாலையில் தனத்தைக் கண்டதும், சண்முகம் தன் மனைவியிடம் அனைத்தையும் சொல்லி ஒப்புதல் கேட்டிருக்கலாமே என்று நிர்ப்பந்திக்கிறார். அப்படியென்றால் ஒரு தங்கர்பச்சான் தேவையில்லையே. கட்டுரையாளரே தான் விரும்பும்படித் திருப்பங்களை வைத்து ஒரு படம் பண்ணி விடலாமே.

வளர்மதியிடம் வெளிப்படையாக உண்மையைச் சொல்லி ஒப்புதல் கேட்கும் அளவிற்கு, சண்முகம் தனத்தைக் காதலித்து சுற்றித் திரிந்து சுகம் அனுபவித்து, காசு, பணம், கௌரவம் என்றதும் கைவிட்டுவிட்டு ஓடி வந்தாரா?

சாலையில் ஆதரவற்றவளாக தனத்தைக் கண்டதும், "ஆஹா... கிடைத்து விட்டாள். இனி எப்படியாவது வசப்படுத்தி தன் வலைக்குள் சிக்க வைக்கலாம்.." என்று முடிவெடுத்து நண்பர் வீட்டில் வேலைக்குச் சேர்த்தாரா?

ஒருவேளை "வளர்மதிக்கு ஒரு முன்னாள் காதலன் இருந்து..."

ஒருவேளை "தனம் இந்த வீட்டில்தான் இருப்பாள். உனக்குச் சம்மதமில்லையென்றால் நீ வெளியே போடீ" என்று வளர்மதியிடம் சொல்லியிருந்தால்...

ஒருவேளை "தனம் இன்னாரென்று வளர்மதிக்குத் தெரியாமல் போயிருந்தால்..."

கட்டுரையாளரின் இந்த "ஒருவேளை" எல்லாம் எப்படி விமரிசனமாகும் என்று புரியவில்லை.

தனம் - சண்முகத்தின் தடுமாற்றங்கள் கூட காலநகர்வில் இயல்பாகத் தோன்றுவதாகத்தான் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களே அதைச் சரி செய்து நிதானப்படுத்துவதாக உள்ளன. இயலாத நிலையில் தனம் துணிவாக முடிவெடுத்து வெளியேறுகிறார். வளர்மதியையும் வறட்டுப் பிடிவாதக்காரியாக, ஆத்திரக்காரியாக யாரும் நினைத்ததாகத் தெரியவில்லை.

'அழகி' போன்ற கதையமைப்பு கொண்ட படங்களில் நாயகன் நாயகி தடுமாறும் காட்சிகளை நீலப்படங்களை விட கேவலமாகப் படமாக்கும், இயக்குநர் சிகரங்களும் இமயங்களும் நம்மிடம் இருக்கிறார்கள்.

> ஒருவேளை "வளர்மதிக்கு ஒரு முன்னாள் காதலன் இருந்து..." ஒருவேளை "தனம் இந்த வீட்டில்தான் இருப்பாள். உனக்குச் சம்மதமில்லையென்றால் நீ வெளியே போடீ" என்று வளர்மதியிடம் சொல்லியிருந்தால்... ஒருவேளை "தனம் இன்னாரென்று வளர்மதிக்குத் தெரியாமல் போயிருந்தால்..." கட்டுரையாளரின் இந்த "ஒருவேளை" எல்லாம் எப்படி விமரிசனமாகும் என்று புரியவில்லை.

அந்த நிலையில்... அழகி படத்தில் காட்டப்பட்டுள்ள மண்வாசனை மிக்க காட்சிகளைக் கிண்டல் அடித்துக் கொச்சைப் படுத்துவது, கட்டுரையாளருக்கு, 'அழகி' படத்தில் உள்ள கருத்தை விமரிசிப்பது தவிர வேறு ஏதும் உள்நோக்கம் இருக்குமோவென எண்ணத் தோன்றுகிறது.

இனியாவது கவனமாக இருக்க தோழமையுடன்.வேண்டிக் கொள்கிறேன்.

**என்றும் தோழமையுடன்**
**இ. ரமேசுகுமார், மதுரை - 2**

## "அழகி" விவாதம்:

# அழகியின் வெற்றியை மரியாதையுடன் பாருங்கள்!

**தோழர். மருதையன் அவர்களுக்கு, வணக்கமுடன் மு. களஞ்சியம், திரைப்பட இயக்குனர்.**

புதிய கலாச்சாரத்தில் 'அழகி' படத்தின் விமர்சனம் படித்தேன். ஒரு நல்ல விமர்சனம் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்தேதுமில்லை. ஒரு துறை குறித்த ஆழ்ந்த அறிவும், நுட்பமும் இல்லாமல் விமர்சனம் செய்ய முடியாது.

தங்களின் விமர்சனம், அந்த வகையில் "கதை" என்ற கண்ணோட்டத்தோடு விமர்சிக்கப்பட்டிருந்த விதம் பாராட்டுக்குரியது. அதிகப்பிரசங்கித்தனமாக தொழில் நுட்பத்துக்குள் மூக்கை நீட்டி, தங்களின் நுனிப்புல் மேயும் தனத்தை வெளிப்படுத்தும் வியாபாரப் பத்திரிக்கைகளின் விமர்சனச் சிங்கங்களிலிருந்து, தங்கள் பார்வை வேறுபட்டிருந்ததை முழுக் கட்டுரையிலும் உணர்ந்தேன். எனினும் அந்த விமர்சனம் குறித்துத் தங்களிடம் என் தனிப்பட்ட கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

உங்களைப் போன்ற சமூக அக்கறை கொண்டவர்களை, தன்பால் ஈர்த்திருப்பதே 'அழகி' படத்தின் உன்னதம் என நான் கருதுகிறேன். எனவே, கல் எறிய வேண்டியதும், காயப்படுத்த வேண்டியதும் 'அழகி' திரைப்படம் அல்ல. அதற்கு வேறு சினிமாக்கள் உள்ளன.

தமிழ் சினிமா இன்று உள்ள சூழலில், தமிழ் சினிமா இன்று சிக்கித் தவிக்கின்ற பிரச்சினைகளில் 'அழகி' மாதிரியானதொரு படம் வந்து ஜெயித்ததே பெரிய விசயம். அதை முதலில் நாம் மரியாதையோடு பார்க்க வேண்டும். படைக்கப்பட்ட படைப்பை இப்படிச் செய், அப்படிச் செய் என்று சொல்ல யாருக்கும் தகுதி இல்லை. அப்படி நினைத்தால் அது வேறு படைப்பு. நீங்கள் சினிமா குறித்த உங்கள் பார்வையை இன்னும் விரிவாக்குங்கள். நீங்கள் ஒருவர் உட்கார்ந்து எழுதுவது மாதிரி உருவாவதில்லை சினிமா. பார்க்கப்படாத சினிமாக்களில் காணாமல் போகும் பணம் பற்றி உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் சொல்வது மாதிரி படம் எடுத்து ஓடாமல் போனால் உங்களால் அதன்மீது போடப்பட்டுள்ள பணத்துக்கு உத்திரவாதம் தரமுடியுமா?

தரம் பிரித்துத் தகுதி குறைவாக்க வேண்டிய படம் 'அழகி'யில்லை. ரசனை மட்டம் குறைவாக உள்ள, சினிமா



படிப்பகம்

www.padippakam.com

குறித்த ''கலெக்ஷன்'' பார்வை மட்டுமே உள்ள சினிமா விநியோகஸ்தர்கள், தயாரிப்பாளர்கள், தியேட்டர் உரிமையாளர்கள் மத்தியில் சினிமா ரசனையை உயர்த்த ஒரு இலக்கியவாதி முயன்றிருக்கிறான் என்பதை ஏன் உங்களால் உணர முடியவில்லை?

சினிமாவில் எந்தப் படைப்பாளிக்கும் முதலில் கருத்துச் சுதந்திரம் இல்லை. யாரும் இது என் முழு உணர்வோடு வெளிவரும் படைப்பு எனச் சொந்தம் கொண்டாட முடியாத அளவுக்குப் பல்வேறு சிக்கல்கள் உள்ளன.

இன்றைக்கு உள்ள கேபிள் டி.வி., சாட்டிலைட் டி.வி., வி.சி.டி. பிரச்சினைகளில் சாதாரணமாக எவனாலும் படமெடுக்கவே முடியாது. இந்நிலையில், சினிமா குறித்த அறிவு சிறிதும் இல்லாமல், பணம் போட்டுப் பணம்



எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, எங்கிருந்தோ தயாரிப்பாளரைச் சரி செய்து, இப்படியொரு படம் எடுத்ததற்காக தங்கர்பச்சானை உயர்த்திப் பிடியுங்கள். அதன் பிறகு நமது முற்போக்குச் சாட்டையைத் தூக்கித் தாக்கலாம். வெகுஜனங்கள் மதிக்கும், வெகுஜனங்கள் ரசிக்கும் அளவுக்கு ஒரு படைப்பு என்றால் அது இப்படித்தான் இருக்க வேண்டும் என 'அழகி' படத்தில் காமடி ட்ராக் சேர்க்கப்பட்ட போது, கலங்கி நின்ற தங்கர்பச்சானை நீங்கள் பார்த்திருக்க முடியாது. அது விநியோகஸ்தர்களின் நிர்ப்பந்தம். அதை யார் தடுப்பது?

முதலில் 'அழகி' மாதிரிப் பத்துப் படம் வரட்டும். ஒரு ஆரோக்கியமான சூழல் தமிழ் சினிமாவில் வளரட்டும். அரசியல் மாதிரியே சினிமாவும் ஒரே நாளில் மாறிவிடாது. மாற்றம் என்பது அதற்கான காலத்தை எடுத்துக் கொண்டே தீரும்.

இறுதி முடிவு பற்றித்தான் நமது கவலை என்றால் வளர்ச்சி என்பதே அர்த்தமற்றதாகி விடும்.

**— மு. களஞ்சியம்,**
**திரைப்பட இயக்குநர்.**

---

''அழகி'' விவாதம்:

# அழகியின் அற்ப உணர்வும் சில 'அப்பாவி'களும்

'அழகி' திரைப்படத்தை ஒரு சில அம்சங்களில் விமரிசிப்பவர்கள் கூட பொதுவில் அது ஒரு சிறந்த படமென்பதை ஏற்பார்கள்'' என்ற பொதுக்கருத்திலிருந்தே இவ்விரு கடிதங்களும் எமது விமரிசனத்தை மறுக்கின்றன. கரகாட்டம், காமெடி ட்ராக் போன்ற ஜனரஞ்சகங்கள் கூட பிரச்சினையல்ல, 'அழகி' யின் கதையும், கதையாக்கமும், அது எழுப்பும் உணர்ச்சியுமே மிக முக்கியமான பிரச்சினை. எனவே அந்தப் பொதுக்கருத்தை நாங்கள் ஏற்கவில்லை என்பதுடன் அது தவறு என்பதே எமது நீண்ட விமரிசனத்தின் சாரம்.

ஆனாலும் 'அழகி'யின் வசீகரத்திலிருந்து நமது வாசகர் சிலர் இன்னமும் விடுபடவில்லை என்பதும் தெரிகிறது. வறண்டு போன தமிழத்திரையுலகின் களைப்பில் வாராது வந்த பாலைவனச் சோலையால் அவர்கள் மகிழ்கின்றனர். ஆயினும் அது சோலையல்ல கானல் நீரே என்பதை ஓரிரு பக்கங்களில் முடித்திருக்கலாம். ஐந்து பக்கங்களில் விரிவாகவும், ஆழமாகவும் எழுதியதன் காரணம், 'அழகி' ஏற்படுத்திய அற்ப உணர்வின் பேரலைதான்.

இனி 'அழகி' குறித்த விவாதத்தைப் பரிசீலிக்கலாம். வாசகர் இரமேஷ்குமார் கட்டுரையாளர் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் உள்நோக்கத்துடன் எழுதியிருப்பதாகக் கருதுகிறார். 'அழகி'யின் விமரிசனம் திரையரங்கை விட்டு வெளியேறியவுடன் ஒரு தேநீரைக் குடித்துவிட்டுக் கடகடவென்று எழுதியதல்ல. அப்படி யாரும் எழுதவும் முடியாது. '' 'அழகி'யின் கலை உணர்ச்சியில் கவரப்பட்டு அது ஒரு நல்ல படம் என நினைத்திருந்தோம், பு.க. விமரிசனம் முதலில் படிக்கும்போது உறுத்தலாக இருந்தது, பின்னரே அது சரியெனப் புரிந்து கொண்டோம்'' என்று பல வாசகர்கள் நேரிலும், கடிதத்திலும் தெரிவித்திருந்தனர்.

அது உண்மைதான். தங்கர்பச்சானின் திறமையான கலைமொழி தரும் உணர்ச்சி தவறென்பது சட்டென்று யாருடைய அறிவுக்கும் தோன்றிவிடாது. எனவே, படம் பார்த்த பின் சில நாட்கள் தனமாகவும், வளர்மதியாகவும், சண்முகமாகவும் வாழ்ந்து சிந்தித்த போதே இது ஒரு அற்ப மனிதனின் அவலம் என்பதை அறிவு கண்டு சொன்னது. மேலும் விமரிசனம் செய்யும் எந்த பிரச்சினையிலும் ''நான்'' எப்படி இருப்பேன் என்பதை நேர்மையாகப் பரிசீலனை செய்யும் ஒருவரே அந்த விமரிசனத்தை மற்றவர்களது சொந்த உணர்வில் ஏற்கச் செய்ய முடியும். அந்த வகையில் ஒவ்வொரு விமரிசனத்திற்குள்ளும் ஒரு சுய விமரிசனம் உள்ளது.

எனவே போகிற போக்கில் 'உள்நோக்கத்துடன் எழுதியதாக'க் கருதும் அந்த வாசகர் அது சரிதானா என்பதை உணர்ச்சி வசப்படாமல் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்து, இந்த வாசகர் எழுப்பும் சில கேள்விகளைப் பரிசீலிக்கலாம். இவற்றின் சாரம், ''தங்கர்பச்சான் எனும் படைப்பாளி உருவாக்கிய கதையில் கட்டுரையாளர் கோரும் மாற்றங்கள் எப்படிச் சரியாகும்? சண்முகத்திற்கும் – தனத்திற்கும் உள்ள உறவு விடலைப்பருவத்தில் இயல்பாகத் தோன்றிய இனக் கவர்ச்சி தானே ஒழிய காதலோ, வைப்பாட்டி உறவோ அல்ல; ஒருவேளை... என்று கட்டுரையாளர் கூறும் ஜோசியங்களுக்கு அவரே படமெடுப்பதுதான் சரி; கதையில் பாத்திரங்களின் வார்ப்பும், தடுமாற்றமும், அவற்றினை நிதானப்படுத்துவதும், திருப்பங்களும் வெகு யதார்த்தமாக உள்ளன. எனவே கட்டுரையாளர் விமரிசனம் வெறும் வீம்பாகத் தெரிகிறது''

'அழகி'யின் இயக்குநர் அத்திரைப் படத்தை யதார்த்தமாக அவரது சொந்தப் படைப்புத்திறனில் எடுத்திருக்கிறார் என்பதும் உண்மைதான். ஆனால் அதே இயக்குநர் சொல்லியது போல ''இது ஒவ்வொருவர் வாழ்விலும் நடந்திருக்கக் கூடிய கதை'' என்பதுதான் பிரச்சினை. அந்த ஒவ்வொருவர் சார்பாகவும் சண்முகம் என்ற பாத்திரத்தைப் படைத்து அவனது துயரத்தில் அந்த ஒவ்வொருவரையும் சண்முகமாக மாற்றிக் கலங்கச் செய்கிறாரே அதுதான் முக்கியமான பிரச்சினை.

அந்தக் கலக்கமும், வேதனையும் ஒரு மனிதனின் தவறுகளையும், தடுமாற்றங்களையும் அவனையே உணரச் செய்து,



படிப்பகம்

www.padippakam.com

இதயத்தைத் தூய்மைப்படுத்தும் துன்ப மல்ல. மாறாக அந்தத் தவறுகளையே தான் செய்த தியாகமாகக் கருதுவது, அவனது இதயத்தை மேலும் கறைப்படுத்திக் காரியவாத வாழ்க்கையில் பீடு நடை போட வைப்பது எல்லாம் எப்படி நியாயமாகும்? இது ஒரு மனிதனின் வாழ்க்கையில் நடக்கின்ற போராட்டத்தில் சுயநலனையே முன்னிறுத்துகிறது. இத்தகைய மனிதர்கள்தான் லஞ்சம் வாங்குவதும், லட்சம் கொடுத்து மெடிக்கல் சீட் பெறுவதும், அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு ஏமாறுவதும், தெருப்பிரச்சினைக்கே வீட்டுக் கதவைச் சாத்துவதும் முதலானவற்றைக் குற்ற உணர்வின்றி நியாய உணர்வோடு செய்பவர்கள்.

இதைப் புரிய வைப்பதற்குத்தான் அந்த ''ஒரு வேளை''... என்ற குறுக்கீடு தேவைப்படுகிறது. வாசகர் குறிப்பிடுவது போல சண்முகமும், தனமும், வளர்மதியும் இயல்பாகத்தான் தடுமாறுகிறார்கள். ஆனால் அந்த இயல்பு பார்க்கின்ற நம்மைப் போன்ற ரசிக சண்முகங்களைக் குற்ற உணர்ச்சிக்கு ஆட்படுத்துவதில்லை. இதெல்லாம் சகஜம் தானே எனும் வழக்கு இந்தத் தவறுகளெல்லாம் நியாயம்தான் என்பதைத்தானே குறிப்பிடுகிறது? எனவேதான் அந்த இயல்பை மீறிப் பார்க்க பாத்திரங்களையும் கதை ஓட்டத்தையும் மாற்றிப் போடுகிறோம். இதனால் தங்கர் பச்சான் எதையும் இழக்கப் போவதில்லை. மாறாகப் படம் பார்க்கும்போது நாம் எதை இழந்தோம் என்பதைப் புரிந்து கொள்வோம். அது வாழ்க்கை குறித்த நேர்மையான மதிப்பீடுகளை நாம் கற்றுக் கொள்வதற்குத் தடுமாறாமல் இருக்க உதவி செய்யும்.

சண்முகம் தனது பால்யப் பருவத்துத் தோழி அல்லது காதலி தனத்தை தனது மனைவி வளர்மதிக்குத் தெரியாமலேயும், பிறகு வேறு வழியின்றி ஊர்க்காரி என்பதைத் தெரிவித்தும், அதன் பிறகு வேறு வேறு வழியின்றி தனத்தை விரும்பியதாகவும் தெரிவித்து உதவி செய்கின்றான். இங்கே உதவியை இரக்கமாகப் பார்க்கும் நமக்கும் இந்த 'வேறு வழியின்றி' இயல்பாகவும் அதாவது இந்தச் சூழ்நிலையில் வேறு என்ன செய்ய முடியும் என்பதாகவும் படுகிறது. அதுதான் பிரச்சினை.

அந்தப் பிரச்சினை யாதெனில் சண்முகத்திற்கும் வளர்மதிக்கும் இடையே உள்ள தாம்பத்திய உறவு பொய், இருவரும் இருவரையும் முழுமையாக நம்பவில்லை, முக்கோண உறவில் வரும் ஒரு பெண் உறவை வெளிப்படையாக வரவேற்றுப் பராமரிக்கும் நாகரீகம் இருவரிடமும் இல்லை. இத்தகைய போலி உறவுகளை உருவாக்கி, வாழ்ந்து, தலைமையேற்று, அதையே தியாகம் என்று அழுகிறானே சண்முகம். அவன்தான் நமது விமரிசனத்தின் இலக்கு.

எனவே ''சண்முகம் ஏன் ஒரு சராசரி மனிதனாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறான் என்பதல்ல நம் கேள்வி. இந்தச் சராசரி மனிதனின் அற்பத்தனங்கள் இடித்துரைக்கப்படாமல் அனுதாபத்துடன் சித்தரிக்கப்படுவது ஏன்'' என்பதுதான் நமது விமரிசனத்தின் சாரம். ஆகவே வாசகர் இரமேஷ் குமார், 'அழகி'யின் விமரிசனத்தைப் பொறுமையுடன் படித்துப் பார்க்குமாறு வேண்டுகிறோம்.

ஒருவேளை 'அழகி'யின் சண்முகம் அப்படி ஒன்றும் சமூகக் குற்றங்கள் செய்யவில்லையே, அப்பாவிதானே என்று அவர் நினைக்கக் கூடும்; ஆனால் வரலாற்றில் இந்த அப்பாவிகள் ஏராளமானோர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஜெர்மனியின் ஹிட்லர் நடத்திய இனப்படுகொலையில் பங்கேற்கவில்லையென்றாலும், ஹிட்லரின் ஆட்சிக்கு அங்கீகாரம் கொடுத்த அப்பாவி ஜெர்மனிய மக்கள், அகமதாபாத்தைப் பிணக்காடாக மாற்றிய கொடூரத்தில் நேரடியாகப் பங்கெடுக்கவில்லை என்றாலும், நகரம் எரியும் போது வேடிக்கை பார்த்த குஜராத்தின் அப்பாவி இந்துக்கள், தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை தன் சாதிவெறியர்கள் துரத்தியபோது அதைத் தடுக்கத் தவறிய அப்பாவித் தேவர் சாதி மக்கள், ஈராக்கிலும், ஆப்கனிலும் குண்டு போடும் அமெரிக்க அரசைத் தடுக்க வழியின்றித் திகைத்து நிற்கும் அப்பாவி அமெரிக்க மக்கள் என்று அப்பாவிகளின் பட்டியல் வரலாற்றில் நீளமாகத்தான் இருக்கின்றது.

**சண்முகமும், அவனது கையறு நிலையின் அவலத்தை இதயத்தில் சுமந்த சண்முகங்களாகிய நாமும், இன்னமும் அப்பாவிகள் என்று கருதிக் கொண்டிருந்தால் குற்றவாளிகள் என்ற பட்டியலில் ஏதோ ஒரு முகாந்திரத்தில் சேருவதற்குக் காத்திருப்போம். நாம் அப்பாவியல்ல, கடைந்தெடுத்த காரியவாதி என்று செய்த குற்றத்தைச் சுயவிமரிசனம் செய்தால் எந்தக் குற்றவாளிப் பட்டியலிலும் சேராமல் போராடுவோம். வாசகர்கள் பரிசீலிக்கட்டும்.**

எனவே சண்முகமும், அவனது கையறு நிலையின் அவலத்தை இதயத்தில் சுமந்த சண்முகங்களாகிய நாமும், இன்னமும் அப்பாவிகள் என்று கருதிக் கொண்டிருந்தால் குற்றவாளிகள் என்ற பட்டியலில் ஏதோ ஒரு முகாந்திரத்தில் சேருவதற்குக் காத்திருப்போம். நாம் அப்பாவியல்ல, கடைந்தெடுத்த காரியவாதி என்று செய்த குற்றத்தைச் சுயவிமரிசனம் செய்தால் எந்தக் குற்றவாளிப் பட்டியலிலும் சேராமல் போராடுவோம். வாசகர்கள் பரிசீலிக்கட்டும்.

ஆக 'அழகி' வாராது வந்த மாமணி என்று இயக்குநர் களஞ்சியம் கொண்டாடுவதில் எந்தப் பலனுமில்லை. போட்ட பணத்திற்கு உத்தரவாதம் தரமுடியுமா என்று கேட்கும் அந்த இயக்குநர் ''வழக்கம் போல''ப் படைப்பாளிக்கு உரிமையில்லை, மக்கள் ரசனை குறைவு, சினிமா மூலதனமிட்டு நடத்தப்படும் தொழில் என்றெல்லாம் விளக்குகிறார். உங்கள் தொழிலுக்கு வருமானத்தை அள்ளித் தருபவர்கள் முதலாளிகளல்ல, மக்கள்தான். விளக்கு பிடிக்கும் லைட்பாயிலிருந்து, சுவரொட்டி அடிக்கும் அச்சகத் தொழிலாளி, சுவரொட்டி ஒட்டும் தொழிலாளி, இருட்டரங்கில் சீட்டுக் கிழிக்கும் பணியாள், நீங்கள் 'டிஸ்கசன்' நடத்தும்போது எச்சில் தட்டைக் கழுவும் சிறுவன் என்று பாதிச் சமூகமே திரைப்படத் தயாரிப்பில் பங்கெடுப்பது இயக்குநர் களஞ்சியத்துக்குத் தெரியுமா? எனவே இத்தகைய மக்களுக்கு நன்றியுடன் இருப்பது எப்படி என்பதையும், அவர்கள் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல சினிமாக் கலையின் மூலம் என்ன உணர்ச்சியைத் தர முடியும் என்பதையும் கற்றுக் கொள்ள முயலுங்கள்; போராடுங்கள்.

இந்தப் போராட்டம் ஏதோ அரிதானதோ புதியதோ அல்ல! இந்தியாவிலும் பல்வேறு மூன்றாம் உலக நாடுகளிலும் அப்படிப் போராடிய இயக்குநர்களும், வெளிவந்த திரைப்படங்களும் சமகால வரலாற்றில் கம்பீரமாக இடம்பெற்றிருக்கின்றனர்; இருக்கின்றன. எனவே அதையும் தெரிந்து கொண்டு உண்மையான படைப்பாளியாக மாற முடியுமா என்று பாருங்கள். அதற்கு மேலும் முடியவில்லை என்றால் என்ன செய்வது?

பரவாயில்லை, திரையுலகத்தை விட்டு வெளியேறுங்கள். மக்களை நேசிக்கும் ஒரு கலைஞனுக்கு சினிமா என்பது நிபந்தனையல்ல; ஒரு பறையும் மக்கள் கூடும் ஒரு கடைத்தெருவும் போதும்!

– ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# பாபாவும் பக்த கேடிகளும்

சில திரைப்படங்களுக்கு எழுத்தில் விமரிசனம் செய்தால் போதுமானதாக இருப்பதில்லை. சமகால வரலாற்றைத் திரித்து பம்பாய், ரோஜா போன்ற இந்து மதவெறி ஆதரவுப் படங்களை மணிரத்தினம் வெளியிட்டபோது அவற்றுக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினோம். பாலியல் வக்கிரங்களையே பண்பாடாக்கும் ஆபாசத் திரைப்படங்களுக்கு எதிராகவும் இத்தகைய நேரடி நடவடிக்கை தேவைப்பட்டிருக்கிறது.




ஆபாசமும் வக்கிரமும் படத்திற்குள்ளேதான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பாபா திரைப்படத்தைப் பொறுத்தவரை அதன் கதை இன்னதென்று தெரியாவிட்டாலும், படம் வெளியாவதற்கு முன்னால் அதற்குப் பத்திரிகையுலகம் அளித்த விளம்பரமும், தமிழகமெங்கும் பாபா வெளியீட்டையொட்டி நடைபெற்ற கூத்துகளும் ஆபாசம் வக்கிரம் என்ற சொற்களுக்குள் அடக்கவியலாத அளவுக்கு அருவெறுப்பானவை.

இந்த அசிங்கம் தோற்றுவிக்கும் நாற்றத்தை எதிர்கொள்ளவியலாமல் மூக்கைப் பிடித்துக் கொண்டு ஒதுங்கிச் செல்வதென்பது தமிழ் மக்களின் சுயமரியாதைக்கே விடப்பட்ட சவாலாகக் கருதினோம். எனவே தமிழகத்தில் ரஜினியின் தலைமை ரசிகர் மன்றம் இயங்கும் திருச்சியில், பாபாவையும் பக்தகேடிகளையும் நேருக்கு நேர் சந்திப்பது என்று களத்தில் இறங்கினோம்.

பாபா வெளியிடப்பட்ட ஆகஸ்டு 15 அன்று தமிழகத்தின் சூழல் என்னவென்பதை வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறோம். நெசவாளர்களுக்குக் கஞ்சித் தொட்டி வைத்த தி.மு.க.வினர், முட்டை பிரியாணிக் கும்பலிடம் அடி வாங்கி, சிறை சென்று முன்னாள் சபாநாயகர் உள்ளிட்ட 110 பேர் தண்டிசன் பெயிலில் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தனர்; நெசவாளர்கள் ஆங்காங்கே போராடிக் கொண்டிருந்தனர்.

காவிரியில் தண்ணீர் விடாமல் கர்நாடகம் அடாவடித்தனம் செய்து கொண்டிருந்தது. தஞ்சை பஞ்சபூமியாகி விவசாயிகள் எலிக்கறி தின்னும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர். தமிழகமெங்கும் ஆசிரியர் போராட்டம், வழக்குரைஞர் போராட்டம்.

இந்தச் சூழலில் தமிழகப் பத்திரிக்கைகளில் பாபா தான் அட்டைப்படக் கட்டுரை அல்லது முக்கியச் செய்தி. இதைவிடப் பெரிய பூச்செண்டை பாபாவைத் தவிர யாரும் ஜெயலலிதாவுக்கு வழங்கியிருக்க முடியாது. அந்த அளவிற்கு இருட்டடிப்பு செய்யப்பட்டன மக்கள் பிரச்சினைகள்.

பாபா வெளியீட்டிற்கு இரண்டு நாட்கள் முன் ராமதாஸ் ரஜினியைப் பற்றித் தெரிவித்த விமரிசனம் பத்திரிகைகளில் பெற்ற முக்கியத்துவத்தைக் காட்டிலும், ராமதாசுக்கு ரஜினி ரசிகர்கள் தமிழகமெங்கும் கொடும்பாவி கொளுத்திய செய்திதான் முக்கியத்துவம் பெற்றது. ரசிகர்கள் ''கொந்தளிப்பு - ஆவேசம்'' என்றும் ரஜினி மட்டும் தடுத்து நிறுத்தாமலிருந்தால் ரசிகர்கள் தமிழ்நாட்டையே கொளுத்தி விடுவார்கள் என்பது போலவும் ஒரு பயங்கரத் தோற்றத்தையும் உருவாக்கின பத்திரிக்கைகள்.

தங்கள் முகத்தை பூதக்கண்ணாடி வழியே பார்த்து தைரியம் பெற்ற ரசிகர்கள் எனப்படும் தெள்ளவாரிகள் கூட்டம் ''ராமதாசையும் திருமாவளவனையும் பொடாவில் கைது செய்'' என்று அறிக்கை விட்டு தங்கள் அரசியல் பார்வையைத் தெளிவுபடுத்தியது; இதுவும் மாலைப் பத்திரிக்கைகளின் முதல் பக்கச் செய்தியானது.

திருச்சி நகரமோ பாபா நகரமாகவே இருந்தது. ஷாகுல்ஜி (ஷாகுல் ஹமீது) தலைமையில் அதிகாரபூர்வ ரசிகர் மன்றம்; கலீல்ஜி (கலீல்) தலைமையில் போட்டி ரசிகர்மன்றம். மாவட்டத்தில் மொத்தம் 550 கிளைகள். இரு ரசிகர் மன்றங்களுக்கடையிலான போட்டியில் திருச்சி நகரத்தின் எல்லாச் சுவர்களுக்கும் ஆயில் பெயிண்ட் அடித்து விட்டனர். ஒரு சுவர் விளம்பரத்துக்கு 3000 ரூபாய் என்று மதிப்பிட்டாலும் மொத்தம் சுமார் 18 லட்சம் ரூபாய்க்கு (600 இடங்களுக்கு மேல்) பாபா விளம்பரம் செய்திருந்தனர். விளம்பர வாசகங்களைப் படித்தால் தன்மானமுள்ள வாசகர்களுக்கு அது கொலை வெறியை ஏற்படுத்தும் என்பதால் எழுதாமல் விடுகிறோம்.

இவையன்றி, சுவரொட்டிகள். ரஜினி திரைப்படத்தின் தயாரிப்பு செலவு 5 கோடியென்றால் ரசிகர்கள் செய்யும் விளம்பரச் செலவு 10 கோடி என்பதை 'படையப்பா' படம் வெளிவந்த போது உரிய விவரங்களுடன் புதிய கலாச்சாரத்தில் எழுதியிருக்கிறோம். மூன்றாண்டுகளுக்குப் பிறகு 'தலைவர்' படம் வருகிறதென்பதால் விளம்பரம் எப்படி இருந்திருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ரஜினியின் நண்பரும் தொழில் கூட்டாளியுமான முன்னாள் காங்கிரசு எம்.பி. அடைக்கலராஜின் கொட்டகை உட்பட 3 திரையரங்குகளில் படம் திரையிடப்பட்டது. ஆகஸ்டு - 15 அன்று



படிப்பகம்

www.padippakam.com

மட்டும் 5 திரையரங்குகளில் அன்றாடம் 5 காட்சிகள்.

ஆகஸ்டு - 14-ம் தேதியன்று போலிச் சுதந்திரத்தை அம்பலப்படுத்தி ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியிருந்த திருச்சி நகர ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. தோழர்கள், ஆகஸ்டு - 15-ம் தேதியன்று பாபா திரையிடப்படும் ரம்பா திரையரங்கின் வாயிலில் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கும் கண்டன ஊர்வலத்திற்கும் போலீசிடம் அனுமதி கேட்டனர்.

''சுதந்திர தினத்தன்று குடிமக்கள் எந்த விதமான ஜனநாயக உரிமையையும் பயன்படுத்த அனுமதிப்பது வழக்கமில்லை'' என்ற புனிதமான மரபை போலீசார் சுட்டிக் காட்டினர். 16-ஆம் தேதி அனுமதியளிப்பதாக வாக்களித்தனர்.

''பாபாவுக்குப் பால்குட ஊர்வலம் நடத்த அனுமதித்தால் அதை எதிர்த்து காலிப்பானை ஊர்வலம் நடத்துவோம்'' என்று போலீசை எச்சரித்தோம். பால்குட ஊர்வலத்தை அனுமதிக்க மாட்டோமென உறுதியளித்தனர் போலீசு அதிகாரிகள்.

ரஜினியின் படம் வெளியாகும் நாளன்று நகரம் எப்படி இருக்குமென்பதைத் தமிழக மக்களுக்கு விளக்கத் தேவையில்லை. சுதந்திர தினத்தன்று பிராந்திக் கடை திறக்கக்கூடாது என்ற 'கருப்புச் சட்டம்' அமலில் இருப்பதால் 14-ம் தேதியே போதுமான அளவு 'ஜனநாயகத்தை' வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டிருந்தார்கள் பாபாவின் பக்த கேடிகள்.

எம் தரப்பில், பாபாவை அம்பலப்படுத்தும் 3500 சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டன. இவற்றை 14-ம் தேதி இரவு ஒட்டுவதைக் காட்டிலும் காலையில் ஒட்டுவதன் மூலம்தான் பக்த கேடிகளை ''நேருக்கு நேர் சந்திக்கும்'' வாய்ப்பு கிடைக்கும் என்பதாலும், ரஜினி ரசி

## ரசிகர்கள்: விடலைகளா? விபரீதங்களா?

விடலைப் பருவத்துக்கேயுரிய அறிவு வளர்ச்சியும் உதிரித்தனமும் கொண்ட உழைக்கும் வர்க்கத்து இளைஞர்கள்தான் ரஜினி ரசிகர்களில் (எல்லா ரசிகர்களும்தான்) முக்கியமானவர்கள். குழப்பமான, உதிரித்தனமான மனோபாவத்தில் வளரும் இவர்கள் ரஜினியைத் தலைவா என்றும் தெய்வமே என்றும் கொண்டாடுகிறார்கள்.

இந்த விடலைத்தனம் இத்தோடு முடிந்துவிடுவதில்லை. பிழைப்புவாத அரசியலின் சமூக அடித்தளமாக இவர்கள் மாறுகிறார்கள். எம்.ஜி.ஆர். கட்சி இதற்கொரு முன்னோடி. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற பாசிச சக்திகள் அதிகாரத்துக்கு வரும்போது இதே கூட்டம் அவர்களது குண்டர் படையாக மாறுகிறது. இந்தக் கொக்குகளின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடித்து விடலாம் என்பதுதான் போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட ஓட்டுப் பொறுக்கிகளின் கனவு.

ராஜ்குமாருக்குக் குரல் கொடுத்த ரஜினி, காவிரிக்குக் குரல் கொடுக்காதது ஏன் என்று கேட்டபோது ''தேவையில்லை சார், அவர் ஒரு பிசினஸ்மேன்'' என்று திமிராகப் பதில் சொன்னார் ஒரு ரசிகர் மன்றத் தலைவர்.

''நீங்கள் முசுலீமாக இருக்கிறீர்கள்; ரஜினியோ ஆர்.எஸ்.எஸ். சாமியார்தான் குரு என்கிறாரே'' என்று கேட்டதற்கு ''எங்களுக்குத் தலைவர் அவரு. அவருக்கு யார் குரு என்று எங்களுக்குக் கவலையில்லை'' என்று தெனாவெட்டாகப் பதில் சொன்னாராம் திருச்சி நகரத் தலைவர் ஷாகுல் ஹமீது.

அரசியல், சமூகப் பிரச்சினைகளில் ரஜினியின் நிலை பற்றிச் சொன்னால் ''அவர் அரசியல்வாதி கிடையாது; நடிகர்'' என்கிறார்கள் ரசிகர்கள். அப்புறம் ''தலைவா, தமிழகத்தைக் காப்பாற்று என்று எழுதுகிறீர்களே'' எனக் கேட்டால், ''அவர் அரசியலுக்கு வந்தால் நாட்டைக் காப்பாற்றுவார்'' என்று திருப்பிப் பேசுகின்றனர். ஓட்டுப் பொறுக்கிகளை விஞ்சுகிறது ரசிகர்களின் சந்தர்ப்பவாதமும் திமிரும்.

''தலைவா, காங்கிரசில் சேர்; தனிக்கட்சியாவது தொடங்கு'' என்று 1995 இல் ரஜினிக்கு வேண்டுகோள் விட்டவர்கள் இந்த ரசிகர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. குறிப்பாக, பிராந்திக்கடை, ரியல் எஸ்டேட் போன்ற தொழில்களை நடத்தும் ரசிகர் மன்றத் தலைவர்கள், வட்டம் மாவட்டத்துக்குரிய அனைத்துத் தகுதிகளுடனும் தலைவராக இருக்கின்றனர். பெயர்ப் பலகை மாற வேண்டியதுதான் பாக்கி.

இந்தக் கும்பல் மேலிருந்து கீழ்நோக்கி எப்படிக் கிரிமினல் மயமாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு பாபா டிக்கெட் விற்பனை.

பாபா படத்தை விநியோகஸ்தர்கள் மூலமாக விற்காமல் நேரடியாகத் திரையரங்குகளுக்கு விற்றிருக்கிறார் ரஜினி. பத்திரிக்கைகளின் கணிப்புப்படி மொத்த வருமானம் 70 கோடி.

பன்மடங்கு தொகை கொடுத்து படத்தை வாங்கிய தியேட்டர் அதிபர்கள் ஒவ்வொரு காட்சியையும் ஏலம் விட்டுள்ளனர். ரசிகர் மன்றத்தின் நகரத் தலைவர்களுக்கு முதல் காட்சி. திருச்சியில் ஷாகுல் ஹமீதுக்கு 4 காட்சி; கலீலுக்கு 2 காட்சி. இதை ரசிகர்களிடமே பிளாக்கில் விற்று சில லட்சங்களை இவர்கள் சுருட்டிக் கொள்வார்கள்.

மற்ற காட்சிகளனைத்தும் பகிரங்க ஏலம். ரசிகர்கள், ரசிகரல்லாதவர்கள் எனப் பலரும் ஏலம் எடுத்துள்ளனர். 1000 இருக்கைகள் கொண்ட அரங்கில் ரூ. 50 (சராசரி) வீதம் ஒரு காட்சியின் உண்மையான விலை 50,000. கேளிக்கை வரி இதற்கு மட்டும்தான்.

ஒரு காட்சி ஒரு லட்சம் முதல் ஒன்றேகால் லட்சம் வரை ஏலம் விடப்பட்டிருக்கிறது. ஒரு டிக்கெட் 100, 125-க்கு வாங்கி 200, 250-க்கு விற்று விடலாமென்றும் ஒரே நாளில் 50,60 ஆயிரங்களைப் பார்த்துவிடலாம் என்றும் கனவு கண்டவர்கள் ஏலமெடுத்திருக்கிறார்கள். வீடு, நகையை அடமானம் வைத்து, மீட்டர் வட்டிக்குக் கடன் வாங்கியும் பலர் முதலீடு செய்திருக்கின்றனர்.

படம் தோல்வியடைந்ததால் இப்படி நூற்றுக்கணக்கான பேர் தமிழகமெங்கும் திவாலாகியிருக்கின்றனர். மனைவிக்குத் தெரியாமல் நகையை வைத்து ஒரேநாளில் சம்பாதித்து மனைவியிடம் காட்டி அவளை ஆச்சரியத்திலாழ்த்த விரும்பியவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்கள். சிலர் தற்கொலை செய்து கொள்ளும் நிலையில் இருப்பதாகச் சொன்னார் ஒரு திரையரங்க அதிபர்.

திருச்சி நகரில் ஒரே நாளில் இத்தகைய 'முதலீட்டாளர்கள்' பத்துப் பேரைச் சந்தித்தோம். எல்லோரும் 40,000 முதல் 75,000 வரை இழந்தவர்கள். திடீர்க் காசு பார்க்க விரும்பிய இந்தக் கூட்டம் ஏமாந்து விட்டது குறித்து நாம் வருந்தத் தேவையில்லை. ஆனால் ரஜினி அடித்த கொள்ளையில் எத்தனைத் தாலிகள் அறுந்திருக்கின்றன என்பதற்கு இது ஒரு சான்று.

இந்த அர்சத் மேத்தாவின் பெயர் பாபா!



படிப்பகம்

www.padippakam.com

## ''ஈராயிரம் ஆண்டுகளாய் உயிரோடிருந்து, ஏசு முதல் ரஜினி வரை எல்லோருக்கும் ஆசி வழங்கிய இமயத்து பாபாவின் இயற்பெயர் என்ன — கஞ்சாச் செடி!''

கர்கள் எனும் ''மாபெரும் சக்தி'' பற்றி மக்களிடம் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் பிரமையை உடைக்க முடியும் என்பதாலும் ஆகஸ்டு 15 அன்று காலையில் ஒட்டுவதென முடிவு செய்தோம்.

செஞ்சட்டையணிந்த தோழர்கள் பல குழுக்களாகப் பிரிந்து திருச்சி நகரின் எல்லாப் பேருந்துகளிலும் சுவரொட்டிகளை ஒட்டினர். மக்கள் கும்பல் கும்பலாகப் படித்து ரசிக்கத் தொடங்கினர். ரசிர்கள் நின்று படித்துவிட்டு மவுனமாக இடத்தை விட்டு அகன்றனர்.

ஒட்டும்போது வம்புக்கு வந்தாலோ ஒட்டிய பிறகு கிழித்தாலோ என்ன நடக்கும் என்பது சுவரொட்டியிலேயே அச்சிடப்பட்டிருந்தது. படித்துப் புரிந்து கொள்ளத் தவறும் ரசிகர்கள் பார்த்தே புரிந்து கொள்ள ஏதுவாக உரிய தயாரிப்புடன் சென்றனர் தோழர்கள். ''ராமதாசுக்குத் தமிழகமெங்கும் கொடும்பாவி கொளுத்தினார்கள், கொதிக்கிறார்கள், கொந்தளிக்கிறார்கள்'' என்று பத்திரிகைகளால் வருணிக்கப்பட்ட ரசிகர்கள் ஒரு இடத்திலும் மூச்சு விடவில்லை.

தேநீர்க் கடைகள், தெருக்கள் என்று நகரின் உட்பகுதிகளெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஒரேயொரு தெருவில் சுவரொட்டியைக் கிழித்த ரசிகர் கூட்டத்தைத் 'தக்கபடி கவனித்து' கையில் பசைவாளியையும் சுவரொட்டிகளையும் கொடுத்து அவர்களையே ஒட்டச் செய்தனர் தோழர்கள்.

நகரின் மையமான இடங்களில் இதே முழக்கங்கள் பெரிய தட்டிகளாக எழுதி வைக்கப்பட்டன. அவற்றுக்கும் சேதமில்லை.

மதியம் தட்டிகளைக் கையிலேந்திய படி பல குழுக்களாகக் குடியிருப்புப் பகுதிகளுக்குள் பிரச்சாரம் செய்யச் சென்றனர் தோழர்கள். ரஜினி ரசிகர் மன்றங்களில் உட்கார்ந்திருந்தவர்களை அழைத்துப் பேசினர்.

''ரேசன் வாங்க வைத்திருந்த காசைக் காணோம்; பைனான்சுக்கு வைத்திருந்த காசை எடுத்துவிட்டான்; பாத்திரத்தைக் காணோம்; நகையைக் காணோம்'' என்ற தாய்மார்களின் புகார்களும், வசவுகளும், கண்ணீரும் எல்லாத் தெருக்களிலும் கேட்டது. இந்த எதிர்ப்பியக்கத்தை மக்கள் எப்படி வரவேற்றிருப்பார்கள் என்று மேலும் விளக்கத் தேவையில்லை.

''படம் படுதோல்வி'' என்ற செய்தி அதற்குள் நகரம் முழுவதும் பரவிவிட்டது. ''பாபா படுதோல்வி! போண்டியானது ரசிகர்கள்தான் - ரஜினி அல்ல! பண்டபாத்திரத்தை விற்று ரஜினிக்கு மொய் எழுதிய ரசிகர்களே இனியாவது திருந்துங்கள்!'' - என்ற தட்டிகளை அன்று மாலையே நகரின் மையப்பகுதிகளில் வைத்தோம். அன்று காலை ''ஜெயங்கொண்டத்தில் படப்பெட்டியைப் பா.ம.க.வினர் பறித்துச் சென்று விட்டனர்'' என்ற செய்தி மாலைப் பத்திரிகைகளின் பரபரப்புக்குத் தீனியானது.

போலீசுக்கோ 16-ம் தேதி ஆர்ப்பாட்

## பாட்ஷா பாபாவான கதை

அவதரித்த திருநாளன்றே பாபா சமாதியானார்.

வழக்கமாகப் படம் வெளியாகிக் கல்லா கட்டியவுடனே ஆன்மீகப் போதைக்கு ஆட்பட்டு இமயத்துக்குப் புறப்பட்டுவிடும் ரஜினி இந்த முறை கிளம்பக் காணோம். படத்தின் தோல்வி, போதையை இறக்கி விட்டது போலும்! அவதாரமாக முடியாவிட்டாலும் சூப்பர் ஸ்டார் தகுதியையாவது தக்கவைத்துக் கொள்ள அடுத்த திரைக்கதைக்கு மசாலா அரைக்கத் தொடங்கியிருப்பார்.

''பாபா படுதோல்வி'' என்று நிச்சயமானவுடன், ரஜினி புகழ் பாடுவதையே தம் குலத்தொழிலாகக் கொண்டிருந்த பத்திரிக்கைகளும் ரஜினிக்கு சில ஆலோசனைகள் கூறுமளவு தைரியம் பெற்று விட்டனர். செத்த பாம்புதான் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு கோடம்பாக்கத்திலிருந்தும் கூட சில சூரப் புலிகள் களமிறங்கியிருக்கிறார்கள்.

'படத்தில் கட்டமைக்கப்படும் புனைவுகள், குறியீடுகள், சொல்லாடல்கள்' இந்துத்துவ அரசியலை முன்நிறுத்துவதாகக் கூறி, பாபா படத்தைக் கட்டுடைப்பதன் மூலம் ரஜினியின் அரசியலைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் சில அறிஞர் பெருமக்கள் இறங்கி விட்டனர்.

தன்னை அவதார புருசனாகவும் தனது ரசிகர்களைப் பக்தகோடிகளாகவும், தன்னை ஒரு மீட்பனாகவும் தமிழக மக்களைக் கடைத்தேற்றம் பெறக் காத்திருக்கும் மந்தையாகவும் சித்தரிக்கும் துணிச்சல் ரஜினி என்ற காரியக் கிறுக்கனுக்குத் திடீரென்று வந்துவிடவில்லை.

ராமதாஸ் இதை மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கிறார். பூனைக்கு யார் மணி கட்டுவது என்று எல்லோரும் தயங்கிக் கொண்டிருந்ததாகவும் தான் துணிந்து அதைச் செய்துவிட்டதாகவும் கூறியிருக்கிறார்.

பூனைக்கு மணி கட்ட அஞ்சிச் சும்மாயிருந்திருந்தால் பரவாயில்லை. பூனையைப் புலியாகச் சித்தரித்தனர். பிறகு ''புலி வருது... புலி வருது'' என்று எல்லா ஓட்டுக்கட்சிகளும் பத்திரிக்கைகளும் பெரிதாக ஊதிவிட்டனர். பிறகு தாங்கள் ஊதிப் பெரிதாக்கிய பலூனைக் கண்டு தாமே மிரண்டனர்; வணங்கினர். அந்தப் பலூனின் மீது ஒரு சிறிய குண்டூசியை வைத்துப் பார்க்கும் தைரியம் மட்டும் யாருக்கும் வரவில்லை - ம.க.இ.க.வைத் தவிர.

இதைப் பெருமைக்குக் கூறவில்லை. தமிழகத்தின் அருவெறுக்கத்தக்க நிலையை எண்ணி வெட்கி வேதனைப் பட்டுக் கூறுகிறோம். 1995-இல் ஜெயலலிதா ஆட்சியின் மீது மக்களின் வெறுப்பு உச்சத்தில் இருந்தபோதுதான் பாட்ஷா அரசியல் பேசத் தொடங்கினார். ''கட்சியும் வேணாம், ஒரு கொடியும் வேணாம் டாங்கு டக்கர டொய்'' என்று பாடிக் கொண்டிருந்த நடிகனை வீடு தேடிச் சென்று இழுத்து வந்தனர் சோவும், மூப்பனாரும், அ.தி.மு.க.விலிருந்து உதிர்ந்த ரோமங்களும்.

காரணம் ''ஆன்மீகமும் தேசியமும் இணைந்த பாரதீய ஜனதா மற்றும் காங்கிரசுக்கு உகந்த அரசியல் கண்ணோட்டத்தை ரஜினி கொண்டிருந்தார்'' என்பதுதான் - என்று அப்போதே கூறினோம். ''கழிசடை அரசியல் நாயகன் ரஜினி'' என்று சிறு வெளியீடு போட்டு 50,000 பிரதிகளைத் தமிழகமெங்கும் பேருந்



படிப்பகம்

www.padippakam.com

டத்திற்கு அனுமதி மறுக்க இது ஒரு முகாந்திரமானது. ''அடுத்த 10 நாட்களுக்கு பாபாவுக்கு எதிராக எதுவும் செய்ய அனுமதிக்கக்கூடாது'' என்று அம்மாவின் அரசு உத்திரவிட்டிருப்பதாகக் கூறினர். தடை உத்தரவை நள்ளிரவு 1 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்தனர்.

ஆனால் 16-ம் தேதி காலை 9 மணிக்குத் தடையை மீறி திருச்சி சிங்காரத் தோப்பில் திடீரென்று குழுமிய தோழர்கள் ஊர்வலமாகக் கிளம்பி ரம்பா திரையரங்கம் நோக்கிச் சென்றனர். தெப்பக்குளம் அருகே ஊர்வலத்தை மறித்துக் கைது செய்தது போலீசு. பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சிகள் அனைத்திலும் (சன் டிவி தவிர) செய்தி வெளிவந்தது. (பரபரப்பு முக்கியத்துவம் என்று ஒன்று இருக்கிறதே!)




பண்ருட்டியில் சுவரொட்டி வாசகத்திற்காக அதனை ஒட்டிய தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ''ஈராயிரம் ஆண்டுகளாய் உயிரோடிருந்து, ஏசு முதல் ரஜினி வரை எல்லோருக்கும் ஆசி வழங்கிய இமயத்து பாபாவின் இயற்பெயர் என்ன - கஞ்சாச் செடி!'' என்ற அந்தச் சுவரொட்டி வாசகம் இந்து மத உணர்வைப் புண்படுத்துவதாகக் கூறி குற்றப் பிரிவு 153-ஏ இல் கைது செய்து சிறை வைத்தனர். அதாவது பாபர் மசூதியை இடித்ததற்கு அத்வானி மேல் போடப்பட்ட அதே குற்றப்பிரிவு!

16-ஆம் தேதி இரவே திருச்சி நகரச் சுவர்களை அசிங்கமாக்கிக் கொண்டிருந்த பாபா விளம்பரங்கள் மீது வெள்ளையடித்து ''உலக வங்கிக் கைக்கூலி ஜெயா''வுக்கு எதிரான முழக்கங்களை எழுதத் தொடங்கினார்கள் தோழர்கள். வெள்ளையடிக்கும் பணி மறுநாள் பகலிலும் தொடர்ந்தது.

இதைக் கண்டும் ரசிகர்கள் யாரும் கொந்தளிக்கவோ குறுக்கிடவோ இல்லை. ஒரு இடத்தில் ரஜினியின் முகத்தில் வெள்ளையடிக்கும்போது மட்டும் ஒரு ரசிகர் குறுக்கிட்டார். ''தலைவா... பாத்து... தலைவர் முகத்தில அடிக்கும்போது மட்டும் கொஞ்சம் பாத்து அடிங்க'' என்றார்.

பார்த்து அடிப்போம்!

● பாலன்

துகள், கடைவீதிகள், குடியிருப்புக்களில் விற்றோம்; பொதுக்கூட்டங்களில் பேசினோம்.

ஜெ. எதிர்ப்பு அலையின் குறியீடாகவே ரஜினியை முன்நிறுத்தி கருணாநிதி முதல் தகவல் ஊடகங்கள் வரை அனைவரும் பிரச்சாரம் செய்த அந்தக் காலத்தில் ம.க.இ.க.வைத் தவிர வேறு யாரும் இதைப் பேசவில்லை; ஜெயலலிதாவுக்கு மாற்றாக இன்னொரு ஆம்பிளை ஜெயலலிதாவை முன்நிறுத்தும் பார்ப்பனக் கும்பலின் சூழ்ச்சி பற்றி யாரும் முணுமுணுக்கக் கூட இல்லை.

ரஜினி ரசிகர்கள் என்ற அந்த 'மாபெரும்' ஓட்டு வங்கியை அப்படியே களவாண்டு விடலாமென எல்லா ஓட்டுக் கட்சிகளும் வாயில் எச்சிலொழுகப் பின்தொடர்ந்தனர்; வழிபட்டனர்; வால் பிடித்தனர். ரஜினியைப் பற்றி எதிர்க்கருத்து வைத்திருந்தவர்கள் கூட அந்த நேரத்தில் அதைப் பேசத் தயங்கினர்; அஞ்சினர்; ராஜதந்திரமாக மவுனம் சாதித்தனர்.

பாட்ஷா ஏழாண்டுகளுக்குப் பின் பாபா ஆகிவிட்டார். இடையில் வந்த தி.மு.க. ஆட்சி ஒவ்வொரு படத்திலும் கள்ளமார்க்கெட்டில் டிக்கெட் விற்று 100 கோடி ரூபாய் சம்பாதிக்க ரஜினிக்குப் பாதுகாப்பு வழங்கியது. இப்போது ரஜினியிடம் பூச்செண்டு வாங்கிய ஜெயலலிதா கள்ளமார்க்கெட் உரிமையைச் சட்டப்பூர்வமாக்கி விட்டார். கொள்ளைக்காரன் பாட்ஷா, அவதாரபுருசன் பாபாவாகி விட்டார்.

இவர்கள் யாரும் பாபாவைத் தோற்கடிக்கவில்லை. ரஜினி தன் சொந்த முயற்சியில்தான் தோல்வியைச் சாதித்திருக்கிறார். ''வாழ்க்கையே ஒரு சினிமாதான்'' என்ற தத்துவத்தைத் தன் சொந்த வாழ்க்கை மூலம் ரசிகர்களுக்குப் போதனை செய்ய முயன்று தோற்றிருக்கிறார்.

விடலைத்தனமான சேட்டைகள், பொறுக்கித்தனங்கள், சினிமா வாய்ப்பு, புகழ், பார்ப்பனக் குடும்பத்துடன் மண உறவு, பல கோடி ரூபாய் கருப்புப் பணம், துதிபாடிகளின் கூட்டம் இவையனைத்தும் தாமே உருவாக்கும் போதை மற்றும் அவர் தனியாக ஏற்றிக் கொண்ட போதை... என்பன போன்ற பலவிதமான ஆன்மீக ரசாயனப் பொருட்களின் அங்ககச் சேர்கையில்தான் பாபா அவதரித்திருக்கிறார்.



புளித்த ஏப்பக்காரனின் ஆன்மீகம் பசி ஏப்பக்காரர்களின் ஆன்மீகத்தோடு சேரவில்லை. பாபாவை அவதாரமாகவும், பிராண்டாகவும், அரசியல் தலைவராகவும், பொறுக்கியாகவும் ஒரே நேரத்தில் சித்தரித்து எல்லா முகங்களும் தருகின்ற வருமானத்தைப் பிழிந்து எடுத்து விடக் கனவு கண்ட லதா ரஜினியின் பேராசையும் பாபாவின் தற்கொலைக்குக் காரணமாகியிருக்கிறது.

மைனர் கெட்டால் மாமா; மாமா கெட்டால்...? பாட்ஷா கெட்டால் பாபா; பாபா கெட்டால்...? என்ன வர இருக்கிறது என்று தெரியவில்லை. எதற்கும் ஒரு பிய்ந்த செருப்பைக் கையில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அடுத்த படத்திற்குக் கட்டியம் சொல்ல வரும் பத்திரிக்கைக்காரர்களை அடிக்க உதவும்.


படிப்பகம்

www.padippakam.com

# கல்லூரி ஆசிரியர்கள் போராட்டம் அல்லி ராணியிடம் அடங்கிப் போன பேராசிரியர்கள்

**கோ**ரிக்கைகள் எதுவும் நிறை வேறாமலேயே முடிந்து விட்டது அரசுக் கல்லூரி ஆசிரியர்களின் வேலை நிறுத்தம்.

அரசு ஊழியர் என்ற தகுதியும் ஓய்வூ தியமும் பறிபோய் விடக் கூடும் என்ற அச்சமாவது பேராசிரியப் பெருமக்க ளுக்குக் கொஞ்சம் தைரியத்தை அளிக்கக் கூடும் என்றும் கருதினோம். ஆனால் என்ன செய்வது? எதிர்காலம் குறித்த அச்சத்தை நிகழ்காலத்தின் பீதி வென்று விடுகிறதே!

தொழிற்சங்கப் போராட்டங்களில் பல காரணங்களால் தோல்வி ஏற்ப டலாம். அது பெரிய பிரச்சினையல்ல; தோல்வியைக் காட்டிலும் முக்கியமானது தோல்வியடைந்த முறை. கல்லூரி ஆசி ரியர் சங்கங்களைச் சேர்ந்த சிலருடன் உரையாடிய போது முதலமைச்சருடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் லட்சணம் தெரியவந்தது.

''எல்லா விவாதங்களும் இங்கே முடி வடைகின்றன'' என்ற தத்துவத்தை முதல் வரின் அறைக்குள் நுழைவதற்கு முன்பே ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தியிருக்கிறார் கல்வி அமைச்சர் தம்பிதுரை. மானம், அறிவு, சுயமரியாதை போன்றவைகளைச் செருப் புடன் சேர்த்துக் கழற்றி வைத்துவிட் டுத்தான் புரட்சித் தலைவியின் சந்நி திக்குள் நுழைய வேண்டும் என்று கல்வி அமைச்சர் போதுமான அளவுக்கு எச்ச ரிக்கை செய்திருந்தும் கோரிக்கைகளை விளக்க வேண்டியிருந்ததால் பேசத் தொடங்கியிருக்கிறார்கள் சங்கப் பிரதிநி திகள்.

''பல்கலைக்கழகங்களுடன் கல்லூரி களை இணைப்பதால் மாணவர்களின் கல்விக் கட்டணம் கடுமையாக உயர்ந்து விடும்'' என்று ஆசிரியர் மன்றச் செயலர் பேசத் தொடங்கியிருக்கிறார்.

''என்ன அரசியல்வாதியைப் போலப் பேசுகிறீர்கள். நீங்கள் ஆசிரியர் சங்கச் செயலரா, மாணவர் சங்கச் செயலரா? மாணவர்கள் பிரச்சினையை நான் அவர் களுடன் பேசிக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் பிரச்சினையை மட்டும் பேசுங்கள்'' என்று மிரட்டியிருக்கிறார் ஜெ. மாணவர் பிரச்சினை அத்துடன் முடிந்தது.

பல்கலைக்கழகங்களுடன் இணைப் பதால் தாங்கள் அரசு ஊழியர் என்ற தகு தியை இழக்க நேரிடும் என்பதை விளக் கியிருக்கிறார்கள் சங்கப் பிரதிநிதிகள்.

''அரசுக் கல்லூரியில் இருந்தால் தானே வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்க முடியும்!'' என்று எகத் தாளம் செய்திருக்கிறார் நிதிச் செயலர் நாராயணன். இவ்வாறு பேசுவதை ஆசி ரியர் மன்றச் செயலர் சங்கர சுப்பிரம ணியன் ஆட்சேபித்திருக்கிறார். ''உங்களைத் தவிர யாரும் ஆட்சேபிக்க வில்லையே'' என்று கேலி செய்து சிரித்தி ருக்கிறார் ஜெயலலிதா.

தங்களது ஊதியம், பணிப்பாதுகாப்பு ஆகியவை குறித்து பிரதிநிதிகள் பேசத் தொடங்கியவுடன் ''ஏன் நீங்கள் வாங்கும் சம்பளம் போதாதா? உங்க ளிடம் என்ன பேச்சு, நான் மக்களிடம் சொல்கிறேன்'' என்று தனது 'ஜனநாயக' வழிமுறை பற்றி லேசாகக் கோடி காட்டி யிருக்கிறார் முதல்வர்.

ஒரு இடைவெளிக்குப் பின் பெண்கல்வி, இடஒதுக்கீடு இன்ன பிற விசயங்களை எடுத்துச் சொல்லி மசோ தாவை ரத்து செய்ய வேண்டுமெனச் சங்கப் பிரதிநிதிகள் மீண்டும் வலியுறுத்தி யவுடனே, ''நல்லது, மசோதாவை நீக்கி விடுவோம்; வேலை நிறுத்தம் செய்யும் ஆசிரியர்களையும் நீக்கி விடுங்கள்'' என்று திமிர்த்தனமாகக் கல்வித்துறைச் செயலருக்கு ஆணையிட்டிருக்கிறார் ஜெயலலிதா.

''முதல்வரிடம் வாதம் செய்யா தீர்கள்'' என்று தம்பிதுரை கூறிய அறிவு ரையின் முழுப் பொருளும் பேராசிரியர் களுக்கு விளங்கியிருக்க வேண்டும்.

''எங்கள் குறைகளைக் கேட்க ஒரு குழுவாவது போடுங்கள்'' என்று முதல்வ ரிடம் கோரிக்கை வைத்தார் ஆசிரியர் கழ கத்தின் பிரதிநிதி. ''குழு தானே, போட்டு விடுவோம். முதலில் போராட்டத்தை வாபஸ் வாங்குங்கள்'' என்றார் ஜெ.

**''எதுவும் இல்லை''** என்று ஆகிவிட் டது. வேலை நிறுத்தம் செய்த நாட்க ளுக்குச் சம்பளத்தையாவது கேட்டுப் பார்க்கலாம் என்றொரு நப்பாசை ஆசி ரியர் கழகத் தலைவருக்கு. ஆனால் அதை நேரடியாகக் கேட்க தைரிய மில்லை. ''வேலை நிறுத்தத்தால் தடைப் பட்ட வகுப்புகளைச் சேர்த்து எடுக்க எங்களை அனுமதிக்க வேண்டும்'' என்று பணிவுடன் கோரிக்கை வைத்தார். ''அதையெல்லாம் குழுவிடம் பேசிக் கொள்ளுங்கள்'' என்றார் முதல்வர்.

கடைசியாக நன்றி கூறும் காட்சி. ''எதையும் மனசில வச்சுக்காதீங்கம்மா'' என்று கூறிக் கையெடுத்துக் கும்பிட்டிருக் கிறார் கழகத்தின் தலைவர். ''சரி... சரி தொலைந்துபோங்கள்'' என்பது போல ஒரு சிரிப்பைச் சிந்தினார் முதல்வர். அதை அள்ளிக் கொண்டு அறையை விட்டு வந்தார்கள் சங்கத் தலைவர்கள். இப்படியாக, ஆகஸ்டு 21-ஆம் தேதி தொடங்கிய கல்லூரி ஆசிரியர்களின் வேலை நிறுத்தம், ஆகஸ்டு 29-ஆம் தேதி முதல்வரின் சந்நிதியில் முடிவுக்கு வந்தது.

அனைத்துக் கல்லூரி ஆசிரியர் கழ கத்தின் தலைவர் திரு. பெருமாள் மற்றும் செயலர் திரு. சாமிநாதன் ஆகியோரிடம் ''பேச்சு வார்த்தையின் முடிவில் ஒப்பந்தம் ஏதாவது கையெழுத்தாகியுள்

***''நீங்களென்ன ஆசிரியரா, இல்லை அரசியல்வாதியா?'' என்று ஜெயலலிதா எழுப்பிய கேள்வி மிகவும் மதிப்புக் குரிய கேள்வி. ''பல சந்தர்ப்பங்களில் போலீசின் தடிக்கம்புதான் தொழிலாளர்களை அரசியல்படுத்து கிறது'' என்று எழுதினார் லெனின். ஜெயலலிதாவின் இந்தச் சாட்டையடியாவது பேராசிரியர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துமா பார்ப்போம்.***



படிப்பகம்

www.padippakam.com

ளதா?'' என்று கேட்டோம். இப்படி யொரு அநாகரிகமான கேள்வியை எதிர் பார்க்காதவர் போல அதிர்ச்சியடைந்தார் தலைவர். ''ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சொல்லும்போது அதை நம்பத்தான் வேண்டும்'' என்றார்.

இறை நம்பிக்கையையொத்த இந்த நம்பிக்கை ஒருபுறமிருக்கட்டும். பேராசிரியர்கள் மீது மாணவர்கள் வைத்த நம்பிக்கையை என்ன செய்வது? பேராசிரியர்களின் ஊதியம், ஓய்வூதியம் போன்றவற்றை உத்திரவாதம் செய்துதரத்தான் மாணவர்கள் போராடினார்களா? தங்கள் நலனை மட்டும் பார்த்துக் கொண்டு மாணவர்களைக் கல்விக் கட்டண உயர்வுக்கு இரையாக்குவது துரோகமில்லையா?

துரோகம்தான் என்பதை ஒப்புக் கொள்வதுடன் போராட்டத்தைத் தொடர வேண்டும் என்றும் கூறுகிறார்கள் ஜனநாயக உணர்வும் மனச்சாட்சியும் உள்ள ஆசிரியர்கள். ஆனால் பெரும்பான்மையான ஆசிரியர்கள் இப்படிக் கருதுவதாகத் தெரியவில்லை.



மாணவர்களை விடுங்கள், இந்தச் சட்டத்திருத்தத்தின் விளைவாகப் பாதிப்புக்கு உள்ளாகவிருக்கும் ஆசிரியரல்லாத கல்லூரிப் பணியாளர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்குக் கூட ஆசிரியர்கள் முயற்சிக்கவில்லை. தமது அன்றாடப் பணிகளில் பேராசிரியப் பெருமக்களால் மரியாதைக் குறைவாக நடத்தப்படும் அந்தப் பணியாளர்களும் இவர்களை நம்பிக் கூட்டுச் சேரத் தயாராகவும் இல்லை.

தங்களது அரசு ஊழியர் என்ற தகுதியும், ஓய்வூதியத்திற்கான உத்திரவாதமும் போய்விடும் என்ற காரணத்தினால் இப்போது போராடும் பேராசிரியர்கள் தம் கண்முன்னே நடைபெறும் எந்த அநீதிக்கெதிராகவும் போராடியதில்லை.

அரசு உதவி பெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களின் உரிமைகளுக்காகவோ, அல்லது தங்களை விட அதிகமாக உழைத்துக் குறைவாக ஊதியம் பெறும் கொத்தடிமைகளான சுயநிதிக் கல்லூரி ஆசிரியர்களின் உரிமைக்காகவோ அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் போராடியதில்லை.

தனியார் கல்லூரிகளிலும் சுயநிதிக் கல்லூரிகளிலும் மாணவர்கள் கொள்ளையடிக்கப்படுவதை இவர்கள் ஒரு பொருட்டாகவே கருதியதில்லை. அரசுக் கல்லூரிகளிலேயே மாணவர்களின் கல்விக் கட்டணம் ஏற்கெனவே படிப்படியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கெதிராகவும் இவர்கள் போராடியதில்லை.

அவ்வளவு ஏன், மாதம் 20,000, 25,000 சம்பளம் வாங்கிக் கொண்டு தாங்கள் செய்யும் அதே ஆசிரியப் பணியை, ஒரு நாளுக்கு 100 ரூபாய் வாங்கிக் கொண்டு செய்து வரும் 'கவுரவ விரிவுரையாளர்'கள் என்ற தினக்கூலி முறையை ஒழிக்கவும் இவர்கள் போராடவில்லை.

அரசுக் கல்லூரிகள் ஏன் இன்று பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படுகின்றன, கல்விக்கான ஒதுக்கீடு ஏன் வெட்டப்படுகிறது, பொதுத்துறை தனியார்மயமாக்கப்படுவதற்கும் கல்வி தனியார்மயமாவதற்கும் என்ன உறவு, விவசாயம், நெசவு போன்ற தொழில்களின் அழிவுக்கும் தொடக்கக் கல்வியின் அழிவுக்கும் தொடர்பு என்ன, இவற்றில் உலக வங்கியின் பங்கென்ன, நாட்டின் எதிர்காலம் சூனியமாவதற்கும் தங்கள் சொந்த எதிர்காலம் கேள்விக்குறியாவதற்கும் உள்ள உறவென்ன என்பதைப் பற்றியெல்லாம் பேராசிரியர்கள் கவலைப்பட்டதில்லை - விதிவிலக்கான சிலரைத் தவிர.

அத்தகைய விதிவிலக்கான பேராசிரியர்கள்தான் தற்போது மாணவர்களைத் திரட்ட முயன்றிருக்கிறார்கள். மாண்வர்களைக் கைவிட்டதற்காக வருந்துகிறார்கள்; மற்றவர்கள் தங்களது ஊதியம், ஓய்வூதியம் தவிர வேறெதைப் பற்றியும் கவலைப்படுவதாக இல்லை.

இந்த விமரிசனங்கள் பேராசிரியர்களுக்கு வருத்தமளிக்கலாம். விமரிசனங்களைக் கண்டு கோபப்படுவதைக் காட்டிலும் ''ஊறறிந்த ஊழல்நாயகி நம்மைக் கால்தூசுக்குச் சமமாக நடத்திய போதும் அதை எதிர்த்துப் பேசக்கூட முடியாமல் போன காரணம் என்ன?'' என்பதை ஆராய்வதே நல்லது.

பேராசிரியர்கள் மீதான இந்த விமரிசனம் தொலைபேசி, மின்சாரம், போக்குவரத்து, வங்கி, ஆயுள் காப்பீடு போன்ற எல்லாத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் சங்கங்களுக்கும் பொருந்தக் கூடியது தான். ''எங்கள் சம்பளம், எங்கள் போனசு, எங்கள் ஓய்வூதியம்'' என்று ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் கோரிக்கைக்கு மட்டும் போராடுவது சுயநலவாதமின்றி வேறல்ல. ''எனக்கு'' என்று கேட்காமல் ''எங்களுக்கு'' என்று கேட்பதனாலேயே அது பொதுநலனாகி விடாது.

இன்று மாணவர்களைப் பாதி வழியில் கழற்றிவிட்ட சுயநலன், நாளை சக ஆசிரியர்களுக்கு எதிராகவே திரும்பும்.

அடுத்த சில ஆண்டுகளில் ஓய்வு பெறவிருக்கும் 2000 பேராசிரியர்களுக்கு ''ஓய்வூதியம் கொடுக்கக் காசில்லை'' என பல்கலைக்கழகம் கைவிரித்து விட்டால் பணியிலிருக்கும் பேராசிரியர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் நலனுக்காகப் போராட முன்வருவார்களா என்பதையும் நாளை ஓய்வு பெற இருக்கும் ஆசிரியர்கள் இன்றே ஊகித்துக் கொள்ளலாம்.

''நீங்களென்ன ஆசிரியரா, இல்லை அரசியல்வாதியா?'' என்று ஜெயலலிதா எழுப்பிய கேள்வி மிகவும் மதிப்புக்குரிய கேள்வி. ''பல சந்தர்ப்பங்களில் போலீசின் தடிக்கம்புதான் தொழிலாளர்களை அரசியல்படுத்துகிறது'' என்று எழுதினார் லெனின். ஜெயலலிதாவின் இந்தச் சாட்டையடியாவது பேராசிரியர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துமா பார்ப்போம்.

ஜெயலலிதாவின் போலீசு மாணவர்களுடன் தெருவில் 'பேச்சுவார்த்தை' நடத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் ரத்தம் சிந்துகிறார்கள், சிறை செல்கிறார்கள். தங்களுக்காக மட்டுமல்ல, ஆசிரியர்களுக்காகவும்தான். வகுப்பறையில் யாருக்குப் பாடம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் ஆசிரியர்கள்.

● சூரியன்



படிப்பகம்

www.padippakam.com

# தனியார்மயமாகும் கல்வி புதிய மனுதர்மம் —③

★ ப. சிவக்குமார்

1947 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 காலனி ஆதிக்கம் ஒழித்துவிட்டு நேரு தலைமையில் சுதந்திர இந்தியாவில் சோசலிச அரசாங்கம் நிர்மாணம் செய்ய முயற்சிகள் தொடங்கப் பட்டதாகவும், பொதுத் துறை ஊக்குவிப்பு போற்றப்படத்தக்க முயற்சி என்றும் பின்னர் இந்திராகாந்தி வங்கிகளைத் தேசியமயமாக்கியது இன்னும் ஒருபடி தன்னிறைவான பொருளாதார முன்னேற்றத்திற்கான முயற்சி என்றும் சிலர் கூறுவது அந்தக் கால கட்டங்களில் ஏகாதிபத்தியக் கட்டுக்குள் இந்தியா இல்லாதது போன்ற மாயையைத் தோற்றுவிக்கின்றது. உண்மையில் நேரடியான காலனி ஆதிக்க ஆட்சி இல்லையே தவிர, உலகவங்கி மற்றும் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் வழியே எத்தனை லகான்கள் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பின்னோக்கி இழுத்துத் தன்கட்டுக்குள் வைப்பது தொடர்ந்தது என்பதை இனிக் காண்போம்.

நேரு மற்றும் இந்திரா காலத்து சீர்திருத்தங்கள் இந்த ஏகாதிபத்திய லகான்களின் இழுப்புக்குள்ளே செய்யப்பட்ட முயற்சிகளே தவிர சோசலிசப் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அன்று 1944– லேயே அமெரிக்காவில் உள்ள அட்லாண்டிக் நகரத்தில் ''வளர்ச்சி மற்றும் மறு சீரமைப்புக்கான பன்னாட்டு வங்கியை (IBRD)'' அமைப்பதற்கான பிரட்டன் உட் மாநாட்டுக்கான தயாரிப்புக் கூட்டம் நடைபெற்ற போது 17 உலக நாடுகள் கலந்து கொண்டன. அதில் ஒன்று இந்தியாவாகும். இந்தியாவின் முதல் நிதி அமைச்சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார், அப்போது ரிசர்வங்கியின் கவர்னராக இருந்த சி.டி.தேஷ்முக் (பின்னாளில் நிதிஅமைச்சர்) IMF-ன் செயல் இயக்குநரான பி.கே.மதன் உள்ளிட்ட ஐந்து பேர் கலந்து கொண்ட அந்த 1944 ஆம் ஆண்டுக் கூட்டம் உலக நிதி நிறுவனங்களின் கட்டுக்குள் இந்தியாவையும் பல உலக நாடுகளையும் கொண்டு செல்வதற்கான திட்டங்கள் தீட்டியதின் தொடக்கம் எனலாம்.

முதன் முதலாக இந்தியா வாங்கிய உலகவங்கிக் கடன் 1949 ஆம் ஆண்டில் இந்திய ரயில்வேக்கு வாங்கப்பட்டதாகும். அந்தக் கடனின் மதிப்பு 3 கோடி அமெரிக்க டாலர்கள் ஆகும். 1949 முதல் 1959 முடிய பத்து ஆண்டுகளில் மொத்தம் 61 கோடி அமெரிக்க டாலர்களுக்கு இந்தியா கடன் வாங்கியது. இதுவே 1960 முதல் 1969 முடிய 180 கோடி டாலர்களுக்கும், 1980-களில் 1470 கோடி டாலர்களுக்கும் இந்தியா உலக வங்கியிடம் கடன் வாங்கியது குறிப்பிடத்தக்கதாகும். 1992 வரை கடந்த 45 ஆண்டுகளில் இந்தியா வாங்கிய உலகவங்கிக்கடன் மொத்த உலக வங்கிக் கடனில் 15 சதவீதமாகும்.

இந்தப் புள்ளி விவரங்கள் எதற்காக? இந்தியாவின் கல்விக் கொள்கை தமிழக அரசின் கல்விக் கொள்கை பற்றி விவாதிப்பதற்கும் இவற்றிற்கும் என்ன சம்பந்தம் எனத் தோன்றலாம். ஏகாதிபத்தியத்தின் சுரண்டல் வெவ்வேறு வடிவங்களில் நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். நேரடியான காலனி ஆட்சியை விட சுலபமான வழிகள் உலக வங்கி, பன்னாட்டு நிதி நிறுவனம் பன்னாட்டுக் கம்பெனிகள் மூலமாக ஏகாதிபத்தியச் சுரண்டலை நடத்துவது என்பதை நாம் உணரவேண்டும். இந்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு கொள்கைகள் உலக நிதி நிறுவனங்களால் எவ்வாறு நிர்ப்பந்திக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டன என இனிக் காண்போம்.

உலகவங்கியின் ஊடுருவல் தொடக்க கால கட்டத்தில் கண்ணுக்குப் புலனாகவில்லை. 'அமெரிக்க உதவி' (USAID) என்ற முகமூடி அணிந்து கொண்டு இந்திய அரசின் பல்வேறு கொள்கை வரையறுப்புகளில் உலக வங்கி தனது செல்வாக்கைச் செலுத்தத் தொடங்கியது.

●○●

**புதிய கல்விக் கொள்கை தான், கல்வி வியாபாரத்தின் ஊற்றுக்கண் என்பதும் 'புதிய தொழிற் கொள்கை'தான், பன்னாட்டுக் கம்பெனி மூலதனக் குவிப்பின் பாய்ச்சலுக்கான தொடக்கம் என்பதும் தெரியாதவர்களல்ல இந்தத் திராவிடக்கட்சித் தலைவர்கள்.**

●○●

எண்பதுகளில் இந்த நிலைமாறி உலகவங்கியும் பன்னாட்டு நிதி நிறுவனமும் கண்ணுக்குப் புலனாகும் விதங்களில் நமது கொள்கைத் திட்டங்களை வரையறுக்கவும் திட்டமிடவும் தொடங்கினர். பொதுத்துறைகளின் அடிப்படைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தகர்ப்பது, தனியார் துறையை ஊக்குவிப்பது, பொருளாதாரத் திட்டமிடுதலைத் தனது கட்டுக்குள் படிப்படியாகக் கொண்டுவருவது போன்ற வேலைகளில் வெளிப்படையாகவே எண்பதுகளில் உலகவங்கி இறங்கியது.

வெளிநாட்டு நாணய மாற்று நெருக்கடி (Foreigm Exchange Crisis) பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய போதெல்லாம் அதாவது 1957, 1966, 1973, 1980 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளில் உலகவங்கி தனது கருத்தாக்கத்தை எளிமையாக இந்தியாவின் பல்வேறு கொள்கைகளில் புகுத்தத் தொடங்கியது.

இந்தியப்பொருளாதாரத் திறனைக் கண்டறிய முதன் முதலாக 1949 – ல் உலக வங்கிக்குழு இந்தியா வந்தபின் தலைமை அமைச்சர் நேருவின் கொள்கை பின்வாங்கலைக் காணலாம். உலக வங்கி வருகைக்குப்பின் 1949ல் பாராளுமன்றத்தில் வெளியிட்ட தொழிற் கொள்கை அடிமைச்சாசனத்தின் முதல் அத்தியாயமாகும்.

1948 தொழிற்கொள்கையில் இருந்து பின் வாங்கிய நேரு ''ஒருவருக்கொருவர் பயனுள்ள விதத்தில் விதிக்கப்படும் நிபந்தனைகளோடு வெளிநாட்டு மூலதனத்தை அனுமதிக்கின்ற வகைகளில் அரசின் கொள்கைகள் திட்டமிடப்பட வேண்டும், தேசிய நலனுக்கு உகந்ததாக இருக்குமானால் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு நிறுவனத்தில் வெளிநாட்டு மூலதனத்தை அனுமதிப்பதற்கு அரசு எதிர்ப்பு தெரிவிக்காது என்றார்.

'50 களின் மத்தியில் இரண்டாவது முறையாக உலக வங்கிக்குழு இந்தியாவுக்கு வந்தது. இதன் வருகைக்குப் பின் 1956 ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை மேலும் அந்நிய மூலதனத்தை ஊக்குவிப்பதாகவும் தனியார்துறைகளை எந்தெந்தத் தளங்களில் அனுமதிப்பதெனத் தீர்மானிப்பதாகவும் திட்டமிடப் பட்டது. அதே ஆண்டில் ரூர்கேலாவில் உள்ள எஃகு நிறுவனத்துக்கு உலக வங்கி உதவியை இந்திய அரசு கேட்ட போது ஜெர்மனியுடன் கூட்டு வற்புறுத்தப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டது.

80 களில் கடன் வழங்கிய உலக வங்கி தாராளமயமாக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் ''கட்டுமானச் சீரமைப் புத் திட்டங்களை'' (Structural Adjustment Programmes) அமலாக்க நிர்ப்பந்திக்க தொடங்கியது. இத்தகைய SAP அடிப் படையிலான பொருளாதார அமைப்புச் சீர்திருத்தங்கள் பல்வேறு துறைகளில் பொருளாதாரம் நிலை குலையாமல் இருக்கவும் வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்ளவும் தேவை என வற்புறுத்தப் பட்டது.

இதன் அடிப்படையில் ரூபாயின் மதிப்பு 23% குறைக்கப்பட்டது. புதிய தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது. நலிவுற்ற பொதுத்துறைகள் மூடப்பட் டன. இதுதான் மூலதனம் அகற்றலின் தொடக்கம். சேவைத்துறைகளில் செலவி னங்கள் குறைக்கப்பட்டன. தனியார் வங்கிகள் அனுமதிக்கப்பட்டன. ஏற்று மதி இறக்குமதிக் கொள்கைகளில் தாராள மயம் அமலாக்கப்பட்டதால் உள்ளூர்த் தொழில்கள் நசியத் தொடங்கியது. இந்தச் சீர்திருத்தங்களுக்கு உறுதுணை யாகச் சட்டங்கள் திருத்தப்பட்டன. 80-களில் தொடங்கிய தாராளமயம் 1985 – ல் விரைவுபடுத்தப்பட்டது.

வெளிநாட்டு நாணயப் பரி மாற்று ஒழுங்காற்றுச் சட்டம், கம்பெ னிகள் சட்டம், தொழில்தகராறு சட்டம், இந்திய இரும்பு மற்றும் எஃகுக் கம்பெனிச் சட்டம், நலிந்த கம்பெனிகள் சட்டம், ONGC சட்டம் போன்ற சில சட்டங்கள் தாராளமய மாக்கலுக்கு ஏற்றவாறு திருத்தப்பட் டன. புதிய கல்விக் கொள்கை, புதிய தொழில் கொள்கை, புதிய ஜவுளிக் கொள்கை, புதிய மருந்துக் கொள்கை என தாராளமயம், தனி யார்மயத்தை ஊக்குவிக்கும் 'அமைப்பைச்சரிசெய்யும்' கொள்கை கள் அமலாகத் தொடங்கின.

ராஜீவ் காந்தி காலத்தில் இந்தத் தாராளமயம் மற்றும் தனியார்மய ஊக்குவிப்பு அமலாகத் தொடங்கிய போது கஞ்சித் தொட்டி வைத்தவர் களும் பிரியாணி போட்டவர்களும் எங்கே போனார்கள்? 'புதிய ஜவுளிக் கொள்கை' தான் இந்திய நெசவாளிக்குச் சாவுமணி என இந்தக் கட்சிகள் எதிர்த்தனவா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். புதிய கல்விக் கொள்கை தான், கல்வி வியாபாரத் தின் ஊற்றுக்கண் என்பதும் 'புதிய தொழிற் கொள்கை'தான், பன்னாட்டுக் கம்பெனி மூலதனக் குவிப்பின் பாய்ச்சலுக்கான தொடக்கம் என்பதும் தெரியாதவர்களல்ல இந்தத்திராவிடக் கட்சித் தலைவர்கள்.

இத்தகைய ''கட்டுமானச் சீரமைப்புத் திட்டங்கள்'' (SAP) மற்றும் தாராளமய அமலாக்கத்தை உலகமெங்கும் வளரும் நாடுகளின் மேல் உலகவங்கி சுமத்தி னாலும் உலக நாடுகளின் கடன் சுமை குறையவில்லை. 1978ம் ஆண்டில் எழு பத்தெட்டாயிரத்து ஐந்நூறு கோடி டாலர் களாக இருந்த உலக நாடுகளின் கடன் சுமை 1992ல் பதின் மூன்று லட்சம் கோடி டாலர்களாக உயர்ந்துவிட்டது. SAP-யினால் கடன் நிவாரணமும் இல்லை; வளர்ச்சியும் இல்லை; வறுமையும் மேலும் மேலும் வளர்ந்தது.

இந்தப் பொருளாதாரப் பின்ன ணியில் 1986ல் அமலான புதிய கல்விக் கொள்கை இந்தியாவின் கல்வி அமைப்பு களை தனியார்மயமாக்க ஊக்குவிக்க ஏற்றவாறு சீரமைக்கத் திட்டம் வகுத்தது என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்தியாவின் கல்விக் கொள்கை களின் வரலாற்றை படிப்படியான உலக வங்கி நிர்ப்பந்தப் பின்னணியில் பார்க்க முனையும் அதே நேரத்தில் உலக அளவில் வளர்ந்த மற்றும் வளரும் நாடு களின் கல்விக்கான முன்முயற்சிகளோடு ஒப்பிட்டும் ஆராய வேண்டியது அவசிய மாகிறது.

வளர்ந்த நாடுகளின் மக்கள் தொகை உலக மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கே ஆகும். ஆனால் அந்த நாடுகளின் மக்களோ உலகமுழுதும் கல்விக்காகச் செலவிடப்படும் மொத்தத் தொகையில் ஐந்தில் நான்கு பங்கை அனுபவிக்கின் றனர்.

அமெரிக்காவில் அரசாங்கத்துக்கு தொடக்கநிலைக் கல்வி பெறும் மாணவர் கள் ஒவ்வொருவருக்கும் செலவு 5130 டாலர்கள். பிரிட்டனில் அரசுக்காகும் தலா ஒரு மாணவர்கான செலவு 3553 டாலர்கள் ஆகும். கனடாவிலோ 5038 டாலர்கள் தலா செலவிடப்படுகிறது. இந்த நாடுகளோடு ஒப்பிடும் போது இந்திய அரசு தொடக்கக்கல்வி பெறும் குழந்தைகளில் ஒருவருக்கு 12 டாலர்கள் செலவிடுகிறது. பாகிஸ்தானோ தலா 8 டாலர்களே ஒதுக்குகிறது.

இதே நேரத்தில் இந்திய அரசு 1998ல் பாதுகாப்புக்கான செலவினத்தை 14 சத வீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக் கது. இந்துத்துவ பாஜக அரசு இந்தப் பகு தியில் வல்லாண்மை மிக்கதாகத் தன்னைக் காட்டிக் கொள்வதற்கும் பாகிஸ்தானுக் கெதிரான போர் வெறி உணர்வை விசிறி விடுவதற்கும் அவ்வப்போது கார்கில் போன்ற போர் நடவடிக்கைகளுக்காகப் பாது காப்புச் செலவுகளை அதிகரிக்கும் முனைப்பை கல்வி முன்னேற்றத் துக்கோ மக்கள் நலத் திட்டங்க ளுக்கோ காட்டாது என்பது நமக்குத் தெரிந்ததே.

1998 நிதி ஒதுக்கீட்டில் பா.ஜ.க. அரசினால் பாதுகாப்புக்கென கூடுத லாக ஒதுக்கப்பட்ட 6240 கோடியைக் கொண்டு பத்துலட்சம் பள்ளிகளைக் கட்டி ஆறு லட்சம் ஆசிரியர்களை வேலைக்கமர்த்தி 2005-க்குள் அனைவர்க்கும் அடிப் படைக் கல்வி தந்து விடமுடியும். ஆனால் இந்த அரசு கட்டாய ஆரம்பக் கல்விக்கான சட்ட திருத்தம் கொண்டு வரக்காட்டிய அவசரத்தை அதை அமலாக்குவதில் காட்டாமல் கிடப்பில் போட்டு உட்கார்ந்திருப்ப தைக்காணும் போது இந்த பா.ஜ .க.வின் போர் வெறியையும் மக்கள் நலனைப் பற்றி கவலைப்படாத அலட்சியப் போக்கையும் காணலாம். ஆரம்பக்கல்விக்கே அக்கறை காட்டாத அரசு உயர்கல்வியில் வியா பாரத்தை ஊக்குவிப்பதில் ஆச்சரிய மில்லை.

— தொடரும்



கல்வி மானியத்திற்கு வெட்டு, நாட்டின் எதிர்காலத்திற்கு வேட்டு - புது தில்லியில் ஆர்ப்பாட்டம்


படிப்பகம்

www.padippakam.com

# இதயத்தை ஈரமாக்குவது இலக்கியமா? அரசியலா?

சென்ற ஆகஸ்ட் மாத இதழில் மதுரையைச் சேர்ந்த தோழர். சாக்ரடீஸ் எழுதிய வாசகர் கடிதம் வெளியாகியிருந்தது. **புதிய கலாச்சாரத்தில்** நூலறிமுகம் பகுதி தொடர்ந்து இடம் பெற வேண்டும் என்பதை வலியுறுத்திய அந்தத் தோழர் அதன் முக்கியத்துவத்தை விளக்கும் போது,

''.... அரசியல் புத்தகம் படிப்பதற்குத்தான் தோழர்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கிறார்கள். எனக்கென்னவோ அரசியலும் இலக்கியமும் இரண்டு தண்டவாளங்கள். ஒன்றுக்கொன்று இணையாகச் சென்றால்தான் நாம் நம்மை வறண்டு போகாமல் இருக்கச் செய்ய முடியும். துன்பப்படுகிற மக்களைப் பார்த்து ஏதாவது செய்தாக வேண்டும் என ஈரத்தோடு உள்ளே வருகிறவர்கள், எல்லாவற்றிற்கும் அறிவு ரீதியான விளக்கங்கள் அறிந்து கொண்ட பிறகு நெஞ்சில் இருந்த ஈரம் வற்றிவிடுகின்றது. இந்த ஈரம் வற்றாமல் பாதுகாப்பது என்னைப் பொறுத்தவரையில் இலக்கியங்கள்தான்....'' என்று குறிப்பிட்டிருந்தார்.

புரட்சிகர அமைப்பிற்குள் புதிதாக வரும் தோழர்களிடம் இருக்கும் இரக்க உணர்வு, அறிவு ரீதியான அரசியல் விளக்கத்தைத் தெரிந்து கொண்ட பிறகு மங்கி விடுகிறது; அப்படி மங்காமல் தங்குவதற்கு அரசியலுக்கு இணையாக இலக்கியமும் அவசியம் என்கிறார் இந்த வாசகர். அரசியலின் அறிவு, இலக்கியத்தின் உணர்வு இரண்டோடும் உறவு கொள்ளும் புதிய தோழர்களைப் பற்றிய இம்மதிப்பீடு தவறாக இருக்கின்றது. மேலும் அரசியல், மார்க்சியம், கம்யூனிஸ்ட் கட்சிகள் குறித்து தமிழ்நாட்டு இலக்கியவாதிகள் உருவாக்கியிருக்கும் பொது உளவியலும், அரசியல்வாதிகள் இரக்கமற்றவர்கள், இலக்கியவாதிகள் ஈரமிக்கவர்கள் என்பதையே அடிப்படையாக வைத்து இயங்குகிறது. இத்தகைய இலக்கியவாதிகளைத்தான் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆரத் தழுவி அங்கீகரிக்கின்றனர். அந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்கென்றே த.மு.எ.ச. போன்ற அரட்டைமடங்களை நடத்துகின்றனர். இலக்கியத்தின் அற்பவாதிகளும், கம்யூனிசத்தின் போலிகளும் ஒருவரையொருவர் பற்றி நிற்பதில் முரண்பாடு ஏதுமில்லை.

ஆனால் புரட்சியை நேசிக்கும் புதிய தோழர்கள் இந்தப் பிரச்சினையைப் புரிந்து கொள்ள ஒரு கம்யூனிஸ்டாக மாறுவது குறித்த ஆழ்ந்த பரிசீலனையைத்தான் முதலில் கற்கவேண்டும்.

வாழ்வில் முதன்முதலாக மார்க்சியத்தைக் கற்கும் இவர்கள் அறிவுரீதியாகப் பெறும் விளக்கம்தான் என்ன?

ஆரம்பமே அவர்களது பழைய அறிவு அழிவதுதான். உலகம், சமூகம், அரசு, பண்பாடு, குடும்பம் அனைத்தும் புதிய பொருளுடன் தென்பட ஆரம்பிக்கின்றன. இவைகள் பற்றிய புதிர்களுக்கு விடை தராத பழைய உலகக் கண்ணோட்டம் உதிர்ந்து போகிறது. விடை தரும் புதிய கண்ணோட்டம் பழைய உலகின் உணர்ச்சிகளை அழிப்பதிலும் தவறுவதில்லை. ஆம், கட்சிக்குள் வரும் புதியவர்கள் தங்களிடமிருக்கும் 'ஈரத்தையும், உணர்வையும்' வெட்டி எறிகிறார்கள். காரணம் அவை புதிய உலகிற்குத் தேவைப்படாத, சுயநலத்திலிருந்து எழும் அற்பவாத - மிகையுணர்ச்சிகள்.

இதை எப்படிப் புரிந்து கொள்வது? உயிரின் இயக்கத்தையும் அது நின்று போவதையும் மருத்துவ அறிவியலாகக் கற்றுத் தேறும் ஒரு மருத்துவர் அவரது மனைவி இறந்து போனால் வருந்துவாரா? வருந்துவார். உயிரின் அறிவுரீதியான விளக்கத்தைக் கற்றதனாலேயே அவர் வருந்தாமல் இருக்க மாட்டார். காரணம் அவரது மனைவியுடன் நெருக்கமான ஒரு வாழ்க்கை உறவு உள்ளது. எழுதப் படிக்கத் தெரியாத தருமபுரியின் கூலி விவசாயி, எலிக்கறி சாப்பிடும் தஞ்சையின் கூலி விவசாயிகளைக் கேள்விப்பட்டாலே வருத்தப்படுவார். இவருக்கு அறிவு ரீதியான விளக்கமோ, இதயத்தைத் தொடும் இலக்கியமோ தேவைப்படுவதில்லை. காரணம் கூலி விவசாயியாகச் சமூகத்தில் கொண்டிருக்கும் உறவு அந்தத் துயரத்தை எந்தப் பீடிகையுமில்லாமலேயே உணர்த்தி விடுகிறது.

இப்படிச் சமூகத்திலிருக்கும் பெரும்பான்மை மக்களுக்கு அரசியல் கல்வியின்றியே, அறிவு விளக்கமின்றியே சக மனிதனை நேசிக்கும் உணர்வு ஏதோ ஒரு வகையில் இருக்கத்தான் செய்கிறது. இதில் சுயநலம் சார்ந்த உறவு (குடும்பம், உறவினர்) பொருளாதார அடிப்படையிலிருப்பதால் நீடிக்கின்றது. அத்தகைய அடிப்படை ஏதுமற்ற பொதுநலம் சார்ந்த உணர்வு (இலக்கியம் மட்டும் படிப்பவர்களையும் உள்ளிட்டு) வெறும் அனுதாபம் என்ற அளவிலே விரைவில் நீர்த்தும் போகிறது. அரசியல் கல்வி - நடைமுறையற்ற சகல பிரிவினருக்கும் இதைத் தவிர்த்த உணர்வு ஏதும் கிடையாது.

ஆனால் ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்க்கையைத் துவக்கும் ஒருவர் இந்த இரண்டு அளவுகோல்களிலிருந்தும் வேறுபடுகிறார். இங்கே சுயநலம் சார்ந்த உணர்வு அழிவதையும், பொதுநலம் சார்ந்த உணர்வு திட்டமிட்டு முகிழ்வதையும் பார்க்க முடியும்.

வெளிநாடு சென்று பொருளீட்டுவான் என்பதற்காக, சில வருடங்கள் தன் மகனைப் பிரிந்து வாழச் சம்மதிக்கும் ஒரு தாய், அதே மகன் புரட்சிகர அமைப்பில் பணியாற்றுவதை விரும்புவதில்லை. அழுது அரற்றி அனுமதி மறுக்கும் அந்தத் தாயுடனான பழைய பாசம் இனியும் நீடிக்க முடியாது. உடன்பிறந்தோரை வரதட்சணை, சடங்கு, சாதி எனப் பிற்போக்குச் சங்கிலியுடன் மணம் செய்து கொடுக்கும் தந்தையுடன், கண்டிப்புடன் கூடிய அந்தப் பழைய மரியாதையை இனிமேலும் கொடுக்க முடியாது. பழைய அந்தஸ்தின் மூலம் கிடைத்த நண்பர்கள், கம்யூனிஸ்டு என்ற இந்தப் புதிய தகுதியை விரும்பாத போது அந்த நட்பு எப்படி நீடிக்க முடியும்? கந்து வட்டிக்கு விடும் தாய்மாமனேயானாலும் இனியும் ஒட்டி உறவாட முடியாது. பழைய வாழ்க்கை வழங்கியிருக்கும் இத்தகைய அன்பு, பாசம், நட்பு போன்ற உணர்ச்சிகளெல்லாம் புதிய வாழ்வின் செயலூக்கத்தில் நிச்சயம் வறண்டு போகும்.

அதேபோன்று முதல் வாழ்க்கையில் தோன்றியும் புரிந்துமிராத உணர்ச்சிகளெல்லாம் இந்த இரண்டாம் வாழ்க்கையில் புதிது புதிதாய்ப் பிறந்து வளரும். இன்று தாழ்த்தப்பட்டோருக்காகப் போராடும் ஒரு தோழர், அவர் தேவராக வாழ்ந்த நாட்களில் இதைக் கனவிலும் கருதியிருக்க மாட்டார். அதிகார வர்க்கத்தையும், காக்கிச் சட்டையையும் தைரியமாக எதிர்த்துப் போராடும் ஒரு தோழர், அவர் கூலி விவசாயியாக மட்டும் வாழ்ந்த காலத்தில் இவையெல்லாம் இயற்கைக்கு மாறானது என்றே நம்பியிருப்பார். மனைவியுடன் ஜனநாயக முறைப்படி வாழும் ஒரு தோழர் அவர் ஆணாதிக்கவாதியாக ஆட்சி நடத்திய நாட்களை நினைத்து இப்போது வெட்கப்படுவார். சிறைவாசம் அனுபவித்திருக்கும் பெண் தோழருக்கு அவரது பழைய அடிமைத்தன வாழ்க்கையிலிருந்து வெளியேறிய போராட்டம் இப்போதும் நம்பிக்கையளிக்கும்.

இப்படிச் சமூக வாழ்க்கையில் பழைய உணர்வுகள் நீர்த்துப் போய் புதிய உணர்வுகள் மலருகின்றன. கூடவே அரசியல் அரங்கிலும் புதிய கடமைகளுக்கேற்ற உணர்வுகள் பிறக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிசத்தை அறிவியல் ரீதியாகக் கற்பதன் மூலம் புரட்சி - சமூக மாற்றம் பற்றிய எளிமைப்படுத்தப்பட்ட சித்திரங்கள் மறைகின்றன. ராபின்ஹூட் பாணியிலான சாகசம், புரட்சி என்பது ஒரு ரம்மியமான மாலை நேர விருந்து போன்ற 'ரொமாண்டிக்' கற்பனைகள் விரைவிலேயே வெட்கத்துடன் விடை பெறுகின்றன. அதனால்தான் துன்பப்படுகின்ற மக்களைப் பார்த்து **ஏதாவது** செய்ய வேண்டும் என்ற இரக்க உணர்ச்சி மறைந்து **இன்னதுதான்** செய்ய வேண்டும் என்ற கடமை உணர்ச்சி பிறக்கின்றது. ஏழைகளைப் பார்த்து வெறு மனே இரக்கப்படும் பழைய உலகின் இலக்கியங்களும், திரைப் படங்களும் இனிமேலும் புதிய தோழர்களை உணர்ச்சிவசப்ப டுத்துவதில்லை. தன்னுடைய இயலாமை - அற்பவாதத்தையே தியாகமாக நினைக்கும் 'அழகி'யின் சண்முகமோ, இந்து மதவெ றியை மறைப்பதற்காகச் சோகங்கொள்ளும் 'பம்பாயின்' காதலர் களோ, ஒரு மாபெரும் வரலாற்றுக் காலத்தைத் தன்னுடைய நடுத்தர வர்க்கத்தின் குடும்பக் கண்ணோட்டத்தில் பார்க்கும் சாகேத ராமனின் (ஹேராம்) வேதனையோ நமது இதயத்திற்குள் இறங்குவதில்லை.

நம்மைத் தவிர முழு உலகமும் இத்தகைய காவியத் திரைப் படங்களின் கண்ணீரில் முழுகியபோது இந்த மிகையுணர்ச்சிக் கண்ணீரின் கிளிசரின் மோசடியை அகற்றிவிட்டு உண்மையான கண்களையும் கண்ணீரையும் நமக்கு உணர்த்தியது நாம் கற்றுக் கொண்ட கம்யூனிச அரசியல்தான்.

எனவே அரசியல் அறிவு உங்களின் பழைய உணர்ச்சி களைக் காவு கொள்வதில் கண்டிப்புடன் நடந்து கொள்கிறது; கூடவே, புதிய உணர்ச்சிகளை உருவாக்க இடையறாது போரா டுகிறது. புதிய தோழர்கள் பெறும் அறிவு விளக்கத்திற்கும், அது அழித்து உருவாக்கும் உணர்ச்சிகளுக்கும் இடையிலான இயங் கியல் உறவு இப்படித்தான் இருக்கிறது. ஆதலால் அரசியல் அறிவு உணர்ச்சியை வற்ற வைப்பதில்லை; உண்மையான ஊற்றைத் தோண்டிச் சுரக்க வைக்கின்றது; கண்ணீர்க் குளமாக்கு கிறது; இதுவரையிலும் அழாதவற்றுக்கும் அழவைக்கின்றது.

ஆயினும் இந்த உண்மையான உணர்ச்சி அவ்வளவு சீக்கிரம் ஏற்பட்டுவிடுவதில்லை. இதையே ''எல்லாவற்றிற்கும் விளக் கங்கள் அறிவுரீதியாக அறிந்து கொண்ட பிறகு நெஞ்சிலிருந்த ஈரம் வற்றி விடுகின்றது'' என்று வாசகர் சாக்ரடீஸ் தவறாகக் குறிப்பிடுகிறார். நீக்கமற நிரவியிருக்கும் பிற்போக்கான வாழ்க்கை மதிப்பீடுகளிலிருந்து வரும் ஒரு நபர், ஒரு தோழராக மாறுவதில் பல்வேறு சிக்கல்களைக் கடக்க வேண்டியிருக்கிறது.

முதலில் புதிய தோழர்கள் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அறிவுரீதியான விளக்கங்களை அறிந்து கொள்வதில்லை; அது சாத்தியமுமில்லை. ''முன்னரே தயாரிக்கப்பட்ட முடிவுகள் முழக் கங்கள் உதவியுடன் மார்க்சியத்தை அளவுக்கு மீறி எளிமைப்ப டுத்திக் கற்பதற்கு'' எதிராக லெனின் எப்போதும் எச்சரிக்கை செய்தார். நாம் கற்கும் முதல் விசயமே நமது பழைய உலகக் கண்ணோட்டம் தவறு என்பதைத்தான். அதனாலேயே நாம் உரு வாக்க விரும்பும் புதிய உலகைப் பற்றிய கண்ணோட்டத்தைக் கற்று விட்டோம் என்பதல்ல. அதற்கு அரசியல் அறிவு மட்டும் போதுமானதல்ல; செயலூக்கம் நிறைந்த நடைமுறைப் போராட்டம் தேவை. வேறு வார்த்தைகளில் சொல்வதாக இருந்தால், சமூகத்தை ஆய்வு செய்து வினையாற்றுவதற்கு நம்மிடம் அளிக்கப்பட்ட மிகச்சிறந்த வாளே மார்க்சிய - லெனி னிய ஆய்வு முறையாகும்; ஆயினும் அந்த வாளைத் திறமை யாகச் சுழற்றக் கற்றுக் கொள்வதில்தான் அதன் பலம் உறைந்தி ருக்கிறதேயொழிய, உறையில் போட்டு வைத்திருப்பதனால் அல்ல.

வெளிஉலகில் நாம் சந்திக்கும் எல்லாப் பிரச்சினைகளையும், அக உலகில் நாம் வரைந்து வைத்திருக்கும் புரட்சியுடன் இணைப்பது பற்றிய பிரச்சினை, கேள்வி, ஆய்வு, போராட் டங்கள் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உயிர் வாழ்வதன் அடிப்படை யாகும். இதிலிருந்து மாறுபடுகிறவர்களையே போலி கம்யூ னிஸ்டுகள் என்று அழைக்கிறோம். மேலும் கட்சியில் புதிதாக வரும் தோழர்களும் தங்களை இறுதி வரை கம்யூனிஸ்டாக வைத்திருப்பதன் பொருளும் மேற்கண்ட பிரச்சினையையும் போராட்டத்தையும் இறுதிவரை செய்வது என்பதே.

முக்கியமாக, இந்தப் போராட்டத்தில்தான் அவர்களது பழைய வர்க்கக் கழிவுகள் நீக்கப்பட்டு மறுவார்ப்பு செய்யப்படு கிறார்கள். அது 'நானேதான்' என்ற உறுதியான அகந்தையை அழிக்கிறது; சக தோழர்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் வரும் விமர்சனங்களைக் கண்டு அஞ்சும் கோழைத்தனத்தை ஒழிக்கிறது; தனது தவறுகளைத் தானே கண்டுபிடித்து ஏற்கும் வீரத்தைக் கொடுக்கிறது; கற்றுக் கொள்வதில் பணிவையும், கற்றுக் கொடுப்பதில் பொறுமையையும் உருவாக்குகிறது; அடக் குமுறைக்குப் பணியாத கம்பீரத்தைத் தருகிறது; மக்களுடன் இரண்டறக் கலக்கும் பழக்கத்தை ஏற்படுத்துகிறது.

இவையெல்லாம் ஓரிரு வாரங்களிலோ, மாதங்களிலோ, வருடங்களிலோ கற்றுக் கொள்ளும் பாடமல்ல. சாகும் வரை யிலும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டிய புரட்சியின் கடின மான பாடம். ஏனெனில் புரட்சியை நேசித்துக் கட்சியால் ஈர்க்கப் படும் தோழர்கள் உழைக்கும் மக்களையும் அப்படி ஈர்க்கின்ற வேலையே அவர்களது அரசியல் வேலையின் சாரமாக இருக் கின்றது.

கள்ளங்கபடமற்ற கூலி விவசாயிகளோ, அரசியல் அறியா மையிலிருக்கும் தொழிலாளிகளோ, கருத்தாதரவும் செயலின் மையும் ஒருங்கே கொண்ட நடுத்தர மக்களோ, புத்தம் புது மலர் களாக இருக்கும் மாணவர்களோ - இத்தகைய மக்கட் பிரிவின ரிடம் சென்று, ஒன்றி, வாழ்ந்து, கேட்டு, கற்று, இறுதியில் வென்று காட்டும் அந்தப் பாடம்தான் புதியவர்களைக் கம்யூ னிஸ்ட்டாக மாற்றிக் காட்டும். பழைய உலகின் உணர்ச்சிகள் சூழ வாழும் புதிய தோழர்கள் இந்தப் பாதையின் செங்குத்துச் சரிவில் களைப்படைவதும், சோர்வடைவதும் உண்டு. ஆரம் பத்தில் அவர்களிடமிருக்கும் உற்சாகமும், துடிப்பும், உணர்வும் இடையில் சற்று வறண்டு போவதன் காரணம் இதுதான். ஆயினும் இறுதியில் சிகரத்தின் உச்சியைத் தொடுவோம் என்பதால் இடையில் வரும் இந்தத் தடங்கல்களுக்கு அயர வேண்டியதில்லை. மீண்டும் மீண்டும் நடைமுறையில் ஈடுபட வேண்டும். இதைத் தவிர நமது இதயம் ஈரத்தைத் தக்கவைப்ப தற்கு வேறு குறுக்கு வழிகள் எதுவும் இல்லை.

ஆகவே இலக்கியம் ஏதும் தேவையில்லை என்கிறோமா? இல்லை. இன்றிருக்கும் பெரும்பான்மை கலை இலக்கியங்கள் பழைய உலகின் உணர்ச்சிகளோடு கட்டுண்டு கிடப்பவையே. நமது புதிய உலகின் உணர்ச்சிகளுக்கு உற்சாகமளிக்கும் இலக் கியங்கள் குறைவுதான். இருப்பினும் கிடைக்கும் எதனையும் படியுங்கள். அவை பழைய உலகம் பற்றிய உங்களின் விமரி சனப் பார்வையைக் கூர்மைப்படுத்த நிச்சயம் பயன்படும். அதுவும் உங்களின் அரசியல் கல்வி - போராட்ட நடைமு றையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அமைய முடியும்.

ஆம். இலக்கியங்களிலிருந்து உணர்வும், உற்சாகமும் தன்னி யல்பாய்ப் பிறக்க முடியாது. பழைய உலகின் இலக்கிய உணர்ச் சிகளை அறுத்துப் பார்த்து நிராகரிப்பதையும், புதிய உலகின் இலக்கியங்களைக் கண்டு கொண்டு உற்சாகம் அடைவதையும், உங்களின் அரசியல் வாழ்க்கைதான் தீர்மானிக்கின்றது.

**— ஆசிரியர் குழு**



படிப்பகம்

www.padippakam.com



# கதறுதடா கைத்தறி! கையாலாகாத அரசை தூக்கி எறி!

''உடுக்கை இழந்தவன் கைபோல'' என நட்பின் இலக்கணத்தை ஆடையின் முக்கியத்துவத்தோடு உருவகப்படுத்தி வரைந்தன வள்ளுவரின் கைகள். ஒரு பொழுது உணவைக் கூட இழந்து வாழ முடியும், உடையிழந்து வாழ முடியுமா உங்களால்? வாழ்க்கையின் எல்லாப் பொழுதுகளிலும் கூடவே வருகின்றன நெசவாளர்களின் கைகள். அந்தக் கைகளை விலக்கிவிட்டுக் கனவுகூடக் காணமுடிவதில்லை நம்மால்.

வெள்ளைப் புடவை கட்டிக் கொண்டு பேய் வந்ததாகவும், அரக்குகலர் பார்டர், மஞ்சள் கலர் புடவையில் மாரியம்மன் வந்ததாகவும் உங்கள் கனவுக் குறியிலும் நெசவாளர்களின் கை வண்ணம் நீங்காமல் வருகிறது.

பேய்களையும், பிணங்களையும் கூட அம்மணமாக அனுப்புவதில்லை நமது நாகரிகம்.

பிறந்தால் புதிதாய் ஒரு குட்டித் துணி, இறந்தால் புதிதாய் ஒரு கோடித் துணி, இப்படி உங்கள் பண்பாட்டைச் சுற்றி வரும் துணிகளுக்கு உள்ளே நெசவாளர்களின் கைகளிருப்பதை நீங்கள் அறிவீர்களா?

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று ஆண்டவன் புகழ்பாடும் அன்பர்களா நீங்கள்! நெசவாளர்களின் கைகள் அசையும் வரை உங்கள் ஆண்டவனே அசையாமல் அம்மணமாய் நிற்க வேண்டியிருந்தது தெரியுமா?

தான் பெற்ற பிள்ளை முருகன் கோபத்தால் தொலைந்தபோதுகூடக் குதிக்காத சிவபெருமான், தான் கட்ட வைத்திருந்த கோவணம் தொலைந்து போனபோது அமர்நீதி நாயனாரைப் படுத்தியபாட்டிலிருந்து அறியவில்லையா நீங்கள், அந்த ஆண்டவனே நெசவாளர்களின் கைகளுக்கு அடக்கம் என்பதை!

ஆம்! நெசவு வெறும் தொழில் மட்டுமல்ல, மக்களது மானம் பற்றியது, பண்பாடு பற்றியது, நாகரிகம் பற்றியது. அனைத்திற்கும்மேல், அணிபவர்களின் ஆசைக்கேற்ப வரலாறு நெடுக வளைந்து தளர்ந்துபோன ஆயிரக்கணக்கான நெசவாளர்களின் கைகளால் விளைந்த காவியம் அது.

மாட மாளிகையில் திரைச்சீலைகளாய்க் கிழிக்கப்பட்டன அந்தக் கைகள். அந்தப்புரத்து ஆசைநாயகிகளுக்காக முத்துக் கோர்க்க மொத்தக் குடும்பத்தின் கைகளும் வேலைச்சுமையில் முறிக்கப்பட்டன. மயிலிறகிலான வேலைப் பாடுகளுக்காகவும் சில வகை விலங்குகளின் ரோமத்தினாலான மயிராடைகளுக்காகவும் நாராய் மெலிந்து நடுங்கிய கைகள் எத்தனை?

மேட்டுக்குடி, சாமான்யன், உழைக்கும் மக்கள் இப்படி வர்க்கத்திற்கேற்ற மாதிரி, ரகங்களை உற்பத்தி செய்து கொடுத்த நெசவாளர்களின் கைகளுக்கு, இந்தச் சமுதாயம் கொடுத்திருக்கும் சன்மானம் கஞ்சிக்கலயம்.

''தொண்டி, முசிறி, கொற்கை இங்கிருந்தெல்லாம் அந்தக் காலத்திலேயே யவனர்களுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்தது எங்கள் நாடு'' என்று பெருமையில் பங்கு கொள்ளும் பெரியோர்களே, ''திருவில்லிப்புத்தூர், ராசிபுரம், நாமக்கல் இங்கெல்லாம் இந்தக் காலத்திலும் கஞ்சித் தொட்டியில் உயிர் நனைப்பவர்கள் நாங்கள்'' என்ற நெசவுத் தொழிலின் சிறுமையில் மட்டும் நீங்கள் சேர்த்தியில்லையோ!

''ஆடை இல்லாதவன் அரை மனிதன்'' என்று பழமொழி பேசும் பண்பாளர்களே, அந்த ஆடையை நெய்து தரும் நெசவாளர்களைப் பற்றிச் சிந்திக்காதவன் அடிப்படையில் மனிதனே இல்லை என்றால் என்ன தவறு?

''அறிஞரும் உளரோ! அறிஞரும் உளரோ!

வறுமைக்கு இரையாய் மக்களை விட்டிடும் அறிஞரும் உளரோ!''

— என்று கேள்வியெழுப்பினார் கவிமணி தேசிய விநாயகம் அவர்கள், இதோ இருக்கிறார்கள் என்கிறது நிகழ்காலம். இருப்பது மட்டுமல்ல, மக்களை வறுமையில் மாட்ட வைக்கத் திட்டம் தீட்டுவதே இந்த அறிஞர்களின் அன்றாட வேலையாகி விட்டது. டாக்டர் கலைஞர், டாக்டர் அம்மா, டாக்டர் அய்யா, அறிவியல் விஞ்ஞானிகள், பேராசிரிய முனைவர்கள் இப்படிப் படித்த அறிஞர் பலரும் சேர்ந்துதான் நாட்டை, தொழிலை பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு இழுத்து விடும் அறிஞர்களாக இருக்கிறார்கள்.

எழுத்து வேறு, நான் வேறு, படிப்பு வேறு, நடத்தை வேறு என அறிஞர்கள் அமோக விளைச்சல் பார்க்கையில், பிழைக்க வழிதேடும் நெசவாளர்களோ கை மரமும், பட மரமும், விழுதும் எங்கள் கைத்தறிக்கான வெறும் வியாபாரக் கருவிகளல்ல, எங்கள் உயிரோடு கலந்த ஒன்று என்று உடல் உறுப்புக்களை விற்றாலும் கருவிகளை விற்கத் தயங்குகிறார்கள். வாழ்வும், தொழிலும் வேறல்ல என அடித்துச் சொல்கின்றன அவர்களின் கைகள்.

> **''எங்கள் குழந்தைகளை ஆறாம் வகுப்போடு நிறுத்தி விட்டு விசைத்தறி முதலாளிகளிடம் 2 வருடத்திற்கு ரூபாய் 2,000, 5,000 என விலைபேசி விற்றுவிடுவோம். அரசாங்கமோ குழந்தை உழைப்பு என கேஸ் போடுகிறது''**


படிப்பகம்

www.padippakam.com

வேண்டுமானால் பாருங்கள் அவர்களது உழைப்பின் உன்னதத்தை — பஞ்சைப் பிரித்தெடுக்கும் பக்குவமான வேலையிலே விழிகள் இரண்டுமே வெளிறிய பஞ்சாகும். நூலை முறுக்கேற்றும் நுண்ணிய வேலைப் பொழுதில் நூலுக்காவது கஞ்சி கிடைக்கும். நெசவாளியின் உள்ளுக்கோ வெறும் தேத்தண்ணி போய் உழைப்பின் போக்கில் உடம்பும் ஒரு நூலாகும். கருவிக்கு மசை போட்டு இயக்குமந்த நெசவாளிக்கோ கை எலும்பு, கழுத்தெலும்பு தேய்ந்தாலும் இருமல் வந்து 'இரு சற்றே' என்றாலும் எதற்கும் நிற்காது. நூலிருக்கும் வரை தறியில் அலைபாயும் அவர்களது வாழ்க்கை.

எந்தப் புதுத் துணியைப் பார்த்தாலும் இது என்ன ரகம் என்று தொட்டு விசாரிக்கும் உங்கள் கைகளுக்குத் தெரியாதா, அந்தச் சின்னச் சின்ன இழைகளுக்குப் பின்னே பின்னிக் கிடக்கும் நெசவாளர்களின் ரகம் ரகமான கைகளை!


உங்களது உடம்பில் உறுத்தாத ரகத்தைத் தயாரிக்க பருத்தி போட்டு வியாபாரக் கொள்ளைக்கும், கந்து வட்டித் தொல்லைக்கும் ஈடுகொடுக்க முடியாமல் கடைசியில் பூச்சி மருந்து குடித்துச் சாகும் அந்த ஆந்திரத்துப் பருத்தி விவசாயிகளின் கைகள் உங்களுக்குச் சொந்தமில்லையா?

அதிகவிலை, அதிக மகசூல் என்று மான்சான்டோவின் பன்னாட்டுப் பருத்தி விதை விழுந்து படுகாயமான தேனி, கோவை, தருமபுரி விவசாயிகளின் நீலம் பாரித்த கைகள் ஏமாந்த ரகம் என்றால், நம் மண்ணை மலடாக்கும் அன்னிய விதைகளை எதிர்த்துக் கிளம்பாத நீங்கள் எந்த ரகம்?

உங்களால் முடியாதெனில் சிறுநீரகக் கொள்ளையர்களிடம் கேட்டுப் பாருங்கள். நெசவாளர்களை அடையாளம் காட்டும் அவர்களது கைகள்.

ஈரோடு, பவானி, நெசவாளர்களின் அந்த அறுவைச் சிகிச்சைத் தழும்புகள் கூட அடையாளம் காட்டுகின்றன. இந்த அநியாயத்தை எதிர்த்துக் கேட்காத நீங்களும் உள் கை என்று.

வேறு வேறு ரகத்தை விசாரிப்பவர்களல்லவா நீங்கள்? இதோ திருப்பூர் சாயப் பட்டறையைப் பாருங்கள். உங்கள் நூலின் வண்ணக் கவர்ச்சிக்காகத் தங்களது தோலின் நிறத்தை இழந்த கைகளின் ரகத்தை. சாயத் தொட்டியில் முழுகி முழுகித் தொழுநோயாளியின் கைகளைப் போல உருமாறிய அந்தக் கைகள் மழுங்கிப் போன உங்கள் மனித நேயத்தை அடையாளம் காட்டுகின்றன.



வயிற்றுக் குழந்தை புரளும்போதே இவன் படிச்சு அய்.ஏ.எஸ். ஆவான் பாரென்று பூரிக்கும் ரகமா நீங்கள்? வயிற்றில் குழந்தை உதைக்கும் போதும், இது தறியடிக்க ஆகும் எனும் நெசவாளர்களின் கற்பனையே நிரூபிக்கின்றன. படிக்கப் போக முடியாமல் பாவு போடும் வளர்ந்த பிள்ளைகளின் கைகள்.

''இந்த வயசுல சத்தா தின்னு, நல்ல ஒய்வெடுத்தாதான் மகப்பேறு காலத்துல மகளுக்குத் தெம்பு இருக்கும்'' என்று உங்கள் ஆசை மகளைப் பார்த்துப் பார்த்து வளர்க்கும் ரகமா நீங்கள்?

உடம்பே ஒரு தறிக்கட்டை, கைகள் இடம் மாறும், கால்கள் ஒத்திசையும், குனிந்து நிமிர்ந்து இடுப்பெலும்பும் இடம்மாறும், இத்தனைக்கும் வெறும் டீத்தண்ணியே அவள் உழைப்புக்கு ஆதாரம். ஒவ்வொரு கல்யாணப் புடவையின் அவசர ஆர்டருக்கும் அவள் இளமை சேதாரம். தறிச்சூடு தாங்காமல் நாளெல்லாம் வெள்ளைப்படும். இரவில் தலைசாய்த்து இழை, இழையாய்ப் பின்னும் அவள் இளமைக் கனவுகளைப் பாதியிலேயே சொசைட்டிலோன் அறுத்து விடும்.

காலமெல்லாம் பாடுபடும் அவள் கையைப் பார்த்துச் சொல்லுங்கள் அது காந்தள் மலரா? கருவேலம் முள்ளா? உங்கள் நெஞ்சைக் குத்தும் இந்தக் கடின உழைப்பை நிறுத்தச் சொல்லவில்லை அவர்கள். இதுவாவது தடையில்லாமல் தொடர அரசின் தயவைக் கேட்கின்றன அந்தக் கைகள்.

''கைத்தறித் தொழிலாளர்களின் நிலை நத்தை அதன் கூட்டுக்குள் பிணைக்கப்பட்டிருப்பதைப் போல... உற்பத்திச்



படிப்பகம்

www.padippakam.com

சாதனங்களுடன் இறுக்கிப் பிணைக்கப் பட்டிருக்கிறது'' என்று விவரித்தார் கார்ல் மார்க்ஸ்.

''எங்களால் இந்தத் தொழிலை விட்டு வேறு எதற்கும் போக முடியாது; பாவுக் கூலி கொடுத்த கையால் சாவுக் கூலியை யாவது கொடுங்கள்'' என்று கலங்கு கிறார்கள் கைத்தறி நெசவாளர்கள். கள வாணி ஆளும் வர்க்கமோ ''ஏன் கைத்தறியைக் கட்டிக் கொண்டு அழுகி றீர்கள். பேசாமல் விசைத்தறி அல்லது வேறு தொழிலுக்குப் போங்கள்'' என்று விரட்டுகிறது.

இதுவும் முன்னைவிட முதலாளிகள் மூர்க்கமாக சுரண்டவே வழிவகுக்கும் என்று மூலதனம் நூலில் முன்னறிவிக் கிறார் கார்ல் மார்க்ஸ்'' முதிராத மானுடப் பிஞ்சுகளை உபரி மதிப்பை உற்பத்தி செய்யும் வெறும் இயந்திரமாகச் செயற் கையான முறையில் மாற்றுவதால் மனம் பாழ்பட்டுச் சீரழிவு உண்டாகிறது'' என்று சினந்து கூறினார் அவர்.

ஆம், அதுதான் நாங்கள் அனுப வத்தில் கண்ட உண்மை என்கிறார்கள் நாமக்கல் மாவட்ட அத்தனூர் கைத்தறி நெசவாளர்கள்.

''கைத்தறி ரகங்களையும், விசைத்தறி முதலாளிகள் எடுத்துக் கொண்டதால் எங்களுக்குப் பெரும் பாதிப்பு. எங்கள் குழந்தைகளை ஆறாம் வகுப்போடு நிறுத்தி விட்டு விசைத்தறி முதலாளிக ளிடம் 2 வருடத்திற்கு ரூபாய் 2,000, 5,000 என விலைபேசி விற்று விடுவோம். அரசாங்கமோ குழந்தை உழைப்பு என கேஸ் போடுகிறது'' என்கி றார்கள்.

இது ஏதோ திடீரென வந்த நெருக்க டியா? இல்லை 1947-இல் ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே என்று காந்தியின் கைராட்டை மறைவில் வந்த போலிச் சுதந்திரம் இப்போது கஞ்சித் தொட்டியில் விழுந்து எழுந்து சாயம் வெளுத்து நிற்கி றது.

கைராட்டை, கதர்ச் சட்டை என்று மேலாடை நமக்கு. நாட்டின் இறை யாண்மை, வர்த்தக உரிமை என்று நாட்டின் உள்ளாடையை இங்கிலாந்து முதலாளிகளுக்குக் காந்தி உருவிக் கொடுத்ததிலிருந்து ஆரம்பமாகிறது இந்த நெருக்கடி.

சாதாரண குமாஸ்தாவாக இருந்த அம்பானி இந்திரா ஆட்சிக் காலத்தில் குறிப்பிட்ட ரகங்களைத் தனது மில் மட்டுமே நெய்து கொள்ளும்படி மொத்த நாட்டையுமே தறியில் ஓட்டிக் கொண்ட போது, கருவிலே தறியுடையோரான நெசவாளர்கள் கஞ்சித் தொட்டிப் பக்கம் தள்ளப்பட்ட கொடுமைக்கு வேறென்ன ஆதாரம் வேண்டும்?

''இந்தியாவின் டாக்கா மஸ்லி னையும், கொரமண்டல் காலிக்கோ வையும் விஞ்ச வேறு எதனாலும் முடி யாது. இந்தியாவை இங்கிலாந்துத் துணி முதலாளிகள் வேட்டையாடிய கொடூரம்'' என்று இந்திய நெசவாளர்களின் உழைப்புத் திறனைப் பாராட்டி, இங்கி லாந்துத் துணி முதலாளிகளின் பருத்தி ஏற்றுமதிக் கொள்கையால் இந்தியா சீரழிக்கப்பட்டதைச் சாடினார் கார்ல் மார்க்ஸ்.

இந்நாட்டு ஆட்சியாளர்களோ தங்க ளுக்கே உரிய தரகு முதலாளியப் பாசத் துடன் ''எதற்கு அந்தக் காலத்து கைத்தறி? பேசாமல் ஆலன்சோலியின் அமெரிக்கத் துணிகளை அணியுங்கள்'' என்று பன்னாட்டுக் கம்பெனிகளின் பனியன் ஜட்டி விளம்பர மாடலாக பாரத மாதா வையே ஆக்கி விட்டார்கள். இவர்களது உள்நோக்கமும் இதுதான்.

கைத்தறியை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட சத்யம் கமிட்டியோ கிருஷ்ண பரமாத்மாவைப் போன்றது. பாஞ்சாலிக்கு ஆடை தருவதாகப் பாசாங்கு செய்து கொண்டே, கோபியர் களின் இடுப்புத் துணியை உருவிய கதை போல கைத்தறியை நிர்வாணமாக்கும் வேலையைக் கச்சிதமாகச் செய்து விட்டது. கோயில்களில் கந்தனும் கடம் பனும் கூடக் கைத்தறிக் கோவணத்தைக் கைவிட்டு ஹைடெக் கோவணத்திற்கு மாறியதே கண்ட பலன்.

''எங்களுக்குத் தேவை இலவச அரிசி இல்லை, உழைப்பதற்கு வேலை'' என்கி றார்கள் கைத்தறி நெசவாளர்கள்.

கஞ்சித் தொட்டிகளைத் திறந்ததன் மூலம் எங்கள் பிட்சா கார்னர்களுக்குக் கௌரவம் குறைந்து விட்டது'' எனப் பாய்கிறார்கள். ''மான்யம் கொடுத்து, இல வச வேட்டி சேலை கொடுத்து மக்களைக் கெடுத்ததுதான் இந்த நிலைக்கு காரணம்'' என்று எரிகிற வீட்டில் பிடுங்கிய வரை ஆதாயம் பார்க்கிறது இந்தியா டுடே தரகுக் குரல்.

பதினான்காம் லூயியின் பட்டத்தரசி ''ரொட்டி இல்லையென்றால் ஏழைகள் கேக்கைச் சாப்பிட வேண்டியதுதானே?'' என்று வக்கிரமொழிகளை உதிர்த் தாளாம். அவளின் இந்தியப் பங்காளி ஜெயாவோ ஒரு படி மேலே போய் ''முட்டைப் பிரியாணி சாப்பிடுங் களேன்'' என்று வக்கிரத்தை வாரிக் கொட்டுகிறார்.

நாட்டைக் காலனியாக்கும் ஆட்சியா ளர்களின் அடுத்தடுத்த திட்டங்களால் கைத்தறியின் இடத்தை விசைத்தறி பிடித்துக் கொண்டது. விசைத்தறியின் இடத்தைத் தரகு முதலாளிகளின் பெரும் மில்கள் பிடித்துக் கொண்டன. இவைகள னைத்திற்கும் சேர்த்துப் பன்னாட்டு முத லாளிகள் பாடை கட்ட ஆரம்பித்து விட்டார்கள். இவைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் நடுத்தர வர்க்கத்தின் இடத்தையோ இப்போது விஜய் டி.வி. பிடித்து விட்டது.

நடுநிலைச் செய்தி என்ற பெயரில் ''நெசவாளர் பிரச்சினையை அனைத்துக் கட்சிகளும் கையிலெடுத்து அரசிய லாக்கி விட்டன'' என்று ஒப்பாரி வைக்கி றது விஜய் டி.வி. களத்தில் போராடும் நெசவாளர்களின் குரலோ ''எங்கள் பிரச் சினையை எல்லோரும் சேர்ந்து அரசிய லாக்குங்கள்'' என்று ஆடைகட்டி மானத் தோடு வாழும் அனைவரையும் அறை கூவி அழைக்கிறது.

இந்த போராட்டத்தின் நெசவில் நீங்களும் ஒரு இழையாய் இணைந்து பாருங்கள். ஒரு புதிய ரகமாய் நீங்களும் கூட நெய்யப்பட்டு விடுவீர்கள்.

● துரை. சண்முகம்


**ம.க.இ.க. அரசியல் உரைப் பேழைகள் மறு வெளியீடு**

**1. கல்விக் கொள்கையைத் தீர்மானிப்பது யார்?**
— பேரா. சிவக்குமார் - ரூ. 30.00

**2. நீதிமன்றமல்ல போராட்டமே தீர்வு**
— வழக்குரைஞர் பாலன் - ரூ. 30.00

★ 2001 கோவை - மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டில் ஆற்றப்பட்ட உரை கள். கல்வித் துறையும், நீதித்துறையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஏற்ப மாற்றப்படுவதையும், இருக்கும் சொற்ப உரிமை - சலுகைகள் பறி போவதையும் அம்பலப்படுத்தும் முக் கியமான உரைகள். இவ்விரு பேழை களையும், இதர பாடல், பேச்சு ஒலிப் பேழைகளும் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே, அசோக்நகர்,
சென்னை-600 083.

தபால் செலவு விவரம்:
1 முதல் 5 பேழைகள் வரை தபால் செலவு ரூ. 17 ஆகும். 5 முதல் 10 பேழைகள் வரை ரூ. 34 ஆகும். பதிவுத் தபால் செலவு கூடுதலாக ரூ. 15 அனுப்ப வேண்டும்.




படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கம் தொடர்ச்சி....

## உலக மயத்தை எதிர்த்து - ஒரு நாட்டுப்புற வீரன்

ஜோஸ்பொவே, ஒரு பிரெஞ்சு விவசாயி 'பைசான் விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பில்' உலகமயத்தை எதிர்த்துப் போராடி வருபவர். கடந்த மாதம் அமெரிக்க மெக்டொனால்டு ஃபாஸ்ட் ஃபுட் உணவு விடுதியைத் தாக்கிச் சூறைவிட்டார். மூன்று மாதச் சிறை; எல்லா மேல் முறையீடுகளும் மறுக்கப்பட்டு விட்டன; ழாக்சிராக் மீண்டும் குடியரசுத் தலைவராக வென்ற பிறகு, நல்லெண்ண முறையில் சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டது; ஆனால் ஜோஸுக்கு அது மறுக்கப்பட்டது. காரணம், அவர் கலகம் செய்தார் என்பது.

பிரான்சின் பாரம்பரியமான தேசியப் பெருமிதத்தைக் காப்பாற்ற ஜோஸ் கலகம் செய்தார், அது பிறப்புரிமை என்று ஏராளமான பிரெஞ்சு மக்கள் அவருக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். முதலில் அமெரிக்காவின் மிக்கி மவுஸ், டொனால்டு டக் போன்ற கார்ட்டூன் படங்களை பிரான்சுக்குள் இறக்கிவிட்டு மக்களின் மூளை - இதயத்தைப் பிடித்த பிறகு மெள்ள தன் சந்தைச் சரக்குகளை அவிழ்த்துள்ளது அமெரிக்கா. ''நம் நாட்டுப் பாரம்பரியப் பழங்கதைகளைக் காப்பாற்றுவோம்'' என்று அப்போது கலைஞர்கள் போராடினார்கள்; இப்போது தங்கள் வாழ்க்கையின் அடித் தளத்தில் கை வைத்துவிட்ட அமெரிக்காவுக்கு எதிராக விவசாயிகள் போராடுகிறார்கள்.

ஜோஸ் பொவேயின் வழியில் - இந்தியா மறுகாலனியாவதற்கெதிரான போராட்டத்தில் விவசாயிகளைத் திரட்டி கலகங்களை நடத்துவோம்!

***

## சுரங்க வீரர்கள்

உலகெங்கும் ஆழ்ந்த பூமிக்குள் சுரங்கத்தில் சென்று கனிவளங்களை வெட்டி எடுக்கும் தொழிலாளிகள் உழைக்கும் போதே பணி விபத்துக்களில் சிக்கி உயிர் இழக்கிறார்கள். அதற்குக் காரணம் பாதுகாப்பற்ற பணி நிலைமைகள். ஆனால் பன்னாட்டுக் கம்பெனிகளின் பேராசை, அதிகாரிகளின் அலட்சியம் ஆகியவற்றால் உயிரிழந்தோர் பல லட்சம் பேர். அமெரிக்காவில் பென்சில்வானியா பகுதியில் ஜூலை மாதம் நடந்த 'சுரங்க விபத்து' கம்பெனியின் அலட்சியத்தையும், தொழிலாளிகளின் புத்திக் கூர்மையையும் ஒன்று சேரத் தெரிவித்துள்ளது.

பூமிக்குக் கீழே 300 அடி ஆழத்தில் அருகாமையில் கைவிடப்பட்ட சுரங்கச் சுவரை தொழிலாளிகள் இடித்துவிட்டார்கள். கைவசமிருந்த வரை படங்களில் மோதும் 300 அடிக்கு அப்பால்தான் அந்தச் சுவர் வரும் என்று தவறாக வரைந்திருந்தார்கள். முழுக்க முழுக்க அதிகாரிகளின் மோசடி - ஊழல்தான் 'விபத்து'க்குக் காரணம். இந்தியாவில் சாஸ்நலா சுரங்கத்தில் - ஜப்பானுக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வதற்கான காலக் கெடு நெருங்கிய போது, தொழிலாளிகளின் எச்சரிக்கையையும் அலட்சியம் செய்து சுரங்கம் தோண்ட நிர்ப்பந்திக்கப்பட்டதால் 'விபத்து' ஏற்பட்டது. 470 தொழிலாளிகள் உயிரிழந்தனர். சாஸ்நலாவிலும் சரி, பென்சில்வானியாவிலும் சரி கம்பெனியின் லாபவெறிதான் 'விபத்து'க்குக் காரணம். அவை விபத்து அல்ல; கொலைகள்.

பென்சில்வானியாவில் சிக்கிக் கொண்டவர்கள் 9 பேர். பூமி வாயிலில் 3 நாட்கள் ஓய்வே இல்லாமல் போராடி அந்த ஒன்பது பேரையும் காப்பாற்றிய தொழிலாளிகள் பாராட்டுக்குரியவர்கள்; சுரங்கத்தின் அருகேயே துளைப்பான் (Driller) வைத்துக் கொள்ளாத பொறுப்பற்ற நிர்வாகம் மேற்கு வர்ஜீனியாவிலிருந்து அதைத் தருவிக்க 20 மணிநேரம் ஆகியிருக்கிறது. அந்தத் தாமதத்தால் 9 பேரும் இறந்திருக்கக் கூடும்.

அந்த அற்புதமான 9 பேர் செய்த செயல்கள் பற்றி அதே ஷிப்டின் மற்ற தொழிலாளர்கள் விவரித்தார்கள். ''6000 கோடி லிட்டர் தண்ணீர் பிய்த்துக் கொண்டு உள்ளே வந்தது. தண்ணீர் வருகிறது என்றவுடன் ஓயாது குரல் கொடுத்து மற்றவர்களைத் தப்பித்துக் கொள்ளுமாறு எச்சரிக்கை செய்தவர்கள் இந்த 9 பேர் தான். அவர்கள் இல்லையானால் நூற்றுக் கணக்கில் செத்த பிணங்கள்தான் வெளியே வந்திருக்கும் - அவர்களே ஹீரோக்கள்...''

அவர்கள் வெளியே வந்ததும் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். கரேலென்று கரி படர்ந்த முகத்தில் வெள்ளைப் பல் தெரியச் சிரித்தவாறு அவர்கள் வந்தார்கள். சுற்றிலும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் குடும்பத்துடன் வந்திருந்து ஆடிப்பாடி அந்த வீரர்களுக்கு வாழ்த்து கூறினார்கள். வருவதை முன் அறிந்து சொல்லி எச்சரித்த அந்த 9 தொழிலாளிகளே வீரர்கள் - வீரர்களை வேறெப்படி வாழ்த்த முடியும்?

***

## காங்கிரசுக் கொடியும் காவிதானோ?

நீண்ட கால நோக்கில் கல்வியைக் காவிமயமாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி தான் ஆட்சியில் இல்லாத மத்தியப் பிரதேசத்திலும் கை வைத்திருக்கிறது.

1970-களில் டெல்லியில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தைப் புதிய முறை உயர்கல்விக்கான சோதனைக் களமாகத் தொடங்கிய கல்வித்துறை, தொடர்ந்து மத்தியப் பிரதேசத்தில் மற்றொரு சோதனை முயற்சியைத் தொடங்கினார்கள்.

ஹோசங்காபாத்தில் தொடங்கப்பட்ட இக்கல்வி நிறுவனத்தின் பெயர் ஹோசங்காபாத் அறிவியல் கல்வித் திட்டம் (HSTP). 1972-இல் தொடங்கப்பட்ட இத்திட்டம் 2001-க்குள் 15 மாவட்டங்களில் 1000 பள்ளிகளாக விரிவடைந்தது; 1,00,000 ஒரு லட்சம் மாணவர்கள் படித்தனர்; பெருவாரியாகப் பயன் அடைந்தவர்கள் மலைவாழ், தாழ்த்தப்பட்ட மக்கள். கடந்த 30 ஆண்டுகளில் மகிழ்ச்சி துள்ளிய பள்ளிகளாக நடைபெற்ற இத்திட்டத்திற்கு 'ஏகலைவன் திட்டம்' என்று பெயர் மாற்றமும் செய்தார்கள்.

மத்தியப் பிரதேசத்தில் ஒரு சுற்று சுந்தர்லால் பட்வா என்ற பா.ஜ.க. முதலமைச்சரின் ஆட்சி வந்தபோது, மிகக் கவனமாக 'ஏகலைவன் திட்டத்'திற்கு நிதியை நிறுத்திவிட்டார். அடுத்த தேர்தலில், பாப்ரி மசூதி இடிப்பைத் தொடர்ந்து பா.ஜ.க. மண்ணைக் கவ்வியது; திட்டத்திற்கு மீண்டும் உயிர் வந்தது.

அண்மையில் மாவட்ட திட்டக்குழு கூடியபோது உள்ளூர் பா.ஜ.க. எம்.எல்.ஏ. கூட்டத்தில் பார்வையாளராக வந்தார்; 'இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடலாம்' என்று அறிவித்தார்; கூட்டத்துக்கு வந்திருந்த காங்கிரசின் நிதியமைச்சரோ எந்த முன் விவாதமும் இல்லாமல் முடிவாக அதை ஏற்று அறிவித்து விட்டார். மாநிலக் கல்வி ஆலோசனைக் குழுவுக்குக் கூடப் பரிந்துரைக்காமல் ஏகலைவன் திட்டம் கை கழுவப்பட்டது.

பா.ஜ.க.வும், மத்தியப்பிரதேசக் காங்கிரசும் சேர்ந்து கொண்டு ஏகலைவனின் கட்டைவிரலை இரண்டாவது முறை வெட்டி எறிந்துவிட்டார்கள்.


***

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3, ஜெகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

THIYA KALACHARAM
MIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER No: 42647/87
Regd. No: TN/Chief PMG - 303 / 2002

# எலிக்கறியும்
# பிட்சா கார்னரும்

*துரை. சண்முகம்*



..ங்காத பசிக்கொடுமை
ம்புலன்களையும் ஏங்கவைத்து
வமானப்படுத்தி விடுகிறது.

பறொரு பக்கமோ...
லைகிறார்கள் சிலர்.

றலோ மெக்டொனால்டு
லோ பிட்சா கார்னர்
லோ சைனிஸ் கார்னர்..."

ப்பிட்டு முடித்தவுடனேயே மீண்டும்
வறுப்பு ஆரம்பித்து விடுகிறது
வர்களுக்கு.

ச... வெரைட்டியே கிடையாதா?
ங்கர் பிஷ், எறா கட்லெட்,
க்கன் கட்லெட், ஜிஞ்சர் பிஷ்,
பரத்னா தோசை, பிரைட் இட்லி...

புதுசா வேற ஒண்ணுமே கிடையாதா!
சே, என்ன நாடு இது, என்ன ஊரு இது!
இந்த நாடே வேஸ்ட்"
- நியாயம் கேட்கிறார்கள்
ருசிப்பஞ்சக்காரர்கள்.

தின்பதற்கு ஏதும் இல்லாத போதும்
புள்ள எப்படி இளச்சிடுச்சி பாரு
என்பது போல
"பூமி எப்படி இளச்சிடுச்சி பாரு" என்று
வெடித்துக் கிடக்கும் விளைநிலங்களில்
இதயத்தை நட்டு வைக்கிறார்கள்
விவசாயிகள்.

உண்பதற்கு ஏதுமற்று
பற்கள் - பழம் என நினைத்து
உதடுகளையே கடித்துவிடும்
பஞ்சகாலம்.

புற்றரிசி, புல்லரிசி
சாணக்கிழங்கு, முருங்கை
நத்தை, மட்டி, ஈசல்...

எதிலும் பசியடங்காமல்
எலிக்கறி வரை திண்டாடியும்
எப்போதும்
நாட்டைத் திட்டுவதில்லை
மக்கள்.



படிப்பகம்